16-31 மார்ச் 2001

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்





காசுமீர்: ''சமாதானக் கொலைகள்''



நவீன விவசாயமா? நச்சுக் காளானா?




அரசியல் ரவுடிகளின் கொட்டம்

படிப்பகம்

www.padippakam.com




*ஒழிக அமெரிக்க மோகம்!* *ஓங்குக நாட்டுப்பற்று!!*

**அமெரிக்காவுக்கு நாட்டை அடிமையாக்காதே!**

## விவசாயிகள், தொழிலாளர்கள், தேசிய முதலாளிகளின்

# மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாடு

**கருத்தரங்கம்:**
பகத்சிங் திடல், கணபதி.
(கணபதி பேருந்து நிலையம் எதிரில்)

**பொதுக்கூட்டம்:**
சிவானந்தா காலனி பேருந்து நிலையம்

## சிறப்புரையாற்றுவோர்

★ **திரு. மார்க்கண்டன்**
முன்னாள் துணை வேந்தர்,
காந்தி-கிராமியப் பல்கலைக்கழகம்.

★ **திரு. எம். ஆறுமுகம்**
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்,
தலைவர், கோவை மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்.

★ **திரு. க. சந்தானம்**
பத்திரிக்கையாளர்,.
சென்னை.

★ **திரு. டி.ஏ. கிருஷ்ணசாமி கவுண்டர்**
தலைவர்,
தென்னிந்திய தென்னை சாகுபடியாளர் சங்கம்,
பொள்ளாச்சி.

★ **திரு. த. வெள்ளையன்**
தலைவர்,
அனைத்து வணிகர் சங்கங்களின் பேரவை,
தமிழ்நாடு.

★ **திரு. சி.எச். வெங்கடாச்சலம்**
அகில இந்திய செயலாளர்,
அகில இந்திய வங்கி ஊழியர்கள் சங்கம்

★ **திரு. அசோக் ராவ்**
தலைமைச் செயலர்,
அகில இந்திய பொதுத்துறை
அதிகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பு,
புதுடெல்லி.

★ **திரு. கல்லாடா மணி**
பொதுச் செயலர்,
நீலகிரி மாவட்ட விவசாயிகள் மற்றும்
விவசாயத் தொழிலாளர் நலச் சங்கம், நீலகிரி.

மற்றும் பலர்

*நாட்டுப் பற்றாளர்களே! அணிதிரண்டு வாரீர்!*

**ம.க.இ.க - வி.வி.மு - பு.மா.இ.மு - பு.ஜ.தொ.மு.**



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 16

**இதழ் 8-9**

1 மார்ச் 2001 - 31 மார்ச் 2001

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 120.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 18**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**



**புதிய ஜனநாயகம்**
**அஞ்சல் பெட்டி எண்: 6015,**
**அசோக் நகர்,**
**சென்னை - 600 083.**


தமிழகத் தேர்தல்:

## அழுகி நாறும் கூட்டணி அரசியல்

'தமிழினப் போராளி', 'இனமானக் காவலர்', 'டாக்டர் ஐயா' இராமதாசு மற்றும் டாக்டர் இரா. அன்புமணி குடும்பத்தின் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி, பாரதீய ஜனதா - தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து 'புரட்சித் தலைவி', 'டாக்டர்' (செல்வி) ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. - காங்கிரசுகள் - போலிக் கம்யூனிஸ்டுகள் அடங்கிய மதச்சார்பற்ற கூட்டணிக்கு அணிமாறியதன் மூலம் தமிழ்நாட்டு அரசியலை அனல் பறக்கச் செய்துவிட்டது. நல்ல காலம், கோடைக்கு முன்பே இது நடந்துவிட்டது. இல்லையென்றால் தமிழ்நாட்டு மக்கள் சூடு தாங்காமல் வெம்பிப் போயிருப்பார்கள்.

'டாக்டர் ஐயா'வும் 'டாக்டர் அம்மா'வும் நல்ல இணைதான். இவர்கள் இணை சேர்ந்தது குறித்து தமிழின மக்கள் நன்றி சொல்ல வேண்டும்! எதற்காக? பணபலம் இருந்தால் உச்ச - உயர் நீதிமன்ற நீதிபதிகள் உட்பட யாரையும் விலைக்கு வாங்கிவிட முடியும் என்று நிரூபித்தார், ஜெயலலிதா. சாதி பலம் இருந்தால் போதும், ஜெயலலிதாவையே பேரம் பேசி விடலாம் என்று நிரூபித்துவிட்டார், இராமதாசு. அது மட்டுமல்ல; நாடாளுமன்ற ஜனநாயகத்தின் யோக்கியதை இவ்வளவுதான் என்பதை ஜெயலலிதாவுக்கு அடுத்து, இராமதாசும் தமிழ்நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டி விட்டார்.

தமிழ்நாட்டு அரசியல் நோக்கர்களைப் பொருத்தவரை, இராமதாசு கட்சி அணி மாறுவது ஒன்றும் வியப்புக்குரியதல்ல, வாழப்பாடி - இராமதாசு மோதல் தொடங்கியதில் இருந்தே இப்படி ஏதாவது நடக்கும் என்பது எதிர்பார்த்ததுதான். கொள்ளையடித்த பணத்தைப் பகிர்ந்து கொள்வதிலும், வன்னிய சாதி மக்களின் ஆதரவை யார் வளைத்துக் கொள்வது என்பதிலும் பல மாதங்களாகவே அவர்களிடையே நாய்ச் சண்டை நடந்து வருகிறது. இருவருமே ஒருவருக்கொருவர் துரோகம் செய்வதையும் ஒருவரை ஒருவர் ஒழித்துக் கட்டுவதையும் குறிவைத்து அரசியல் நடத்துகின்றனர்.

தனக்கும் வாழப்பாடிக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகளை(!) கூட்டணித் தலைவரான கருணாநிதி தீர்த்து வைக்கவில்லை என்பதில் இருந்து, பா.ம.க.வை ஒழித்துக் கட்டுவதற்காக தி.மு.க.வே வாழப்பாடியையும் திருமாவளவனையும் தூண்டிவிட்டு சதி - சூழ்ச்சி செய்கிறது என்பதுவரை இராமதாசு குற்றஞ் சாட்டினார். இதன்மூலம் அணி மாறுவதை சூசகமாகவும், கருணாநிதிக்கு மிரட்டலாகவும் தெரிவித்து வந்தார். அதேசமயம் ஜெயா - சசி பினாமியான தினகரனிடம் இராமதாசின் மகன் அன்புமணி இரகசிய பேரம் நடத்தி வருவதாக வாழப்பாடி குற்றஞ் சாட்டினார். இராமதாசு இதை மறுத்து சவாலும் சவடாலும் விட்டபோதிலும், அணி மாறுவதற்கு நேரமும், முறையும், காரணமும்தான் தீர்மானிக்க வேண்டியிருந்தது. இப்போது அது நடந்துவிட்டது.

இராமதாசின் அணி தாவல் பொதுவில் அரசியல் வேடிக்கை; நாடாளுமன்ற அரசியல் கட்சிகள் சிலவற்றுக்கு நெருக்கடியும் இன்னும் சிலவற்றுக்கு சாதகமுமாக அமைந்துவிட்டது என்பது மட்டுமல்ல; இவற்றையும் தாண்டி அரசியல் சதி, துரோகம், போலித்தனம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது. இராமதாசின் பச்சோந்தித்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் செய்தி ஊடகம் பல உண்மைகளை, திரைமறைவு நாடகங்களை வெளிப்படுத்துவதே கிடையாது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வாஜ்பாயி ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் அணி தாவி, மாற்று ஆட்சி அமைப்பதற்கு ஜெயா, சோனியா, முலயம், போலிக் கம்யூனிஸ்டுகள் முயன்றபோது நாடு நல்ல அரசியல் கேலிக் கூத்தைக் கண்டது. அப்போது ஜெயலலிதாவின் பின்னால் அணிதிரண்ட கட்சிகள் மட்டுமல்ல; ஆட்சியைக் காத்துக் கொள்ள பா.ஜ.க.வின் அத்வானி - வாஜ்பாயி கும்பல் மேற்கொண்ட சந்தர்ப்பவாத சாகசங்கள் இவர்களையும் அம்பலப்படுத்தின. அப்போது எழுந்த அளவு இராமதாசின் அணி தாவல் புழுதி கிளப்பவில்லை. இருந்தபோதும், இப்போதும் ஒரு குறு நாடகம் திரைமறைவில் நடந்திருக்கிறது. இந்தக் குறு நாடகத்தின் முக்கிய பாத்திரங்கள் ஜெயலலிதாவும் இராமதாசும்தான் என்ற போதிலும் இதன் சூத்திரதாரிகளாக இந்து முன்னணி இராமகோபாலனும் ''சோ'' இராமசாமியும் இருந்துள்ளனர். இலஞ்ச - ஊழல் குற்ற வழக்குகள் - தண்டனையில் இருந்து ஜெயலலிதாவை மீட்டு, மீண்டும் ஆட்சியில் அமர்த்துவது; அதற்காக மீண்டும் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டை உருவாக்குவது ஆகிய நோக்கங்களோடு அவர்கள் செயல்பட்டு வருகின்றனர். சூத்திரதாரிகளின் நோக்கம் ஒருபுறமிருக்க, விளைவுகள் வேறுவிதமாக அமைந்துவிட்டன.

இடதுசாரியோ - வலதுசாரியோ, மத வெறியர்களோ - மதச்சார்பற்றவர்களோ ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள் எவராயினும் சாக்கடையில் நெளியும் புழுக்கள்தாம் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்து விட்டார்கள் இந்த அணி சேர்க்கை, மறு அணி சேர்க்கை ஆகியவற்றுக்குத் துளியாவது கொள்கை - கோட்பாடு அடிப்படை இருக்கிறதா? இதை இதே இராமதாசுதான் அப்பட்டமாக முன்பே தெரிவித்து விட்டார். ''அதிகபட்சம் தொகுதிகளைப் பெறுவது; வெற்றி பெறும் கூட்டணியில் சேருவது''. இதையே மெத்தப் படித்த அரசியல்

படிப்பகம்

www.padippakam.com

நிபுணர்கள் சற்று நாகரீகமாகச் சொல்லுகிறார்கள்: ''அரசியல் என்பதே சரியான வாய்ப்புகளைத் தெரிவு செய்வது''; ''அரசியலே ஒரு எண்ணிக்கை விளையாட்டு!''

இன்னும் வெளிப்படையாகவும் நேராகவும் சொல்வதானால், ''பதவியைப் பிடிப்பதும், பணத்தைக் குவிப்பதும்தான் அரசியல்''. ஜெயலலிதா, எம்.ஜி.ஆர்., லல்லு, முலயம் போன்றவர்களுக்கு மட்டுமல்ல; இனம் - மொழி, காந்தீயம் - சோசலிசம், பகுத்தறிவு - சமூக நீதி, பெரியாரியம், அம்பேத்கரியம், மார்க்சியம் - லெனினியம் என்று என்ன பேசினாலும், ஓட்டுப் பொறுக்கி அரசியலில் ஐக்கியமாகிவிடும் அமைப்புகள் எதுவானாலும் தேர்தல் களத்தில் குதிப்பது என்று முடிவு செய்துவிட்டால், இவை எல்லாவற்றையும் கழட்டிப் போட்டுவிட்டு நிர்வாணமாக அந்தச் சாக்கடையில் இறங்கியே தீர வேண்டும்.

கூட்டணி அரசியலின் ஒரு ''சாபக்கேடு'' என்னவென்றால், எந்தவொரு அரசியல் கட்சியும் தனித்து ஆட்சியைப் பிடிக்க முடியாதவாறு அனைத்துக் கட்சிகள் மீதும் மக்கள் அவநம்பிக்கை கொள்வதுதான். இதனால் ஆளும் கட்சி மற்றும் ஆளும் கூட்டணிக்கு எதிராக ஏதாவது காரணம் கூறி பிற கட்சிகள் அணி சேருகின்றன. இந்த அணி சேர்க்கைக்கு வேறு கொள்கை - கோட்பாடு எதுவும் கிடையாது. எனவே, தேர்தல் நெருங்கியதும் தொகுதிகளைப் பங்கீடு செய்து கொள்வதில் குடுமிப் பிடிச் சண்டை வந்துவிடுகிறது. ஒரு கடைசி நேர அணி தாவல் நடக்கிறது. வேட்பு மனு தாக்கல் செய்த பிறகுகூட இது நடக்கிறது. இதனால் மற்ற சமயங்களில் மக்கள் காணும் கூட்டணி சேர்க்கைகள் உருமாறி வாக்குப் பதிவின் போது ஒரு வினோதமான உருவத்தை மக்கள் காணுகின்றனர். தேர்தல் முடிந்ததும் அது இன்னொரு உருவமெடுக்கிறது. பதவிக்காகவும் பணத்துக்காகவும் கட்சி மாறுவதும், அணிதாவுவதும், ஆட்சிக் கவிழ்ப்பும் நடக்கின்றன

கூட்டணி அரசியலின் இன்னொரு ''சாபக்கேடு'' என்னவென்றால், ஒரு தேர்தலின் போது ஏற்பட்ட அணி சேர்க்கை அடுத்த தேர்தல் வரை கூட நீடித்திருக்க முடிவதில்லை. பதவிப் பங்கீடு செய்து கொள்வதில் ஏற்படும் தகராறு மட்டுமல்ல; கூட்டணியின் உறுப்புக் கட்சிகள் தம் பலத்தைக் கூட்டிக் கொள்வதற்கான ஒரே வழி - வெளியேறுவதும், மாற்றுக் கட்சிகளுடன் பேரம் பேசி மறு அணி சேர்க்கையில் அதிக இடம் கோருவதும்தான். பொதுவில் ஆளும் தரப்புக்கு எதிராக அணி சேருவதால் ஆட்சியாளர்கள் மீதான மக்கள் வெறுப்பை வாக்குகளாக மாற்றிக் கொள்வது எளிதாகிறது. அவ்வாறில்லாமல் ஆளும் கூட்டணி நிழலில் இருந்தால் வளருவதற்கான வாய்ப்பே கிடையாது. அது எந்தவொரு தரப்புக்கும் தேக்கத்தையும் தேய்வையுமே ஏற்படுத்தும்.

இந்தச் ''சாபக்கேடு''களைக் கடந்து, ஒட்டகத்தை ஊசிக் காதில் நுழைக்கும் முயற்சியாக தேர்தல் கூட்டணி அரசியலுக்கே கொள்கை - கோட்பாடு, இலட்சியம் - திட்டங்களைப் புகுத்துவதற்குப் போலிக் கம்யூனிஸ்டுகள் முயலுகின்றனர். தாங்கள் ஆளும் மேற்கு வங்கம், கேரளா, திரிபுராவில் இடதுசாரி ஜனநாயகக் கூட்டணியை, நீடித்த ஒரு மாதிரி வெற்றியாகச் சித்தரிக்கின்றனர். ஆனால் கூட்டணிக் கூத்துகளைத் தொடங்கி வைத்தவர்களே இந்தப் போலிக் கம்யூனிஸ்டுகள்தாம். கேரளத்தில் பல்வேறு சாதி - மதக் கட்சிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கூட்டணியோ நூலிழையில் ஆடுகிறது. அங்கேயும் ஆட்சிக் கவிழ்ப்புகளும், அணி தாவல்களும் குறைவின்றி நடக்கின்றன. மேற்கு வங்கம், திரிபுராவில் தேக்க நிலையும் தேய்வுமே காண்கிறோம். இருந்தபோதும், இந்தத் தேர்தல் கூட்டணிகள் மூலமாகவே இடதுசாரி ஜனநாயக சக்திகளைக் கண்டறிந்து இன்னொரு தேர்தல் கூட்டணி அமைப்பது; அதிலிருந்து அடிப்படை சமூக மாற்றம் - புரட்சிக்கான மக்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைப்பது ஆகியவற்றை நீண்டகாலத் திட்டமாகக் கொண்டு போலிக் கம்யூனிஸ்டுகள் செயல்படுகின்றனர்.

போலிக் கம்யூனிஸ்டுகளைப் போலவே, தேர்தல் கூட்டணிகள் அமைப்பதில் தமக்கு ஏதோ நீண்ட கால திட்டமும் இலட்சியமும் இருப்பதாக சமூகநீதி மற்றும் தலித் அரசியல் குழுக்கள் கூறிக் கொள்கின்றன. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை மக்களின் கூட்டணியை உருவாக்கி சமூக நீதியை நிலைநாட்டுவதும் தலித் விடுதலையைச் சாதிப்பதுமே தமது இலட்சியம்; இதற்கான இடைக்கால ஏற்பாடுதான் இந்தத் தேர்தல் கூட்டணி என்பதாக சித்தரித்தனர்.

ஜெயலலிதா தலைமையில் கடந்த பல மாதங்களாக அணிதிரண்டு அதற்கு மதச்சார்பற்ற கூட்டணி என்று நாமகரணம் கூட சூட்டிக் கொண்டனர். ஜெயலலிதாவின் இலஞ்ச - ஊழலைக் காட்டிலும் பா.ஜ.க.வின் வகுப்புவாதமே நாட்டுக்கும் மக்களுக்கும் அதிக ஆபத்து விளைவிக்கக் கூடியது என்று மூப்பனாரும் விளக்கமளித்தார். இதற்காக பல மேடைகளில் கை கோர்த்துக் கொண்டு உயரத் தூக்கி ஒற்றுமை தெரிவித்தனர்; இரட்டை விரல் காட்டி வெற்றியை அறிவித்தனர். ஆனால் தேர்தல் வந்ததும், வேட்டை இரையைப் பங்கு போட்டுக் கொள்வதில் ஓநாய்களுக்கிடையே சண்டை நடப்பதைப் போல வந்துவிடுகிறது.

அற்ப சீட்டுக்களுக்காக ஜெயலலிதாவின் எடுபிடியாக போலி கம்யூனிஸ்டுகள் மாறிப் போனதை ''புதிய கலாச்சாரம்'' கவிதையாக எழுதியிருந்தது. ஆத்திரமடைந்த சி.பி.எம். தனது ''தீக்கதிர்'' ஏடு மூலம் வசவுகளை வீசியதோடு, ஜெயலலிதா எவ்வளவுதான் இலஞ்ச - ஊழல் குற்றங்கள் புரிந்து, மக்களிடம் அம்பலப்பட்டுப் போயிருந்தாலும், மதச்சார்பற்ற சக்திகளை ஓரணியில் திரட்ட வேண்டிய வரலாற்றுக் கடமைக்காக அவருடன் கூட்டு வைத்திருப்பதாக போலிக் கம்யூனிஸ்டுகள் வாதிட்டனர். இராமதாசு அணி மாறி அ.தி.மு.க. கூட்டணியில் இணைந்ததையொட்டி அந்த அணியில் த.மா.கா. - காங்கிரசு நீடிப்பது குறித்து நெருக்கடி எழுந்தபோது கூட இந்தப் போலி கம்யூனிஸ்டுகள் மூப்பனாருக்கு என்ன உபதேசம் செய்தனர்? ''மூன்றாவது அணி அமைப்பது வகுப்புவாத சக்திகளுக்கு சாதகமாக அமைந்துவிடும்; மதச்சார்பற்ற சக்திகளைப் பலவீனப்படுத்திவிடும். ஆகவே, த.மா.கா. - காங்கிரசு ஆகிய கட்சிகள் அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகக் கூடாது; தமக்கு எவ்வளவு தொகுதிகள் ஒதுக்கினாலும் மதச்சார்பற்ற கூட்டணியின் ஒற்றுமைக்காக அதை ஏற்று, அ.தி.மு.க. கூட்டணியில் நீடிப்போம்'' என்று அறிவித்தனர். ஆனால், நடைமுறையில் நடப்பது என்ன? இரு போலி கம்யூனிஸ்டுகளுக்கும் தலா ஆறு தொகுதிகள் ஒதுக்குவதாக ஜெயலலிதா அறிவித்தார். ''மதச்சார்பற்ற சக்திகளின் ஒற்றுமைக்காக தியாகம்'' என்று சவடால் அடித்து வந்த போலி கம்யூனிஸ்டுகள் உடனே கொதித்துப் போனார்கள். தமது அதிருப்தியை பகிரங்கமாக அறிவித்ததோடு, மூன்றாவது அணி அமைப்பதற்கான கடும் முயற்சியில் இறங்கிவிட்டனர். மதச்சார்பின்மை என்பதெல்லாம் வெறும் நாடகம்தான். அதிகபட்ச நாற்காலிகளைப் பிடிப்பதுதான் ஒரே இலட்சியம் என்பதைக் காட்டிவிட்டனர்.

''தலித் அரசியல்'' தலைவர்களின் நிலையோ இன்னும் கேவலமான பரிதாபமானதாக மாறிவிட்டது. செ.கு. தமிழரசன், பூவை மூர்த்தி போன்ற சிறு பிழைப்புவாத குழுக்கள் கோடி கோடியாக பணம் கறப்பதற்கு வசதியாக நிரந்



அணி மாறும் பிழைப்புவாத அரசியலுக்கு 'தலித்'தியத்தை வளைக்கும் திருமாவளவன்: கருணாநிதியிடம் சரணாகதி.

www.padippakam.com

தரமாக ஜெயலலிதாவின் எடுபிடிகளாகிவிட்டனர். "தலித் விடுதலை" என்ற புரட்சிச் சவடால் அடித்த கிருஷ்ணசாமியும் திருமாவளவனும் கொட்டைபோட்ட - பழுத்த ஓட்டுப் பொறுக்கித் தலைவர்களினால் உதைபந்தாக நடத்தப்படுகின்றனர். "தலித் மக்களின் நலனே தமது இலட்சியம்" என்று மீண்டும் மீண்டும் இவர்கள் சவடாலடிக்கிறார்கள். "தலித் நலனுக்கு இன்னார்தான் பரம எதிரி, இவரால்தான் தலித் மக்கள் கடுமையான ஒடுக்குமுறைக்கு ஆளானார்கள், ஆகவே, இவரை எதிர்ப்பதுதான் தலித் நலனுக்கு அவசியமானது" என்று சொல்லி ஏதாவது ஒரு அணியில் சேருவதற்கு நியாயம் கற்பிக்கின்றனர்.

இந்த அணியில் "எதிர்பார்த்தது" கிடைக்காதபோது, எதிரணிக்கு தாவி, அவரைவிட இவர் பரவாயில்லை. தலித் நலனுக்கு இந்த அணியில் சேருவதுதான் சரியானது என்று புரட்டிப் பேசுகின்றனர். தேவேந்திர குல வேளாளருக்கு எதிராக முக்குலத்தோர் நடத்திய சாதிவெறிப் படுகொலைகளுக்குக் காரணம் ஜெயா - சசி கும்பல்தான் என்று முதலில் அடையாளப்படுத்தினார் கிருஷ்ணசாமி. பிறகு மாஞ்சோலை - நெல்லை தாமிரபரணி படுகொலைச் சம்பவத்தையொட்டி, கருணாநிதி அரசின் "தலித் விரோத" சதிக்கு எதிராக இயக்கம் நடத்தினார். அதேபோல திருமாவளவன், தி.மு.க.தான் தலித் மக்களை ஒடுக்குகிறது; தலித் மக்கள் மீது தி.மு.க.வின் கூட்டணிக் கட்சியான பா.ம.க.வின் வன்னிய சாதித் தாக்குதலுக்கு கருணாநிதி உடந்தையாக உள்ளார் என்று குற்றம் சாட்டினார். கிருஷ்ணசாமி, திருமாவளவன். இருவருமே பண்ணையார் மூப்பனாருடன் மூன்றாவது அணி அமைத்துப் படுதோல்வி அடைந்தனர். அம்பேத்கருக்கு அடுத்து மூப்பனார்தான் உண்மையான தலைவர் என்று தூக்கி வைத்துக் கொண்டு ஆடினார் திருமாவளவன். அவரோடு போய் ஜெயலலிதாவின் பாதம் பணிந்தார். ஜெயலலிதாவும் இராமதாசும் இரகசிய பேரம் பேசிக் கொண்டிருந்தபோதும் திருமாவளவனுடைய ஜெயா — மூப்பனார் விசுவாசம் அதிகரித்துக் கொண்டே போனது.

அதிரடி குடை கவிழ்ப்பு நிகழ்ச்சியைப் போல இராமதாசு அணி தாவியவுடன் திருமாவளவனுடைய கணக்குகள் எல்லாம் பிழையாகிவிட்டது; கனவுகள் எல்லாம் பொய்த்துப் போயின. பா.ம.க. அங்கம் வகிக்கும் கூட்டணியில் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் இருக்க முடியாது. வன்னியர் - தாழ்த்தப்பட்டவர் முரண்பாடும், மோதலும்தான் இரண்டுக்குமே அடிப்படை, திருமாவளவனுடன் கூட்டு வைத்துக் கொண்டே, அவருடைய அரசியல் எதிரியான இராமதாசுடன் இரகசிய பேரம் நடத்தி, கூட்டணி அமைத்த ஜெயலலிதாவின் துரோகத்தனம் கண்டு திருமாவளவன் குமுறி எழவில்லை. புலம்பினார், அரற்றினார், வாயடைத்துப் போனார்; மூன்றாவது அணி அமைக்கும்படி மூப்பனார், காங்கிரசு, போலிக் கம்யூனிஸ்டுகளிடம் கெஞ்சிக் கூத்தாடினார். இனிமேலும் தாமதிக்க முடியாது என்ற நிலையில், இவ்வளவு காலமும் எந்தக் கருணாநிதியைத் தாக்கிப் பேசி வந்தாரோ அவரிடம் சரணடைந்தார். கிருஷ்ணசாமியோ அவருக்கு முன்னதாகவே கருணாநிதியை சரணடைந்தார். இவர்கள் தாமிரபரணி - மேலவளவு படுகொலைகளை நாற்காலிகளுக்காக மறந்தே போயினர்.

அதுமட்டுமல்ல; இதன்மூலம் பார்ப்பன - பனியா இந்து மதவெறி பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுடன், தலித் அரசியல் தலைவர்கள் இப்போது கூட்டணி சேர்ந்துள்ளனர். இப்போது மதவாதத்தைவிட சாதிவெறிதான் பெரிய எதிரி, ஆபத்தான சக்தி என்று புது விளக்கம்; தி.மு.க.வுடன் தான் கூட்டுச் சேருகிறோமே தவிர, பா.ஜ.க.வுடன் அல்லவென்று என்று புது வியாக்கியானம் எல்லாம் தருகின்றனர்.

தலித் அமைப்புகளைப் போலன்றி, தாம் மூன்றாவது அணி அமைக்கவே முயலுவதாகக் கூறி போலி கம்யூனிஸ்டுகள் சமாளிக்கின்றனர். வேறுவழி இன்றி நிர்பந்தத்தினால்தான் இவர்கள் அப்படிச் செய்கின்றனரே தவிர வேறல்ல. ஜெயலலிதாவுடன் தாம் அமைத்திருந்த கூட்டணி, மதச்சார்பற்ற இலட்சியக் கூட்டணி என்று போலி கம்யூனிஸ்டுகள் சாதித்து வந்த அதேசமயம், அந்த மதச் சார்பற்ற கூட்டணியின் தலைமையான ஜெயலலிதா, இராமதாசுடன் மட்டுமல்ல; பா.ஜ.க.வுடன் மீண்டும் கூட்டுச் சேர இரகசிய முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார். மதவெறி சக்திகளுடன் இரகசிய பேரங்கள் நடத்தும் இன்னொரு சாதி - மதவெறி சக்தியான ஜெயலலிதாவின் தலைமையை ஏற்பதுதான் போலிக் கம்யூனிஸ்டுகளின் அறிவியல் பூர்வமான சித்தாந்தம்.



பா.ஜ.க.-அ.தி.மு.க.வை இணைக்க முயற்சிக்கும் அரசியல் தரகர் "சோ".

இதேபோலத்தான் இலஞ்ச - ஊழலைவிட வகுப்புவாதமே பேராபத்து என்று கூறி ஜெயலலிதாவின் தலைமையில் மதச்சார்பற்ற கூட்டணி நடத்தி வந்தன த.மா.கா. - காங்கிரசு இணை. ஒன்று பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயக கூட்டணியை உடைத்துக் கொண்டு வெளியேறியதற்காக இராமதாசின் பா.ம.க.வை வரவேற்க வேண்டும்; அல்லது தங்கள் பரம்பரை தலைவர் ராஜீவைக் கொன்ற விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் என்கிற முறையில் பா.ம.க.வை எதிர்த்து அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து விலக வேண்டும். இரண்டையும் செய்யாமல், தங்களுக்கு அதிக தொகுதிகள் ஒதுக்கவில்லை; பாண்டிச்சேரியில் யார் ஆட்சி அமைப்பது என்பதற்காக ஜெயா - இராமதாசு கூட்டணியுடன் முரண்பட்டு குழம்பிக் கிடக்கின்றன த.மா.கா. - காங்கிரசு இணை.

ஜெயலலிதா - சசிகலாவின் கணக்கோ வேறுவிதமாக இருக்கிறது. கோடிகோடியாகக் குவித்து வைத்திருக்கும் கள்ளப் பணமோ, அடுத்தடுத்து நடத்தும் யாகங்களும் பூசைகளுமோ தங்களை இலஞ்ச ஊழல் கிரிமினல் வழக்குகளில் இருந்து காப்பாற்றும் என்ற நம்பிக்கை அக்கும்பலுக்குக் கிடையாது. மீண்டும் பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்து மத்திய அரசின் தயவைப் பெற வேண்டும்; எப்படியாவது வரும் சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்க வேண்டும். இவைதான் தம்மைக் காப்பாற்றும் என்று ஜெயா - சசி கும்பல் கணக்குப் போடுகிறது.

ஜெயா - சசி கும்பலின் தேர்தல் கணக்குப்படி, தெற்கே முக்குலத்துச் சாதிகளின் ஆதரவைப் பெற்றிருப்பதைப் போல வடக்கே வன்னியரின் ஆதரவைப் பெற்றாலே போதும்; ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்று எண்ணுகிறது. கிருஷ்ணசாமி, திருமாவளவன் போன்றவர்கள் கூடுதலான விலை கேட்பார்கள். எனவே உதிரிகளான தலித் தலைவர்களை விலக்கு வாங்கினால் போதும் என்றும் எண்ணுகிறது. இதற்காகத்தான் பாண்டிச்சேரியைத் துருப்புச் சீட்டாக வைத்து பா.ம.க.வோடு கூட்டுச் சேர்ந்துள்ளது. த.மா.கா., காங்கிரசு, போலி கம்யூனிஸ்டுகள் ஆகிய எல்லா எதிர்க் கட்சிகளையும் ஓரணியில் கொண்டு வந்தால் போதிய தொகுதிகள் ஒதுக்கி திருப்திப்படுத்தி விட்டுத் தானும் அறுதிப் பெரும்பான்மை பெற முடியாது என்று அஞ்சுகிறது. ஆகவே, வன்னிய சாதி ஆதரவுக்காக பிற கட்சிகளை உருட்டி மிரட்டவும் கை கழுவவும் முடிவு செய்துவிட்டது. மேலும் இக்கட்சிகளுடன் கூட்டு வைத்துக் கொண்டிருக்கும் வரை பா.ஜ.க.வுடன் மீண்டும் கூட்டணி அமைப்பதற்கு வழி இல்லை என்பதாலும் காங்கிரசு - போலிக் கம்யூனிஸ்டு, த.மா.கா.வை ஓரங் கட்டுகிறது.

பா.ஜ.க.வுடன் மீண்டும் கூட்டுச் சேருவதற்கு இந்து முன்னணி இராம.கோபாலன் - "சோ" இராமசாமி ஆகியோர் மூலம் அ.தி.மு.க. தூது விடுகிறது. பா.ஜ.க.வின் அரசு மற்றும் கூட்டணியில் இருந்து விலகிய போதும், இக்கட்டான நிலையில் தொடர்ந்து ஆதரவு தெரிவிப்பதாக உறுதி கூறிவிட்டு, வெளியே இராமதாசும் ஜெயலலிதாவை பா.ஜ.க. கூட்டணியில் சேர்க்க முயன்றுள்ளார்.

"தீவிரவாத - பிரிவினைவாத பீதி கிளப்பி அரசியல் ஆதாயம் தேடுவதும், அரசு பயங்கரவாதத்தை ஏவி எதிரிகளை வீழ்த்த முயலுவதும் பார்ப்பன அரசியல் சதியாக இருக்கிறது" என்பதைப் "புதிய ஜனநாயகம்" நீண்டகாலமாகவே எழுதி வருகிறது. மீண்டும் அதே சதியில் பார்ப்பன கும்பல் இறங்கியிருக்கிறது. அதன் முதல் காரியமாக, மூப்பனாருக்கும் ஜெயலலிதாவுக்கும் அரசியல் கூட்டு ஏற்படுத்தி வளர்ப்பதில் வெற்றி பெற்றது. இன்னொரு 'இனமான - சமூக நீதிக் காவலர்', 'பகுத்தறிவு ஆசிரியர்' தி.க.வின் வீரமணி அதற்குக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கிறார்.

அந்தப் பார்ப்பன சதியின் இன்னொரு


படிப்பகம்

காரியமாக, தமிழக மக்களிடையே ஜெயலலிதாவுக்கு ஆதரவான அலை வீசுவதாக செய்தி ஊடகப் பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. மூன்றாவது காரியமாக, ஜெயலலிதாவின் இலஞ்ச - ஊழல் குற்றங்களுக்குரிய தண்டனையை அவர் ஏற்கனவே அனுபவித்து விட்டார்; 1996 சட்டமன்றத் தேர்தல்களில் ஜெயலலிதாவைத் தோற்கடித்து பதவியிழக்கச் செய்ததே அவருக்கு தண்டனை வழங்கியதாகும்; தனி நீதிமன்ற விசாரணை - தண்டனை எல்லாம் அதிகப்படியானவை, அரசியல் பழி வாங்கும் நோக்கமுடையவை என்ற பிரச்சாரம் செய்யப்படுகிறது.

நான்காவது காரியமாக, ஜெயலலிதாவின் அரசியல் எதிரியான கருணாநிதி இந்து விரோதி; கோவில் கோவிலாகப் போய், யாகங்கள் பல நடத்தி வழக்குகளுக்கு பரிகாரம் தேடவும், எதிரியை வீழ்த்தவும், ஆட்சியைப் பிடிக்கவும் முயலும் ஜெயலலிதா இந்து மத விசுவாசி. ஆகவே, கருணாநிதியை வீழ்த்துவதே இந்துக்களின் இலட்சியமாக இருக்க வேண்டும் என்று இந்து முன்னணி மூலம் பிரச்சாரம் நடத்தப்படுகிறது.

ஐந்தாவது காரியமாக, தி.மு.க.வும் கருணாநிதியும் திருந்தவேயில்லை; மீண்டும் ஈழவிடுதலைப் புலிகளையும், தமிழகப் பிரிவினைவாதிகளான தீவிரவாதிகளையும் ஆதரிக்கின்றனர்; மீண்டும் பிரிவினைவாத - தீவிரவாத ஆபத்து தமிழ்நாட்டைச் சூழ்ந்து விட்டது என்று பீதிகிளப்பும் பிரச்சாரம் நடத்தப்படுகிறது.

கருணாநிதியோ, வீரமணியோ, இராமதாசோ இவர்களில் யாரும் இந்துமத விரோதிகளோ, பிரிவினைவாத — தீவிரவாத ஆதரவாளர்களோ கிடையாது. இவர்களுக்கெல்லாம் பதவியும் பணமும்தான் முதன்மையானவை. இவர்களுக்குத் தேவையானபோது ஏதோவொரு பார்ப்பன கும்பலோடு கூட்டுச் சேர்ந்து விடுவதை கடந்தகால - நிகழ்கால அரசியல் நிகழ்வுகள் காட்டுகின்றன. பா.ஜ.க. ஆதரவு - விசுவாசத்தில் பார்ப்பன ஜெயலலிதாவை விட தாங்களே உறுதியானவர்கள் என்பதை கருணாநிதியும் இராமதாசும் திரும்பத் திரும்ப நிரூபிக்கவே விரும்புகின்றனர். ஆட்சியைப் பிடிக்கவும், தக்க வைத்துக் கொள்ளவும் நீண்ட ஆயுள் பெறவும் மஞ்சள் துண்டு அணிந்து, பூசைகள் நடத்தும் கருணாநிதி, புலிகளையும் தமிழினவாதத் தீவிரவாத அமைப்புகளையும் தடை செய்வதற்காக முயன்று வருகிறார். போலீசு பயங்கரவாதத்தை ஏவி ஒடுக்குகிறார். இருந்தபோதும் இராம. கோபாலன், ''சோ'' முதலிய பார்ப்பன சாதி வெறியர்களோ மீண்டும் ஜெயலலிதாவை ஆட்சி பதவியில் ஏற்றவும் இலஞ்ச - ஊழல் குற்ற வழக்குகளில் இருந்து விடுவிக்கவும் கருணாநிதியை இந்து விரோத, தீவிரவாத ஆதரவாளர் என்று சித்தரிக்கின்றனர்.

இராமதாசின் பா.ம.க. என்ற பிள்ளைப்



**பணபலத்தின் மூலம் நீதிமன்றத்தை விலை பேசும் ஜெயா: சாதி பலத்தின் மூலம் ஜெயாவையே விலை பேசும் இராமதாசு - கழிசடை அரசியலின் கதாநாயகர்கள்.**

பூச்சி தொல்லை தருவதை விட்டு அணிதாவியதாலும், அது அ.தி.மு.க. அணிக்குள் நெருக்கடியை ஏற்படுத்தியதாலும் குதூலிப்பதாகக் காட்டிக் கொள்கிறது தி.மு.க. ஆனால் தி.மு.க.வைக் கழட்டிவிட்டு பா.ஜ.க. மீண்டும் ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர வாய்ப்பிருக்கிறது; பா.ஜ.க.வின் நம்பகமான தமிழ்நாட்டு விசுவாசிகள் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் என்ற கசப்பான உண்மை கருணாநிதியைக் கலங்கடித்திருக்கிறது. இதனால் மேலும் விசுவாசமாக பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு சலாம் போட வேண்டிய நிலையில் கருணாநிதி உள்ளார்.

அது மட்டுமல்ல; பா.ஜ.க. - தி.மு.க. அணியில் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை இப்போதுதான் துவங்கியிருக்கிறது. எனவே மேலும் சில கேலிக் கூத்துகள் இன்னும் தொடர உள்ளன.

இறுதியில், இன்றைய அரசியல் கூத்தின் காரியக் கோமாளி இராமதாசைப் பற்றி சில வார்த்தைகள் கூற வேண்டும். புரட்சியாளர்கள், அறிஞர்கள் என்று கருதிக் கொள்பவர்கள் எல்லாம் கூட இராமதாசின் ஆரம்பகால அரசியல் கபட நாடகத்தை நம்பினர். நம்பிக்கையான முற்போக்குவாதி என்று ஏற்றிப் போற்றினர். இன்னமும் தமிழின - பெரியாரிய - குழுக்களுக்கு அவர் மீது ஒரு கரிசனை - நம்பிக்கை உண்டு.

இராமதாசை மட்டுமல்ல; இந்த அறிஞர் பெருமக்களின் அறிவுத் திறனுடைய நம்பகத் தன்மையே கேள்விக்குரியதாகும் என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுவிட்டது. வெறும் சாதியப் பிழைப்புவாதியாக அரசியலில் நுழைந்த இராமதாசுக்கு மார்க்சிய - லெனினிய - பெரியாரிய - அம்பேத்கரிய வேடங்கட்டி - ஒளிவட்டம் போட்டு துதி பாடிய அந்த அறிஞர்கள் தமக்கும் இராமதாசின் அரசியலுக்கு சம்பந்தமே கிடையாது என்பதைப் போல அமைதி காக்கின்றனர். இங்கே இராமதாசை மட்டும் குறைகூற முடியாது. மார்க்சிய - லெனினியத்துடன் பெரியாரியம், அம்பேத்கரியம் ஆகியவற்றை ஒட்டுப் போட்டு ஒரு வீரிய சித்தாந்தத்தை உருக்கி, அதன் நாயகராக இராமதாசைக் கண்டார்களே, அதே பார்வைதான் இன்னமும் அந்த அறிஞர்களிடம் இருக்கிறது. மார்க்சியம் - லெனினியம் அறிவியல் அடிப்படையிலான சித்தாந்தம். பெரியாரியம் - அம்பேத்கரியம் குறிப்பிட்ட சமூகப் பிரிவுகளின் உடனடி நலன்களை மட்டுமே முன்னிறுத்தும் சித்தாந்தம். அதன் உண்மையான தீர்வு புரட்சியில் பிறக்கும். இதன் போலியான தீர்வு பிழைப்புவாத ஒட்டுப் பொறுக்கி அரசியலாக முடியும். அதுதான் இப்போது நடக்கிறது. ●

''புதிய ஜனநாயகம்'' முகவர் மீது தாக்குதல்

## சி.பி.எம். குண்டர்களின் ரவுடித்தனம்

மதுரையில், தியாகி லீலாவதியின் பெயரைச் சொல்லி பொதுமக்களிடம் வசூல் வேட்டை நடத்தி, அப்பணத்தை மோசடி செய்த சி.பி.எம். கட்சியின் யோக்கியதையை அம்பலப்படுத்தி ''புதிய ஜனநாயகம்'' இதழில் (16-28 பிப்ரவரி) எழுதியிருந்தோம். இதை மதுரை மாவட்டத்திலுள்ள ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகள் பிரசுரமாக அச்சிட்டு ஆயிரக் கணக்கில் பொது மக்களிடம் விநியோகித்து, சி.பி.எம். தலைமையின் துரோகத்தனத்தைத் தோலுரித்துக் காட்டின.

இதனால் பீதியும் ஆத்திரமும் அடைந்த சி.பி.எம். தலைமை, மார்ச் 4-ஆம் தேதியன்று தமது ''தீக்கதிர்'' நாளேட்டில், தியாகி லீலாவதி குடும்பநல நிதியில் மோசடி எதுவும் நடக்கவில்லை என்று மழுப்பலாக விளக்கமளித்துவிட்டு பு.ஜ.வை சகட்டு மேனிக்கு சாடியது. மறுபுறம், மார்ச் 3-ந் தேதியன்று மதுரை நகர பு.ஜ. முகவர் தோழர் நவீன் குமார் மீது தமது குண்டர்களை ஏவி கொலை வெறித் தாக்குதலையும் நடத்தியுள்ளது. தோழர் நவீன்குமார் தமது கட்சி அலுவலகத்தில் கலாட்டா செய்ததாக போலீசிடம் பொய்ப் புகாரையும் கொடுத்துள்ளது.

இப்படி ரவுடித்தனத்தை ஏவுவதன் மூலமோ, தமது நாளேட்டில் பு.ஜ.வைச் சாடி அவதூறு செய்வதன் மூலமோ சி.பி.எம். கட்சித் தலைமை தனது நிதி மோசடியை ஒருபோதும் மூடிமறைத்து விட முடியாது. இத்தாக்குதலைக் கண்டு அஞ்சி பு.ஜ.வும் புரட்சிகர அமைப்புகளும் வாய்பொத்தி முடங்கி விடாது. துரோகிகளை மக்களிடம் அடையாளம் காட்டுவது எமது புரட்சிகரக் கடமை. அதிலிருந்து ஒருக்காலும் நாங்கள் பின்வாங்க மாட்டோம்!

- ஆசிரியர் குழு

www.padippakam.com

### "மேற்கு வங்கத்தைப் பார்!"

# உடைந்தது சி.பி.எம். கட்சி உருவானது பிழைப்புவாதக் கட்சி

மே. வங்கத்தில் போலி கம்யூனிஸ்ட் கட்சியான சி.பி.எம். மீண்டும் பிளவுபட்டுள்ளது. சி.பி.எம். கட்சியின் மூத்த தலைவரும் மாநிலப் போக்குவரத்துத் துறை அமைச்சருமான சுபாஷ் சக்ரவர்த்தி, 24 பர்கானா மாவட்டச் செயலாளர் சமீர் புதாதுண்டா ஆகியோர் தலைமையிலான ஒரு குழுவினர் கட்சித் தலைமையின் அதிகாரத்துவப் போக்கையும் குறுங்குழுவாதத்தையும் எதிர்ப்பதாகக் கூறி சி.பி.எம். கட்சியிலிருந்து வெளியேறியுள்ளனர். இந்த அதிருப்திக் குழுவினர், ஏற்கனவே சி.பி.எம். கட்சியிலிருந்து நீக்கப்பட்ட அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சைபுதீன் சவுத்திரியுடன் சேர்ந்து கடந்த பிப்ரவரி 21-ஆம் தேதியன்று "ஜனநாயக சோசலிசத்துக்கான கட்சி" (PDS) என்ற பெயரில் புதிய கட்சியைத் தொடங்கியுள்ளனர்.

சி.பி.எம். கட்சியில் ஏற்பட்டுள்ள இந்தப் பிளவு, அரசியல் - சித்தாந்தக் காரணங்களுக்காக ஏற்படவில்லை. மாறாக, போலி கம்யூனிஸ்டுகளின் திருத்தல்வாத சித்தாந்தத்தை இன்னும் ஒரு படி முன்னெடுத்துச் சென்று, பிழைப்புவாத ஓட்டுக் கட்சியாகச் சீரழியும் திசையிலான போராட்டத்திலேயே இந்தப் பிளவு ஏற்பட்டுள்ளது.

சி.பி.எம். கட்சியானது ஏற்கனவே தரகர்கள், பிழைப்புவாதிகள், ஊழல் பெருச்சாளிகள் கூடாரமாகிவிட்டது. மே. வங்கத்தில் கட்சி - ஆட்சிப் பதவிகளுக்கான நாய்ச் சண்டையும் தீவிரமாகி விட்டது. இதர ஓட்டுக் கட்சிகளைப் போலவே, கட்சிக்குள் பல்வேறு குழுக்கள் அரசாங்கப் பதவிகளுக்காகக் கலகம் செய்வதும் அவற்றுக்கு அவ்வப்போது எலும்புத் துண்டுகளைப் போட்டு கட்சித் தலைமை சமரசப்படுத்துவதும் சர்வ சாதாரணமாகிவிட்டது. அந்த வழியில்தான் இப்போது சுபாஷ் - சமீர் தலைமையிலான குழு கலகம் செய்து, முன்னாள் முதல்வர் ஜோதிபாசு முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தை நடந்தும் திருப்தியடையாமல் கட்சியிலிருந்து வெளியேறியுள்ளது.

சி.பி.எம். கட்சிக்குள் பதவி சுகத்துக்காக அலையும் பிழைப்புவாதிகள் பெருகி அடிக்கடி கலகம் செய்து வருவதன் காரணமாக, கட்சித் தலைமை இப்போது ஒரு புதிய முடிவை அறிவித்துள்ளது. இதன்படி, சி.பி.எம். கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு தொடர்ந்து மூன்று முறை எம்.எல்.ஏ.க்களாக இருந்தவர்கள், மீண்டும் தேர்தலில் போட்டியிடக் கூடாது. இதனால் சி.பி.எம். கட்சியின் பழம் பெருச்சாளிகள் பலர் இம்முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்படும். இதனால் பதவி சுகத்தை இழக்க விரும்பாத பழம் பெருச்சாளிகள் இம்முடிவை எதிர்த்துக் கலகம் செய்கின்றனர். இன்னும் சிலர் நீண்ட காலம் சேவை செய்தும் கட்சியில் தமக்குத் தலைமைப் பதவி தரப்படாமல் புறக்கணித்து விட்டதாகக் குமுறுகின்றனர்.

சேற்றிலிருந்து புதைகுழியை நோக்கி: சந்தர்ப்பவாத சி.பி.எம். கட்சியிலிருந்து வெளியேறி, புதிய பிழைப்புவாதக் கட்சியைத் தொடங்கி விழா நடத்தும் அதிருப்தியாளர்கள்.



குறிப்பாக, தற்போது கலகம் செய்து கட்சியிலிருந்து வெளியேறியுள்ள சுபாஷ் சக்ரவர்த்தி, மூத்த தலைவரான தன்னைப் புறக்கணித்துவிட்டு, தன்னைவிட இளையவர்களான புத்ததேவ் பட்டாச்சார்யா, அனில் பிஸ்வாஸ் ஆகியோருக்கு ஆட்சியிலும் கட்சியிலும் முக்கிய பதவிகள் தரப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டுகிறார். தனது ஆதரவாளர்களுக்கு மாவட்ட அளவில் கூட பதவிகள் தராமல் புறக்கணிப்பதோடு, அவர்களைக் கட்சியிலிருந்து அநியாயமாக நீக்கிவிட்டதாகக் குமுறுகிறார். கட்சியில் ஜனநாயக மத்தியத்துவம் இல்லை; குறுங்குழுவாதமும் அதிகாரத்துவமும் பெருகிவிட்டது என்று சாடுகிறார். கடந்த ஓராண்டு காலமாக கட்சிக்குள் போராடி வருவதாகக் கூறும் சுபாஷ் - சமீர் குழுவினர், தம்பின்னே 6 எம்.பி.க்கள், 36 எம்.எல்.ஏ.க்கள், 8 மாவட்டச் செயலாளர்கள் உள்ளதாகவும், வரப்போகும் சட்டமன்றத் தேர்தலில் தமது கட்சி சி.பி.எம். கட்சியை எதிர்த்து வேட்பாளர்களை நிறுத்தும் என்றும் அறிவித்துள்ளனர். இக்குழுவோடு ஏற்கனவே அதிருப்தியுற்று வெளியேறிய - வெளியேற்றப்பட்ட சைபுதீன் சவுத்திரி தலைமையிலான குழுவும் இணைந்து புதிய கட்சியாக உருவாகி, காங்கிரசுடன் கூட்டணி சேர்ந்து வரப்போகும் தேர்தலில் ஓட்டுப் பொறுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரிவாள் - சுத்தியல் சின்னத்தைக் கூட கைவிட்டுவிட்ட இந்தப் பிழைப்புவாதக் கட்சியின் நகல் திட்டத்தில் மருந்துக்குக் கூட கம்யூனிசம் என்ற வார்த்தையே இல்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பெயரால் கம்யூனிஸ்டுகள் ஜனநாயகத்தை வெட்டிச் சிதைத்து விட்டார்கள் என்று குற்றம் சாட்டும் இக்கட்சியினர், சி.பி.எம். கட்சியில் ஜனநாயகமே இல்லை என்று சாடுகின்றனர். தமது கட்சி ஜனநாயகத்தையே உயிர் மூச்சாகக் கொண்டு செயல்படும் என்று கேடுகெட்ட முதலாளித்துவ ஜனநாயகத்தையே இவர்கள் உயர்த்திப் பிடிக்கின்றனர். சி.பி.எம். கட்சியின் தலைமையின் கீழுள்ள இந்திய மாணவர் சங்கம் (SFI), ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI) ஆகியவற்றிலிருந்து கணிசமானோர் வெளியேறி இப்புதிய கட்சியில் சேர்ந்துள்ளனர்.

இப்பிளவை, "வலது சாரி சக்திகளின் சீர்குலைவு வேலை", "துரோகிகளின் சதி" என்று சி.பி.எம். கட்சித் தலைமை சாடினாலும், இப்புதிய கட்சியால் வரப்போகும் சட்டமன்றத் தேர்தலில் சி.பி.எம். கட்சியின் வெற்றி பெரிதும் பாதிக்கும் என்று பீதியில் புலம்புகிறது. "வங்கத்தைப் பார்!" என்று சவடால் அடித்து வந்த சி.பி.எம்., இன்று வங்கத்தில் தமது கட்சியே பிளவுபட்டு பிழைப்புவாதத்தில் முன்னேறிப் பாய்வதைக் கண்டு விழி பிதுங்கி நிற்கிறது. என்ன செய்வது? புரட்சியை பூசையறையில் வைத்துவிட்டு சந்தர்ப்பவாதத்தையும் துரோகத்தையும் விதைத்தவர்கள் அதைத்தானே அறுவடை செய்ய முடியும்!

●

www.padippakam.com

## குஜராத் நிலநடுக்கம்:

# பேரழிவை விளைவித்த கொலைகாரக் கூட்டணி

பல்லாயிரக் கணக்கான மக்களைப் பலி கொண்ட நிலநடுக்கப் பேரழிவினால் குஜராத் மாளாத் துயரில் தத்தளிக்கிறது. அப்பளம் போல் நொறுங்கிக் கிடக்கும் அடுக்குமாடி குடியிருப்புகள்; மீட்க வந்தவர்களாகக் காட்டிக் கொண்டு உடமைகளைச் சூறையாடும் குண்டர்கள்; நிவாரணப் பொருட்களை விநியோகிக்கக் கூட வக்கின்றி அவற்றை கெட்டழுகச் செய்து வீணடிக்கும் அதிகார வர்க்கம்; உறவினர்களையும் உடமைகளையும் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கும் மக்களின் அவலம்; சில்லிட வைக்கும் குளிர்காற்றில் வீசும் பிணவாடை — சுடுகாடாகக் காட்சி தரும் குஜராத் அவலத்தின் ஊடாக ஒரு உண்மை பளிச்சிடுகிறது. அழிந்தவை பெரும்பாலும் அடுக்குமாடிக் குடியிருப்புகள்! அங்குதான் உயிர்ச் சேதமும் அதிகமாக ஏற்பட்டுள்ளது.

குஜராத்தில் நடந்த நில்நடுக்கம் இயற்கையின் சீற்றம்தான். இருப்பினும் பல்லாயிரக் கணக்கானோரைப் பலி கொள்ளுமளவுக்கு பேரழிவு ஏற்படக் காரணம் என்ன? குறிப்பாக, அடுக்குமாடிக் குடியிருப்புகள் நொறுங்கி விழுந்து இடிபாடுகளில் சிக்கி இறந்தவர்களே அதிகம். நிலநடுக்கத்தால் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம் என்றாலும், குண்டு வெடிப்பு நிகழ்ந்ததைப் போல அவை சுக்கு நூறாகிப் போவதற்கு அடிப்படையே இல்லை. ''எங்கள் நாட்டிலும் நிலநடுக்கம் ஏற்பட்டதுண்டு; இந்தியாவில் நிகழ்ந்ததை விட அதிக வீரியத்துடன் நிலநடுக்கம் ஏற்பட்டதுமுண்டு. ஆனால் இவ்வளவு பேரழிவும் உயிரிழப்புகளும் ஒருபோதும் நடந்ததில்லை. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கட்டடங்கள் முற்றிலும் தரமற்றதாக இருந்ததே இதற்குக் காரணம்'' என்கிறார் ஒரு ஜப்பானியப் பொறியியலாளர்.

குஜராத்தின் புஜ் நகரிலுள்ள ஹம்கிரி அடுக்குமாடி குடியிருப்பில் சைலேஷ் என்ற நிலவியல் விஞ்ஞானி வசித்து வந்தார். அவர் தனது அடுக்குமாடி குடியிருப்பு விரிசல் கண்டுள்ளதையும், தரமற்ற முறையில் குடியிருப்பு கட்டி மோசடி செய்துள்ளதாகவும், இதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை விளக்கியும் கட்டட முதலாளிகளுக்கும் நகராட்சிக்கும் கடந்த ஈராண்டுகளாக பல முறை கடிதம் எழுதிப் போராடி வந்தார். ஆனாலும் நகராட்சியோ கட்டட முதலாளிகளோ இதை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. கடந்த ஜனவரி 26-ஆம் நாளன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் ஹம்கிரி குடியிருப்பு நொறுங்கி விழுந்து இடிபாடுகளில் சிக்கி விஞ்ஞானி சைலேஷ் குடும்பத்தோடு மரணமடைந்துள்ளார்.

அகமதாபாத் நகரில் மான்சி அடுக்குமாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட உயிர்ச்சேதம் தான் அப்பகுதியில் மிக அதிகமானதாகும். அக்குடியிருப்பைக் கட்டிய முதலாளிகள் விதிமுறைகளை மீறி மேலும் பல அடுக்குமாடிகளை எழுப்பியதோடு, உச்சி மாடியில் நீச்சல் குளமும் கட்டியமைத்தனர். ''இதனால் கட்டிடத்தில் அதிக அழுத்தம் ஏற்பட்டு பாதிப்பு நேரிடும் என்று கட்டட முதலாளிகளிடம் நாங்கள் முறையிட்ட போதிலும் அவர்கள் கேட்கவில்லை. நகராட்சி நிர்வாகத்திடம் முறையிட்டும் பலனில்லை. இன்று இக்குடியிருப்பு நொறுங்கி என் குடும்பத்தையே இழந்து நிற்கிறேன்'' என்று குமுறுகிறார் மிகோஷ்பட் என்ற முதியவர்.

நிலநடுக்கத்துக்குப் பின்னர் குஜராத்தின் நூற்றுக் கணக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகள் இற்று விழுந்தும் சரிந்தும் விரிசல் கண்டும் கோரமாக நிற்கின்றன. பாதுகாப்பற்ற குடியிருப்புகளை இடித்து விடுமாறு உத்திரவிடுகிறது மாநில அரசு. அதன்படி அகமதாபாத்திலுள்ள விரிசல் விட்ட ஒரு அடுக்கு மாடிக் குடியிருப்பை இடிக்க நகராட்சி ஊழியர்கள் புறப்பட்டனர். உடனே அங்கு ஓடோடி வந்த ஆளும் பாரதீய ஜனதா கட்சி அரசின் நிதியமைச்சரான வாஜுபாயி வாலா, அதைத் தடுத்து நிறுத்தினார். நகராட்சி ஊழியர்கள் உத்தரவைக் காட்டி, அக்கட்டடத்தை இடிக்க வேண்டுமென வலியுறுத்தினர். விரிசல் ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற கட்டடங்களை இடிப்பதா அல்லது அவற்றைச் சீரமைக்க முடியுமா என்பதைப் பற்றி இன்னுமொரு மதிப்பீட்டுக் குழு முடிவு செய்யும்; எனவே இப்போது இடிக்கக் கூடாது என்று அவர் அவசர உத்தரவு பிறப்பித்தார். ஏனெனில் விரிசல் விட்ட அந்த அடுக்குமாடிக் குடியிருப்பு அவரது நண்பரான ராகேஷ் ஷா என்ற நில முதலைக்குச் சொந்தமானது.

வாஜுபாயி வாலா வெறும் அமைச்சர் மட்டுமல்ல; அவர் குஜராத்தின் மிகப்பெரிய வீட்டு மனை அதிபர். கணக்கற்ற அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி விற்பனை செய்துள்ள பெரும் கோடீசுவரப் புள்ளி. ராஜ்கோட் வட்டாரத்தில் பாதிக்கும் மேற்பட்ட வீட்டு மனைகள் அவருக்குச் சொந்தமானது.

ராகேஷ் ஷா என்பவர் வாஜுபாயி வாலாவின் நெருங்கிய கூட்டாளி. அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டும் நிறுவனத்தின் அதிபர். குஜராத்தில் அவர் எழுப்பிய பல கட்டடங்கள் நிலநடுக்கத்தால் அப்பளமாக நொறுங்கி கணக்கற்றோரைக் காவு கொண்டுள்ளது. ஷா உள்ளிட்டு பல கட்டட நிறுவன முதலாளிகள் மீது இப்போது கிரிமினல் குற்ற வழக்குகள் போடப்பட்டுள்ளன. இவர்களில் முதன்மைக் குற்றவாளியாகத் திகழும் ஷா, அமைச்சரின் பாதுகாப்பில் தலைமறைவாகி

**அப்பளமாக நொறுங்கிக் கிடக்கும் அடுக்குமாடிக் குடியிருப்பு: கட்டிட மாஃபியா - அனைத்துக் கட்சி ஓட்டுப் பொறுக்கிகளின் கொலைகாரக் கூட்டணியால் ஏற்பட்ட பேரழிவு.**



www.padippakam.com

விட்டார். அமைச்சருக்கும் ஷாவுக்கும் உள்ள நெருக்கம் காரணமாக அவரைக் கைது செய்ய முடியாதபடி நிர்பந்தங்கள் வந்துள்ளதாகப் போலீசு அதிகாரிகளே ஒப்புக் கொள்கின்றனர்.

ஷா எழுப்பிய கட்டடங்கள் நொறுங்கி விழுந்த இடங்களைப் பார்வையிட்ட நகராட்சி அதிகாரிகளும் மீட்புக் குழுவினரும் அதிர்ச்சியடைந்தனர். இக்கட்டடங்கள் உரிய அளவுக்கு ஆழமான அஸ்திவாரத்தில் எழுப்பப்படாததால், பளு தாளாமல் தூண்கள் நொறுங்கியுள்ளன. கான்கிரீட் தூண்களுக்குப் பயன்படுத்திய கம்பிகளோ, காயலாங்கடையில் பெறப்பட்ட துருப்பிடித்த இரும்புக் கம்பிகளாக இருந்தன. சில கம்பிகளோ பழைய இரும்புக் கம்பி மீது முலாம் பூசி மறுவார்ப்பு செய்யப்பட்ட வலு குறைந்த கம்பிகளாக இருந்தன. கட்டடத்தின் மணல் - சிமெண்ட் கலவையோ உரிய விகிதத்தில் இல்லை. அரசாங்கத்திடம் அனுமதி பெறப்பட்ட வரைபடத்தின் அடிப்படையிலும் கட்டடம் எழுப்பப்படவில்லை. பானை சோற்றைப் பதம் பார்த்தாற்போல, ஷா எழுப்பிய கட்டடங்கள் நொறுங்கிக் கிடக்கின்றன. குஜராத்தின் பெரும்பாலான அடுக்குமாடிக் குடியிருப்புகளும் இதே கதியைத்தான் எட்டியுள்ளன. மணல் - சிமெண்ட் கலவையின் விகிதம், இரும்புக் கம்பிகளின் தரம், அஸ்திவாரத்தின் ஆழம் என்று ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்த்தால் பத்தாயிரம் கட்டிடங்களுக்கு பத்து கூடத் தேறாது என்று மதிப்பிடுகிறது அகமதாபாத் நகராட்சியின் மதிப்பீட்டு அறிக்கை.

வாஜுபாயி வாலா மட்டுமல்ல; குஜராத்தின் பா.ஜ.க. அமைச்சரவையில் ஏறத்தாழ கால் பங்கிற்கும் மேலான அமைச்சர்கள் வீட்டு மனை மாஃபியாக்களின் நெருங்கிய கூட்டாளிகள். முதலமைச்சர் கேசுபாய் பட்டேலின் மகனாகிய பரத் பட்டேல், குஜராத்தின் மிகப்பெரிய அடுக்குமாடிக் கட்டட முதலாளி; பல கோடிகளுக்குத் தொழில் செய்யும் அவர், வீட்டு மனை மாஃபியாக்களின் நெருங்கிய கூட்டாளி. உள்துறை அமைச்சர் ஹாரன் பாண்ட்யா, நீர்வளத்துறை அமைச்சர் நரோத்தம் பட்டேல், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் காபாஜி, மீன்வளத்துறை அமைச்சர் பாபுபாய் பொகாரியா, நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் பரமானந்த், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் புருசோத்தம் சோங்கி, உயர் கல்வி தொழில்நுட்பத் துறை அமைச்சர் பரத் பரோட் - என ஒரு கும்பலே வீட்டு மனை - அடுக்குமாடி கட்டட மாஃபியாக்களின் கூட்டாளிகளாக உள்ளனர். இவர்கள் மட்டுமின்றி, மிக முக்கிய அரசுத் துறை நிறுவனங்கள் - வாரியங்களின் தலைவர்களாக உள்ள இவர்களின் வாரிசுகளும் உறவினர்களும் வீட்டு மனை மாஃபியாக்களின் கூட்டாளிகளாக உள்ளனர். அமைச்சர்கள், அவர்களின் வாரிசுகள் ஒருபுறமிருக்க, 20-க்கும் மேற்பட்ட பாரதீய ஜனதா எம்.எல்.ஏ.க்கள் வீட்டுமனை - அடுக்குமாடி கட்டடத் தொழிலில் ஈடுபட்டுள்ளதோடு மாஃபியாக்களின் கூட்டாளிகளாகவும் உள்ளனர்.




அவலத்தின் நடுவே வெஞ்சினம்: ''ஊழல் - மோசடி அரசியல்வாதிகளை நாங்கள் வெறுக்கிறோம்!'' என்ற அறிவிப்பைக் கொண்ட ''பேனரை''க் கட்டும் குஜராத் மக்கள்.

ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் யோக்கியதை இப்படியிருக்க, அதற்கு எந்த வகையிலும் நாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்கிறது காங்கிரசுக் கட்சி. முன்னாள் காங்கிரசு முதல்வர் சிமன்பாய் பட்டேல், அவரது மகன் சித்தார்த்தா, கட்சிக் கொறடா நரேஷ் ராவல், முன்னாள் துணை முதல்வர் நர்ஹரி அமின், மூத்த முன்னாள் முதல்வர் அமர்சிங் சௌத்ரி முதலான பெருச்சாளிகள் அனைவருமே வீட்டுமனைத் தொழிலில் ஈடுபட்டு வருவதோடு கட்டட மாஃபியாக்களின் பங்காளிகளாகவும் உள்ளனர்.

குஜராத் மாநிலம் நில நடுக்கத்தால் பாதிக்கப்படாத பகுதியல்ல; நிலநடுக்கம் ஏற்படக் கூடிய பகுதிதான் என்று ஏற்கனவே எச்சரிக்கப்பட்ட பகுதிதான். இருப்பினும் வரைமுறையின்றி அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்ட அதிகார வர்க்கம் அனுமதி அளித்துள்ளது. அதுவும் தரமற்ற இரும்பு, சிமெண்ட் கலவைகளால் எழுப்பப்பட்ட கட்டடங்களுக்கு சான்றிதழ் அளித்து இலஞ்ச ஊழலில் திளைத்துள்ளது. 40 - 50 ஆண்டுகளுக்கு முந்தைய கட்டடங்கள் நிலநடுக்கத்தால் சேதமடையாமல் நிற்கும் அதேசமயம், பத்தாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் நொறுங்கி விழுந்ததற்கும், பெருத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டதற்கும் இதுவே முதன்மையான காரணம்.

குறிப்பாக, மாநிலத் தலைமைச் செயலாளர் முகுந்தன், கல்வித்துறை செயலாளர் மோகன் பரத்வாஜ், நிதித்துறைக் கழகத் தலைமை இயக்குனர் நந்தா, கட்டுமானக் கழகத் தலைமை இயக்குனர் ரவி சாக்சேனா - என பல உயர் அதிகாரிகளும் அதிகார வர்க்க முக்கிய புள்ளிகளும் வீட்டுமனை மாஃபியாக்களின் கூட்டாளிகள். அடுக்குமாடி கட்டட மாஃபியாக்களின் நிரந்தர சம்பளப் பட்டியலில் உள்ள இந்த உயர் அதிகாரிகள், அவர்களின் தயவில் அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சுற்றுலா சென்று வந்துள்ளனர்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் பல அடுக்குமாடிக் கட்டடங்கள் விதிமுறைகளுக்கு விரோதமாகவும், பாதுகாப்பற்ற முறையிலும் கட்டப்பட்டுள்ளதை எதிர்த்து தொடுக்கப்பட்ட பொதுநல வழக்கை விசாரித்த குஜராத் உயர்நீதி மன்றம், மாநில அரசிடம் இது குறித்து விளக்கம் கோரியது. இதைத் தொடர்ந்து கட்டட மாஃபியாக்களின் கூட்டாளிகளாக உள்ள ஓட்டுப் பொறுக்கிகளும் அதிகார வர்க்கமும் பாதுகாப்பற்ற அடுக்குமாடி குடியிருப்புகளை இடித்துத்தள்ள உத்தரவிடவில்லை. மாறாக, இத்தகைய கட்டடங்களை எழுப்பிய முதலாளிகளிடம் அபராதம் வசூலிப்பது என்ற அயோக்கியத்தனமான திட்டத்தை முன்வைத்தனர். ஆனால் நில முதலைகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததும், தீர்மானிக்கப்பட்ட அபராதத் தொகையானது எட்டில் ஒரு பங்காகக் குறைக்கப்பட்டது. இருப்பினும் இந்த அற்பத் தொகையைக் கூட நில முதலைகள் இன்றுவரை செலுத்தவில்லை. கட்டட மாஃபியாக்கள் - ஓட்டுப் பொறுக்கிகள் - அதிகார வர்க்கத்தின் கொலைகாரக் கூட்டணி எந்த அளவுக்கு வேர்விட்டுள்ளது என்பதை நிரூபிக்க இதுவொன்றே சான்று கூறப் போதுமானது. ஒரு சில கட்டட முதலாளிகள் மீது கிரிமினல் வழக்குகள் போடப்பட்டுள்ளதைத் தவிர, இம்மக்கள் விரோத கொலைகார கும்பல் மீது இன்றுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

குஜராத் மட்டுமா? தமிழகத்தில் சாலைகள், பாலங்கள், வீட்டு வசதி - குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள், பேருந்து நிழற்குடைகள், சத்துணவுக் கூடங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் என அனைத்துமே ஓட்டுப் பொறுக்கிகள் - கட்டட ஒப்பந்தக்காரர்களின் கூட்டுக் கொள்ளையை வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கின்றன. சுடுகாட்டுக் கொட்டகையிலும் ஊழல் செய்து கொள்ளையடித்த கொட்டை போட்ட பெருச்சாளிகள் நிறைந்த மாநிலம் இது. தமிழகத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டால் அது குஜராத்தைவிடக் கோரமானதாகவே இருக்கும். நிலநடுக்கப் பேரழிவைவிட ஓட்டுப் பொறுக்கிகள் - அதிகார வர்க்கம் - வீட்டு மனை மாஃபியாக்களின் கூட்டணியால் ஏற்படும் பாதிப்பின் பயங்கரம் கொடூரமானதாகவே இருக்கும்.

● குமார்

www.padippakam.com

# தாராளமய தாசர்களும் நவீன எட்டப்பர்களும்

**"தாராளமயம் - தனியார்மயத்தின் மூலம்தான், இந்திய மக்களுக்கு உலகத் தரம் வாய்ந்த பொருட்கள் கிடைக்கும் என்ற பிரச்சாரம் முழுவீச்சில் நடந்து வருகிறது. இத்தாராளமயம் - தனியார்மயத்தால் இந்தியச் சந்தையில் நிரம்பி வழியும் உலகத் தரம் வாய்ந்த பொருட்களை யார் வாங்கி அனுபவித்து வருகிறார்கள்? ரேஷனில் கிடைக்கும் புழுத்துப் போன இந்தியத் தரம் வாய்ந்த அரிசியைக் கூட வாங்க முடியாத அடித்தட்டு மக்கள், இறக்குமதியாகும் அமெரிக்க கோதுமையை வாங்கிச் சாப்பிடுவதைப் பற்றிக் கனவு கூட காண முடியாது. அதனால் தான் அவர்கள் அடிப்படை வசதிகளைச் செய்து தரக் கோரி தொடர்ந்து போராடி வருகிறார்கள். ஆனால், அரசாங்கமோ, மேட்டுக்குடிக் கும்பல் 'உலகத் தரம்' வாய்ந்த அந்நிய நாட்டுப் பொருட்களைத் தடையின்றி வாங்கி அனுபவிக்க வேண்டும் என்பதற்காக, மானியத்தை வெட்டுகிறது; பொதுத் துறையை விற்கிறது; தாராள இறக்குமதியை அனுமதிக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், மேட்டுக்குடிக் கும்பலின் உல்லாச - ஆடம்பர வாழ்வுக்காக அடித்தட்டு மக்களின் வாழ்க்கை சூறையாடப்படுகிறது" எனச் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம். இத்தாராளமயம் - தனியார்மயத்தை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டு, "சுதேசி" சவடால் அடித்து வரும் ஆர்.எஸ்.எஸ்.-இன் முகவிலாசத்தை இப் பகுதியில் காண்போம்.**

தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ்.-ஐயும், அதன் சகோதர அமைப்புகளான பா.ஜ.க., விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள், இந்து முன்னணியையும் அறிந்து வைத்திருப்பவர்கள் கூட, அவ்வமைப்பின் மற்றொரு விஷக் கொடுக்கான சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தை அறிந்து வைத்திருப்பார்கள் என உறுதியாகச் சொல்லிவிட முடியாது.

சுதேசி விழிப்புணர்வு இயக்கம், 1991-ஆம் ஆண்டு நவம்பர் 22 அன்று ஆர்.எஸ்.எஸ்-ஆல் தொடங்கப்பட்டது. இந்துத்துவா கொள்கைகளுக்காகச் சமரசமின்றிப் போராட வி.இ.ப., இந்து முன்னணி, பஜரங்தள் ஆகிய அமைப்புகள் ஆர்.எஸ்.எஸ். கீழ் இயங்கி வருவதைப் போல, பன்னாட்டு நிறுவனங்களை எதிர்க்கும் "சுதேசி" கொள்கைகளுக்காக சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தை நடத்தி வருவதாக ஆர்.எஸ்.எஸ். கூறுகிறது.

சுதேசி விழிப்புணர்வு இயக்கம் வெளியிட்டுள்ள "எது சுதேசி? ஏன் சுதேசி" என்ற சிறு நூலில், "சுதந்திரத்திற்கு முன்பு இந்தியப் பொருளாதாரம் இலண்டனில் முடிவு செய்யப்பட்டது. சுதந்திரத்திற்கு பின்பு மாஸ்கோவில் முடிவு செய்யப்பட்டது. கம்யூனிசத் தோல்விக்குப் பிறகாவது அது புது டில்லியில் (இந்தியாவில்) முடிவு செய்யப்படும் என நினைத்தபோது, வாஷிங்டனிலும், ஜெனிவாவிலும் முடிவு செய்யும் நிலை ஏற்பட்டது."

"சொந்தக் காலில் நின்ற கிராமங்கள் முற்றிலும் ஒழிக்கப் பெற்று, ஒவ்வொரு தேவைக்கும் அந்நியக் கம்பெனிகளிடம் கையேந்தும் நிலைதான் இன்றைய பொருளாதாரம் நமக்கு உருவாக்கிக் கொடுத்துள்ளது."

"அப்படியனால்; எப்போதுதான் இந்தியப் பொருளாதாரம் இந்தியாவில் நிர்ணயிக்கப்படும்?... இந்தியா, இந்தியர்களாலேயே உருவாக்கப்பட வேண்டும்; பன்னாட்டு கம்பெனிகளால் அல்ல" என்று தனது நோக்கத்தைப் பறைசாற்றுகிறது, சுதேசி விழிப்புணர்வு இயக்கம்.

"சுதேசி என்பது சரக்குகளைப் பற்றி மட்டுமே குறிக்கும் பொருளாதார விவகாரம் மட்டுமன்று; தேசிய வாழ்க்கையின் அனைத்துப் பிரிவுகளையும் தழுவிய பரந்து விரிந்த சித்தாந்தம்; தேசபக்தியின் நடைமுறை வெளிப்பாடு. அமெரிக்க மயமான இந்தியர்கள்தான் சுதேச விழிப்புணர்வு இயக்கத்தைத் திட்டுகிறார்கள்" என்கிறார். சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தின் நிறுவனர், டி.பி. தெங்காடி.

தொலைக்காட்சி பெட்டி தொடங்கி ஊறுகாய் மட்டை வரை, பல்வேறு விதமான நுகர் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், உணவுப் பொருட்கள், மின் உபகரணங்களைத் தயாரிக்கும் இந்திய நிறுவனங்கள் எவை? பன்னாட்டு நிறுவனங்கள் எவை? எனப் பட்டியல் போட்டு, பன்னாட்டு நிறுவனங்களின் தயாரிப்புகளைப் புறக்கணித்து இந்திய நிறுவனங்களின் தயாரிப்புகளை வாங்குவோம் என நோட்டிஸ் அடித்து, பொது மக்களிடம் கொடுத்து சுதேசி பிரச்சாரம் செய்து வருகிறது, சுதேசி விழிப்புணர்வு இயக்கம்.

சுதேசியை நாம் கடைப்பிடிக்காது போனால், "கலாச்சார சீரழிவு ஏற்படும்... குடும்ப வாழ்க்கை முறை சீர்கெடும். பெப்சி, கோக்ககோலா நடத்தும் அரைகுறை ஆடை மழை நடனம், ராக் மியூசிக் காரணமாக வன்முறை பெருகும். பெண்மை சீர்கெடும். சுய முயற்சி உடையோர், மெத்தப் படித்தவர்கள் நம் நாட்டை விடுத்து வெளிநாடு செல்வார்கள். நாட்டிற்கு எதிரான பிரிவினை போராட்டம் ஏற்படலாம். இயற்கையைச் சுரண்டும் கண்மூடித்தனமான தொழில்நுட்பத்தால் சுற்றுச் சூழல் கெடும். கடும் வறட்சி, புயல், வெள்ளம், பூகம்பம் உண்டாகலாம்" என சுதேசி விழிப்புணர்வு இயக்கம் எச்சரிக்கிறது.

மேலும், "சர்வதேச நிறுவனங்களுக்குத் தொடர்பில்லாத உள்நாட்டு தொழில்களே இருக்க முடியாது என்ற எண்ணம் நாடெங்கும் ஏற்பட்டு வரும் வேளையில், உலகமயமாக்கல் காரணமாக நமது நாட்டு தொழில்கள் அழிந்துவிடக் கூடாது என்பதற்காக பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தொடர்பில்லாத தொழில் பொருட்காட்சிகளை டெல்லி, பெங்களூர், ஹைதராபாத், அகமதாபாத், சிம்லா, ஜோத்பூர் ஆகிய இடங்களில் மாநில அளவில் நடத்தி, இன்று கோவையில், தமிழ் மாநில அளவில் நடத்துவது நமது இயக்கத்தால் சுதேசி விழிப்புணர்வுக்குக் கிடைத்து வரும் மாபெரும் வெற்றி" என்று தன்னைத் தானே சுதேசி விழிப்புணர்வு இயக்கம் பாராட்டியும் கொள்கிறது. (எது சுதேசி? ஏன் சுதேசி?)

பன்னாட்டு நிறுவனங்களோடு போட்டி போட முடியாமல் நசிந்து கொண்டிருக்கும் சிறுவீத உற்பத்தியாளர்கள் இதையெல்லாம் பார்த்து, "அட, நம்ம பிரச்சினையைப் பேசறதுக்குன்னே ஒரு அமைப்பு இருக்குதே" என்று, சுதேசி விழிப்புணர்வு இயக்கம் மேல் நம்பிக்கை கொள்ளலாம். சிறு தொழில் அதிபர்களைப் பொருத்த வரையில், அமெரிக்காவை எதிர்க்கும் கம்யூனிஸ்டுகளைப் பார்த்து தான் அதிகம் ஒதுங்கிப் போவார்கள். அவர்களுக்கு சுதேசி விழிப்புணர்வு இயக்கம் தொந்தரவு இல்லாத மாற்றாகத் தெரியலாம். இன்று, நமது நாட்டில் கம்யூனிஸ்டு தொழிற் சங்கங்களை விட, அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைத் திரட்டியிருப்பது ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தைச் சேர்ந்த பாரதீய மஸ்தூர் சங்கம்தான். அவ்வமைப்பின் நிறுவனரான டி.பி. தெங்காடிதான் சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தின் தலைவராகவும் இருக்கிறார். இதனால், தொழிலாளர்கள் கூட ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் உலகமயத்தை எதிர்க்க சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தில் இணையலாம்.

இந்நிலையில், அவ்வியக்கத்தை அதன் துண்டுப் பிரசுரங்கள், அதனின் வரம்புக்குட்



படிப்பகம்

பட்ட சில எதிர்ப்பு நடவடிக்கைகள் இவற்றை மட்டுமே வைத்துக் கொண்டு நம்பிவிட முடியுமா? குறிப்பாக, ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தைச் சேர்ந்த பா.ஜ.க., அதிகாரத்தில் உட்கார்ந்து கொண்டு பொருளாதார தாராளமயமாக்கலைத் தீவிரமாக அமல்படுத்தி வரும்பொழுது அதே ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தைச் சேர்ந்த சுதேசி விழிப்புணர்வு இயக்கம் தாராள இறக்குமதியை, பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தை எதிர்ப்பதாகக் கூறுகிறது. மூளையுள்ள யாரும் இந்த முரண்பாடு பற்றி சிந்திக்காமல் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.



ஏகாதிபத்தியங்களின் அரசியல், பொருளாதார, இராணுவ ஆதிக்கத்தில் இருந்து ஒரு நாடு/தேசம் விடுதலையடைவதும், எந்த அன்னிய நாட்டையும் சார்ந்திராமல் சுயமான தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியமைப்பதும், அதற்கான போராட்டம் என்ற பொருளில்தான் ''சுதேசி''யைக் காண முடியும். இந்த உரைகல்லைக் கொண்டு பார்த்தால் ஆர்.எஸ்.எஸ்.-இன் ''சுதேசி'' என்பது மோசடித்தனமானது மட்டுமன்றி, ஏகாதிபத்தியங்கள் நமது நாட்டை மீண்டும் அடிமைப்படுத்துவதற்குத் துணை போகக் கூடியது; பல்வேறு பிரிவு மக்கள் நடத்தி வரும் உலகமய எதிர்ப்புப் போராட்டங்களை விழுங்கித் திசை திருப்பக் கூடியது; காங்கிரசின் ''சுதேசி''யை விட, ஆர்.எஸ்.எஸ்.-இன் ''இந்துத்துவா சுதேசி'' அபாயகரமானது.

★ ★ ★

சுதேசி விழிப்புணர்வு இயக்கம், கடந்த பிப்ரவரி 16-ஆம் தேதி தொடங்கி 21-ஆம் தேதி முடிய கோவை நகரில் ''சுதேசி தொழில் கண்காட்சி 2001''-ஐ நடத்தியது. இக்கண்காட்சியைத் தொடங்கி வைத்த பிரதமர் வாஜ்பாயி, ''சிறு தொழில்களைப் பாதுகாப்போம்'' என்றும், ''இந்த உலகமயக் காலத்திலும் சுதேசி எனப்படும் தற்காப்பு பொருந்தக் கூடியதே'' என்றும் பேசிவிட்டு தில்லிக்குப் பறந்தார்.

''யார் இந்த வாஜ்பாயி?'' — இந்தியாவின் 13 ஆவது பிரதமர் எனப் பதில் அளிப்பதற்கு, இது ''கோடீஸ்வரன்'' பாணி கேள்வியல்ல.

1996-ஆம் ஆண்டு வாஜ்பாயி பதிமூன்று நாள் பிரதமராக இருந்தபொழுது, அவரது மந்திரி சபைக்கு நாடாளுமன்றத்தில் குறைந்தபட்ச பெரும்பான்மை பலம் கூட இன்றி, அவரது ஆட்சி சட்டவிரோதமாக நடந்து கொண்டிருந்தது; அப்பொழுது, அவசர அவசரமாக ''என்ரான்'' என்ற அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனத்திற்கு 16 சதவீத இலாப உத்தரவாதமளிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு பதவி விலகியவர் வாஜ்பாயி.

இந்தியா அணுகுண்டு வெடித்த பிறகு, இந்தியா மீது அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் என்பதற்காக, இந்திய வங்கி மற்றும் காப்பீடு துறைகளைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்துவிட்டு, அமெரிக்காவை ''தாஜா'' செய்ய முனைந்தவர் வாஜ்பாயி.

உலக வர்த்தக் கழகத்தின் காலக்கெடு முடிவதற்குள்ளாகவே, தாராள இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளையும்/கட்டுப்பாடுகளையும் நீக்கியவர் வாஜ்பாயி.

இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் நீக்குவதை நாடாளுமன்றத்தில் அறிவிக்காமல், வெளிநாட்டில் கமுக்கமாக அறிவித்தவர்; நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறாமல், அதை நடைமுறைப்படுத்தியவர் இதன் மூலம், உலக வர்த்தகக் கழகத்தின் முன் இந்திய நாடாளுமன்றம் செல்லாக்காசு என்பதை உலகறியச் செய்தவர், வாஜ்பாயி.

- இப்படி, ஏகாதிபத்தியங்கள் எள் என்பதற்கு முன்பே எண்ணெயாக நிற்கும் வாஜ்பாயியை, இரண்டாம் கட்டத் தாராளமயத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வரும் வாஜ்பாயியை, தாராள இறக்குமதியை எதிர்ப்பதாகக் கூறும், பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தை எதிர்ப்பதாகக் கூறும் சுதேசி விழிப்புணர்வு இயக்கம் அழைத்து வந்து, சுதேசி தொழில் கண்காட்சியைத் திறந்து வைக்கிறது. கன்னக்கோல் கொள்ளைக்காரனைக் கொண்டு வங்கியைத் திறந்து வைப்பது போல் உள்ளது இந்தக் கூத்து!

**சுதேசி தொழில் கண்காட்சியை, தாராளமயத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தும் பிரதமர் வாஜ்பாயி திறந்து வைத்தார். பெப்சி கோலா, கோகோ-கோலாவின் கோவை மாவட்ட ஏஜெண்ட் பொள்ளாச்சி மகாலிங்கம் கண்காட்சியின் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். இப்படி வெளிப்படையாகவே கோவையில் நடந்த ஆர்.எஸ்.எஸ்.இன் ''சுதேசி'' பித்தலாட்டத்தை, சி.பி.எம். உள்ளிட்டு எந்தவொரு ஓட்டுக் கட்சியும் அம்பலப்படுத்தத் துணியவில்லை.**

நாகரீகமாகச் சொன்னால் இந்த முரண்பாட்டை, பச்சையாகச் சொன்னால் இந்தப் பித்தலாட்டத்தைப் பற்றி சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் சுந்தரத்திடம் கேட்டபொழுது, ''பிரதமர் என்ற மரியாதை நிமித்தம் அழைத்தோம்'' என நியாயப்படுத்திப் பேசினார். குடும்பத்தின் மானத்தை விற்பவனை வீட்டிற்குள்ளேயே சேர்க்க மாட்டோம், நாம். ஆனால், நாட்டின் மானம், மரியாதையை ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைத்து வரும் வாஜ்பாயியை அழைத்து, முதல் மரியாதை கொடுக்கிறது, சுதேசி விழிப்புணர்வு இயக்கம்.

இது ஒருபுறமிருக்க, சுதேசி தொழில் கண்காட்சி 2001-ஐ நடத்தும் கமிட்டியில் பொள்ளாச்சி மகாலிங்கமும் ஓர் உறுப்பினர்; வரவேற்புக் குழுவின் தலைவர். இவர், சக்தி குழும நிறுவனங்களின் அதிபர் என்பது பலரும் அறிந்த விசயம். ஆனால், இவரைப் பற்றி பலரும் அறியாத விசயம் என்னவென்றால், எந்த கோகோகோலா, பெப்சியின் வருகையால் 13,000 உள்நாட்டு குளிர்பானங்கள் மூடப்பட்டு விட்டதாக சுதேசி விழிப்புணர்வு இயக்கம் பிரசுரம் போட்டு பிரச்சாரம் செய்கிறதோ, எந்த பெப்சி, கோகோ கோலா நடத்தும் அரைகுறை மழை நடனத்தால், பெண்மை சீர்கெடும் என எச்சரிக்கிறதோ, அந்த பெப்சி கோலாவின் கோவை மாவட்ட ஏஜண்டுதான் பொள்ளாச்சி மகாலிங்கம். அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனத்தின் தரகன் சுதேசி பற்றிப் பேசலாம் என்றால், விபச்சாரத் தரகர்கள் கூட கற்பின் காவலர்களாக இருக்கலாம்.

சுதேசி தொழில் கண்காட்சியில், ஒருபுறம் உள்நாட்டில் கிடைக்கும் மூலதனத்தையும், தொழில்நுட்பத்தையும் பயன்படுத்திக் கொண்டுள்ள, பன்னாட்டு நிறுவனங்களின் தாக்குதலைத் தாக்குப் பிடிக்க முடியாமல்

www.padippakam.com


திணறிக் கொண்டிருக்கும் சிறுதொழில்/குடிசை தொழில்/கை வினைஞர்களின் கடைகள்; மறுபுறம் டாடா, எஸ்ஸார், அசோக் லேலண்ட், எம்.ஆர்.எப்., மஹிந்திரா உள்ளிட்டு, பன்னாட்டு நிறுவனங்களோடு தொழில்நுட்பக் கூட்டும், மூலதனக் கூட்டும் கொண்டிருக்கும் தரகு முதலாளித்துவ நிறுவனங்களின் கடைகள்.

முதல் இரகத்தைச் சேர்ந்த முதலாளிகள் தாராள இறக்குமதியை அரசு நிறுத்த வேண்டும் எனக் கோருபவர்கள்; இரண்டாவது ரகத்தைச் சேர்ந்த முதலாளிகளோ தாராளமயத்தை இன்னும் தீவிரமாக அமலப்டுத்த வேண்டும் எனக் கோருபவர்கள். இந்த இரு வேறுபட்ட முதலாளிகளையும் எப்படி ஒரே மாதிரியாக ''சுதேசி'' முதலாளிகளாகப் பார்க்க முடியும் எனக் கேட்டதற்கு, சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் சுந்தரம், ''எங்களைப் பொருத்தவரை அந்நிய தொழில்நுட்பக் கூட்டு, மூலதனக் கூட்டு என்பதெல்லாம் பிரச்சினையல்ல. ஒரு நிறுவனத்தில் 51 சதவீத முதலீடு இந்தியர்களின் கையில் இருந்தால், 49 சதவீத மூலதனம் அந்நியர்களின் கையில் இருந்தாலும் கூட, அந்த நிறுவனம் சுதேசி நிறுவனம் தான்'' என்று ஒரே போடாக போட்டார். இந்த விளக்கத்தின் பின்னேதான் ஆர்.எஸ்.எஸ். கும்பல் முன் வைக்கும் சுதேசியின் பித்தலாட்டமும், ஏகாதிபத்தியங்களிடம் கூட்டு வைத்துக் கொண்டுள்ள தரகு முதலாளிகளின் நலனுக்காகத்தான் சுதேசி விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்படுகிறது என்பதும் அடங்கியுள்ளது

தாராளமயத்தை எதிர்ப்புக்காகக் கூறும் போலி கம்யூனிஸ்டுகள், ஆர்.எஸ்.எஸ்.-ஐத் தங்களின் முதல் எதிரி என்று கூறும் போலி கம்யூனிஸ்டுகள், கோவையை தங்களின் கோட்டை என்று மார்தட்டிக் கொண்டு திரியும் போலி கம்யூனிஸ்டுகள், அவர்களின் கோட்டையில், அவர்களின் முதல் எதிரி நடத்திய இந்த சுதேசி பித்தலாட்டக் கண்காட்சியை அம்பலப்படுத்தி, ஒரு தட்டி கட்டி வைக்கக் கூடத் துப்பின்றிக் கிடந்தார்கள். பிறகு அவர்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பில் என்ன கொள்கை - கோட்பாடு - நாணயம் கொட்டிக் கிடக்கிறது! தாராளமய எதிர்ப்பு போலிகளுக்கு ஒட்டு பொறுக்குவதற்கான மலிவான தந்திரம் தவிர வேறென்ன!

★ ★ ★

இந்திய மக்களைப் பொருத்தவரையில் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்த்த ''சுதேசி'' உணர்வும், ''சுதேசி'' போராட்டம் - இயக்கமும் ஆர்.எஸ்.எஸ். சொல்லிக் கொடுக்க வேண்டிய அளவிற்கு புதிய விசயங்களல்ல. இன்னும் சொல்லப் போனால், காந்தியும், காங்கிரசும் சொல்லிக் கொடுத்துதான் இந்திய மக்களிடம் சுதேசி உணர்வு ஏற்பட்டது என்பதும் உண்மையல்ல. இந்திய மக்களின் சுதேசி உணர்வுக்கும் போராட்டத்திற்கும் நூறாண்டு கால வரலாறு உண்டு.



**சுதேசி தொழில்கண்காட்சியில் தரகு முதலாளிகளின் தயாரிப்புகளுக்கும் இடம் கொடுத்தது ஆர்.எஸ்.எஸ்.இன் சுதேசி!**

''1905-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வங்காளத்தை இரண்டாகப் பிரிக்க முடிவு செய்த பொழுதே, இந்திய மக்கள் மத்தியில் சுதேசி போராட்டம் வெடிக்கத் தொடங்கி விட்டது. வங்காளப் பிரிவினையை எதிர்த்து, மனு கொடுப்பது, பத்திரிகையாளர்களைச் சந்திப்பது, (இந்து) நிலப்பிரபுக்களைக் கொண்டு மாநாடு, பொதுக் கூட்டம் நடத்துவது என காங்கிரசு நடத்திய உப்பு சப்பில்லாத இயக்கங்கள் தோல்வியைத் தழுவிய அதே சமயத்தில், வங்காள மக்கள் தன்னெழுச்சியாக பிரிட்டிஷ் பொருட்களைப் புறக்கணிக்கும் சுதேசி இயக்கத்தைத் தொடங்கினர்.''

''இந்தப் போராட்டம் வெறும் பிரிட்டிஷ் பொருட்களைப் புறக்கணிப்பதோடு மட்டும் சுருங்கிப் போய்விடவில்லை; அது, அந்நிய அரசியல், பொருளாதார ஆதிக்கத்தை எதிர்த்த போர்க் குணமிக்க இயக்கமாகவும், பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கி எறிவதை நோக்கமாகவும் கொண்டிருந்தது.

மக்களின் போராட்டத்தைக் கண்டு பயந்து போன பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அந்தச் சமயத்தில் வங்காளப் பிரிவினையைக் கைவிட்டபொழுது, இது, எங்களின் அரசியல் கோரிக்கைகளுள் மிகவும் சாதாரணமான, குறுகிய கோரிக்கை'' என்றார், அரவிந்த கோஷ். *(''அரசியல் பொருளாதாரம் பற்றிய ஆராய்ச்சிக் குழு'' வெளியிட்டுள்ள ''துரோகமிழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்டம்'', பக். 27-29)*

இந்திய மக்களிடம பற்றிப் படர்ந்திருந்த ''சுதேசி'' இயக்கம் என்பது அந்நியப் பொருட்களையும் புறக்கணித்ததோடு, அந்நிய அரசியல், பொருளாதார ஆதிக்கத்தை, ஆட்சியைத் தூக்கி எறிவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால், ஆர்.எஸ்.எஸ். -இன் சுதேசி விழிப்புணர்வு இயக்கமோ எல்லா விதமான அந்நியப் பொருட்களையும் புறக்கணிப்போம் என்று கூடக் கூறுவதில்லை.

''நம் நாட்டிற்கு மிக தேவையானவைகளை, இந்தியர்களாகிய நாம் அமெரிக்காவிடம் கேட்டது சூப்பர் - கம்ப்யூட்டர் தொழில்நுட்பம். ஆனால், அவர்கள் நமக்குக் கொடுத்ததோ கோகோ கோலா, பெப்சி; நாம் கேட்டது தொலைதூர ஏவுகணைக்கான கிரையோஜினிக் என்ஜின். அவர்கள் கொடுத்ததோ கோல்கேட் பேஸ்ட்; ஹால்ஸ் மிட்டாய். நாம் வேண்டியது கம்ப்யூட்டர் சிப்ஸ். ஆனால் அவர்கள் நமக்குக் கொடுத்ததோ உருளைக் கிழங்கு சிப்ஸ்... நம்மை மடையர்களாக்குகின்ற அமெரிக்காவிற்குப் பாடம் புகட்ட ஒரே வழி கோகோ, பெப்சியைப் புறக்கணித்து இந்தியத் தயாரிப்புகளைப் பயன்படுத்துவதே ஆகும்.'' (சுதேசி விழிப்புணர்வு இயக்கம் வெளியிட்டுள்ள பிரசுரம்)

அழகு சாதனப் பொருட்கள், நுகர் பொருட்கள், உணவுப் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள பி.பி.எல்., ஒனிடா, கோத்ரெஜ், வீடியோகான் போன்ற தரகு முதலாளிகள், நிர்மா, வீ.வீ.வீ., ஆனந்தம் போன்ற சில பெரும் தேசிய முதலாளிகளின் நலனில் இருந்து பன்னாட்டு நிறுவனங்களின் நுகர் பொருள் தயாரிப்புகளை மட்டும் புறக்கணிக்கச் சொல்லி ''சுதேசி'' இயக்கம் நடத்தி வரும் ஆர்.எஸ்.எஸ்., அதற்கு மேல் ''சுதேசி'' பற்றி என்ன சொல்கிறது?

''சுதேசி என்பது ஒரு தவம். ஒரு விரதம். ஒரு சங்கல்பம். ஒரு சபதம்.'' (எது சுதேசி? ஏன் சுதேசி?)

இதைப் படித்த பிறகு, சுதேசி விழிப்புணர்வு இயக்கம் என்பது போராட்ட இயக்கமா? இல்லை, ''உஞ்சவிருத்தி''க்காகப் பார்ப்பன அக்கிரகாரங்களைச் சுற்றி வரும் பஜனை கோஷ்டியா? என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். மக்களிடம் இருக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை மழுங்கடிக்கும் பஜனை கோஷ்டிதான் சுதேசி விழிப்புணர்வு இயக்கம் என்பதற்கு இதோ, இன்னொரு உதாரணம்: ''பண்டிகை நாட்களில் குடும்பத்துடன் ஆலயம் சென்று வழிப

தொடர்ச்சி 16-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

அரசியல் தரகு வேலை செய்வதில் தலை சிறந்தவராக விளங்கியவர், மறைந்த சி.பி.(எம்) தலைவர் பி. இராமமூர்த்தி. அது குறித்து அவர் பெருமையாகவே எல்லோரிடமும் கூறிக் கொள்வது வழக்கம். ஜவகர்லால் நேரு - ஷேக் அப்துல்லா, இராஜாஜி - அண்ணாதுரை ஆகியோருக்கு இடையே அரசியல் தரகு வேலை செய்து புகழ் பெற்றவர். கடைசியாக, மாநிலங்களவையில் தன்னுடைய உறுப்பினர் பதவிக்காக, தனது எதிர்க்கட்சியிடமே பேரம் பேசி, அம்பலமாகி, அரசியல் தலைமைக் குழு பதவியையும் இழந்தவர்.

அரசியல் தரகு வேலையில் பி. இராமமூர்த்தியையும் விஞ்சிவிட்டார், அக்கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளர் அரிகிஷன் சிங் சுர்ஜித். இந்த வேலையில் வல்லவராக இருப்பவர்கள், எப்படி வேண்டுமானாலும் பொருள்படும் வகையில் ஆவணங்கள் தயாரிப்பதிலும் வல்லவர்களாகத்தானே இருப்பார்கள். இவர்தான் சி.பி.(எம்) கட்சியின் 1964 திட்ட நகலை வரைந்தவர்களில் ஒருவர்; இவரேதான் அதையே ''மேம்படுத்த'' 2000 நவம்பர். திட்டத்தையும் வரைந்துள்ளார்.

''மேம்படுத்தப்பட்ட'' திட்டத்தை நிறைவேற்றுவதற்காக திருவனந்தபுரத்தில் கூடிய சிறப்பு மாநாட்டில் துவக்க உரை ஆற்றினார் சுர்ஜித். சி.பி.(எம்) கட்சியின் 1964 திட்டம் கடந்த சில பத்தாண்டுகளின் அரசியல் மாற்றங்களுக்கேற்ப ஏறக்குறைய சரியான செயல் தந்திரங்களை வகுப்பதற்கு உதவியது என்கிறார், சுர்ஜித். தொழிற்துறையில் பெரு முதலாளிகளுடன் கூடிக் குலாவுவது முதல் பதவி சுகத்துக்காக, நாற்காலிகளைப் பிடிப்பதற்காக கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, சந்திரபாபு நாயுடு, முலயம், லல்லு, பவார், அகாலி மற்றும் கேரள சாதி - மதக் கட்சிகள் என்று சந்தர்ப்பவாத அரசியல் நடத்துவதற்கு 1964 திட்ட அடிப்படையில் அக்கட்சி நியாய - வியாக்கியானங்கள் செய்ய முடிந்தது. மக்களுக்கு இடைக்கால நிவாரணங்கள் வழங்குவதற்கு மாநில அரசுகளில் பங்கேற்பது; அதற்கேற்றவாறு கட்சி அமைப்புகளைக் கட்டி இயக்குவது; அதன்பிறகு அந்த அரசுகளைக் காத்து, மாநிலத் தொழில் வளர்ச்சிக்குப் பாடுபடுவது என்ற புரட்சி - வர்க்கக் கண்ணோட்டமில்லாத நடைமுறையை, அத்திட்டத்தின் பிரிவுகளைக் காட்டி நியாயப்படுத்தினர்.

தற்போதைய அரசு அமைப்புக்குள்ளேயே சீர்திருத்தங்களைச் செய்வது; அதற்காக நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பது என்ற திருத்தல்வாதப் பாதையைத்தான் சுர்ஜித் சாதனையாகத் தொகுத்துத் தருகிறார்.

''தற்போதைய (அரசு) கட்டமைப்புக்குள்ளாகவே நிலச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதும் உபரி நிலங்களை நிலமற்றவர்களுக்கு விநியோகிப்பதும் சாத்தியமானதென்று மேற்கு வங்கம், கேரளம், திரிபுரா மாநிலங்களில் உள்ள இடது சாரிகள் தலைமையிலான அரசாங்கங்கள் நிரூபித்துள்ளன.''

''நிலச்சீர்திருத்தங்கள், உள்ளூராட்சி மற்றும் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரப் பரவல், உழைக்கும் மக்கள் ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தும் நிலைமைகளை உருவாக்குவது, சாதி - மத - வகுப்பு நல்லிணக்கத்தைப் பராமரிப்பது, மதச்சார்பின்மை மதிப்பீடுகளைப் பாதுகாப்பது - இவையெல்லாம் இடதுசாரிகள் தலைமையிலான அரசாங்கங்களின் சாதனைகள்'' என்று அடுக்குகிறார் சுர்ஜித்.

கம்யூனிஸ்டுகளின் திட்டம் என்பது, இத்தகைய சீர்திருத்தங்களைச் சாதிப்பதற்கானதாக இருக்க முடியுமா? ''இடைக்கால நிவாரணம், செயல் தந்திர அரசியல் வேலை'' என்கிற பெயரில் சி.பி.(எம்) இதைத்தான் செய்து வருகிறது. கம்யூனிசத் திட்டத்தின் உள்ளடக்கம், நோக்கம், அடிப்படை குறித்துப் பின்வருமாறு சுர்ஜித்தே விளக்கமளிக்கிறார்:

''கம்யூனிசக் கட்சிக்குத் திட்டம் என்பது ஒரு சாதாரண ஆவணமல்ல. அடிப்படை சமூக மாற்றத்துக்கான பாதையை முன்வைக்கிறது; கட்சி நடந்து செல்ல விரும்பும் புரட்சிப் பாதையை முன்வைக்கிறது. அது விருப்பங்களையும் ஆசைகளையும் முன்வைக்கும் ஒரு அறிக்கையல்ல. அது இந்திய சமூகத்திலுள்ள வர்க்கங்கள், வர்க்கத் தன்மை, சமூகச் சுரண்டல், இந்திய அரசின் தன்மை, புரட்சிகர மாற்றத்தை சாதிப்பதற்காகச் சுரண்டப்படும் வர்க்கங்கள் கட்டி அமைக்க வேண்டிய புரட்சிகர முன்னணி ஆகியவை பற்றிய ஒரு அறிவியல் பூர்வமான ஆய்வு'' என்கிறார் சுர்ஜித்.

சுர்ஜித்தின் இந்த விளக்கம் கம்யூனிசத் திட்டத்தின் அடிப்படையான, முதன்மையான கடமையாகிய தற்போதைய அரசு அமைப்பைத் தகர்த்து, மாற்று அரசியல் அமைப்பை நிறுவுவது என்ற புரட்சிகர அரசியல் கடமையைத் திட்டமிட்டே மறைக்கிறது என்பது ஒருபுறம் இருக்கட்டும் அவரே குறிப்பிடும் புரட்சிகர மாற்றத்துக்கான, அடிப்படை சமூக மாற்றத்துக்கான புரட்சிகர முன்னணியைக் கட்டியமைப்பதற்கு அவர்களுடைய திட்டம் எத்தனை தூரம் உதவியிருக்கிறது. மேற்கு வங்கம், கேரளா, திரிபுராவில் அமைந்துள்ள சி.பி.(எம்) தலைமையிலான இடதுசாரிக் கூட்டணிதான் அத்தகைய புரட்சிகரக் கூட்டணியா என்றால், அதுவுமில்லை என்கிறார்கள்.

அல்லது, கருணாநிதி, ஜெயலலிதா, மூப்பனார், முலயம், லல்லு, பவார் அகாலி மற்றும் கேரள சாதி - மத அமைப்புகளுடன் தேர்தலுக்குத் தேர்தல் மற்றும் சந்தர்ப்பவாதக் கூட்

**முன்னாள் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் தேவே கவுடா, குஜ்ராலுடன் சுர்ஜித்: உடைந்த பானையை மீண்டும் ஒட்ட முயற்சியா?**



www.padippakam.com

டணிகள்தாம் அத்தகைய புரட்சிகரக் கூட்டணியா என்றால், இதுவுமில்லை என்கிறார்கள். பிறகு 1964 கட்சித் திட்ட அடிப்படையிலான சாதனை - முன்னேற்றம்தான் என்ன?

''நாட்டின் இடதுசாரி இயக்கத்துக்குள் பெரிய பிரிவாக சி.பி.(எம்) தோன்றியிருப்பது திட்டத்தால் முன்வைக்கப்பட்ட சரியான யுத்த தந்திரத்தினால்தான்'' என்கிறார். இது ஒரு சாமர்த்தியமான பித்தலாட்டம். தேர்தல் தோல்விகளை ஓட்டுக் கட்சிகள் சமாளிக்கும் விதம் இதில் அடங்கியிருக்கிறது. தோற்றுப் போனாலும் வாக்கு எண்ணிக்கை கூடியிருக்கிறது அல்லது சதவிதம் அதிகமாக இருக்கிறது என்று புள்ளி விவர மோசடி வாதம் செய்வது போன்றது. இடதுசாரி இயக்கம் என்று சுர்ஜித் குறிப்பிடுவது ஓட்டுக் கட்சி இடதுசாரி இயக்கத்தைத்தான். அந்த இயக்கம் பின்னடைவுக்கும் தேக்க நிலைக்கும் உள்ளாகி பல ஆண்டுகளாகின்றது. அதற்குள் பெரிய பிரிவாக சி.பி.(எம்) உருவாகிவிட்டது. ஒரு சாதனையைப் போலவும் அதற்குக் காரணம் அக்கட்சியின் 1964 திட்டம் சரியானதும் என்றும் சித்தரிக்கிறார் சுர்ஜித்.



**கரசேவைக்கு ஆளனுப்பிய ஜெயாவுடன் 'மதச்சார்பற்ற' கூட்டணி காணுகிறது சி.பி.எம்.**

இடதுசாரி இயக்கத்துக்கு வெளியே, நாட்டு அரசியலில் அவர்களின் நிலை என்ன? சுர்ஜித்தே பின்வருமாறு கூறுகிறார். ''இடதுசாரி ஜனநாயக சக்திகளுக்குச் சாதகமாக நாட்டின் அரசியல் அணி சேர்க்கையில் மாற்றம் கொண்டு வருவதில் நாம் வேண்டிய - விரும்பிய அளவு இன்னமும் செய்ய முடியவில்லை. அதேசமயம் சி.பி.(எம்) கட்சியும் இடதுசாரி சக்திகளும் தாராளமயம், வகுப்புவாதம் ஆகியவற்றின் தாக்குதலுக்கு எதிரான போராட்டத்தில் முக்கிய பாத்திர மாற்றுவதற்குக் காரணம் 1964 திட்டம்தான்; அதுதான் ஏகாதிபத்தியம், ஏகபோக முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம் ஆகியவை சமூக மாற்றத்துக்கான பெருந்தடை என்று அடையாளப்படுத்தியது'' என்கிறார் சுர்ஜித்.

இதுதான் சி.பி.(எம்) கட்சியின் மிகப் பெரிய மோசடி. நாடாளுமன்ற அரசியல் நடவடிக்கைகள் தவிர, அதற்கு வெளியே குறிப்பிடும்படி சி.பி.(எம்) எதுவுமே செய்தது கிடையாது. நாடாளுமன்ற அரசியலிலும் மூன்றாம் நிலையில் அல்ல, நான்காம் நிலைக்கே தள்ளப்பட்டு விட்டது. மூன்று மாநிலங்களில் மட்டுமே இயங்கும் பிராந்தியக் கட்சியாக முடங்கிப் போயிருக்கிறது. அந்தத் தேக்க நிலையை நாடாளுமன்ற இடது சாரி கூட்டணியால் உடைக்கவே முடியவில்லை. பா.ஜ.க.வும் காங்கிரசும் தவிர பிற முதலாளித்துவ கட்சிகள்தாம் மூன்றாம் நிலையில் உள்ளன. அவை பிராந்தியக் கட்சிகள்தாம் என்பது வேறு விடயம்.

கட்சியின் 1964 திட்டததை மேம்படுத்துவதன் அவசியம் குறித்து பின்வருமாறு சுர்ஜித்தே குறிப்பிடுகிறார். ''1964 போலன்றி ஒரு கட்சி ஆதிக்க நாட்கள், காங்கிரசின் ஏகபோக அதிகார நாட்கள் முடிந்து விட்டன. காங்கிரசின் ஏகபோக அதிகாரத்தைத் தகர்ப்பதற்கான போராட்டத்திற்கு சி.பி.(எம்) மிகவும் பங்களித்திருக்கிறது. உருவாக்கப்பட்ட வெற்றிடத்தை துரதிருஷ்டவசமாக ஜனநாயக சக்திகள் நிரப்பவில்லை. அதற்கு மாறாக, வகுப்புவாத இருண்ட சக்திகள் பிடித்துக் கொண்டன. அது ஒரு பிற்போக்கு மாற்றாகும்; அதன் அடிமட்டமான வகுப்புவாத, வலதுசாரி சித்தாந்தத்தைக் கொண்டது'' என்கிறார் சுர்ஜித்.

குட்டி திரிபுரா உட்பட மூன்று மாநிலங்களில் மட்டுமே காங்கிரசைத் தோற்கடிக்கக் கூடிய பலமுள்ள சி.பி.(எம்), (அதுவும் கூட்டணியாக) அதன் ஏகபோக அதிகாரத்தைத் தகர்ப்பதில் முக்கிய பங்காற்றியதாகக் கூறுவது முதற் பொய். 1977 தேர்தல்களில் காங்கிரசின் வீழ்ச்சிக்குக் காரணம் சி.பி.(எம்) புறக்கணித்த, ஒதுங்கி கொண்ட ஜெயப்பிரகாஷ் நாராயணனின் ''மொத்தப் புரட்சி'' இயக்கம்தான். 1989 தேர்தல்களில் காங்கிரசின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணம் வி.பி.சிங். கிளப்பிய போபர்ஸ் முதலிய ராஜீவின் இலஞ்ச - ஊழல் விவகாரம். 1996, 98 மற்றும் 99 தேர்தல்களில் காங்கிரசின் வீழ்ச்சிக்குக் காரணம் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மாற்று சக்தியாக வளர்ந்ததுதான். எப்போதுமே காங்கிரசின் ஒரு கட்சி ஆட்சியை வீழ்த்துவதில் சி.பி.(எம்) முக்கிய பங்காற்றியதே கிடையாது.

ஆக, காங்கிரசுக்கு மாற்று சக்தியாக பா.ஜ.க. உருவானதும், இரண்டுக்கும் மாற்றாக சி.பி.(எம்) உருவாக்க முயன்ற மூன்றாவது அணி படுதோல்வி கண்டதும் சுர்ஜித் கட்சியின் 1964 திட்டத்தின் தவறான பார்வையை நிரூபிக்கின்றன. அவர் உரிமை பாராட்டுவதைப் போல அத்திட்டம் சரியான தன்மையுடையது என்று காட்டவில்லை.

நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே சி.பி.(எம்) நடைமுறை உண்மையில் கேலிக்குரியதாகும். தாராளமயம், வகுப்புவாதம் ஆகியவற்றின் தாக்குதலுக்கு எதிரான போராட்டத்தில் சி.பி.(எம்) மற்றும் இடதுசாரி சக்திகள் முக்கியப் பங்காற்றுவதாகக் கூறுவது வடிகட்டாத பொய்யாகும். தாராளமயத்துக்கு எதிராக பெயரளவுக்கான பொது வேலை நிறுத்த அறைகூவல் விடுவதற்கு மேல் இவர்கள் எதுவுமே செய்ததில்லை. தொலைபேசி, வங்கி, காப்பீடு போன்ற துறைகளில் தனியார்மயம் வந்த போது நாடாளுமன்றத்தில் வெறும் கூச்சல் போட்டதோடு சரி, அந்தந்த துறை சார்ந்த அடையாள வேலை நிறுத்தங்களோடு சரி. பொதுத்துறை விற்பனையின் போதும், கட்டாய ஓய்வு, வேலை பறிப்பு, விருப்ப ஓய்வு போன்றவற்றின் போதும் வெளியில் எதிர்ப்புக் காட்டுவது போல நடித்துக் கொண்டே ''வேறு வழியில்லை தோழர்களே, ஓய்வு பெற்றுக் கொள்ளுங்கள்!'' என்று வழிகாட்டுவதோடு சரி. மற்றபடி தாராளமயத்தைப் பாதிக்குமாறு - சான்றாக மராட்டியத்தில் என்ரான் எதிர்ப்பு, கோவாவில் டூபாண்ட் எதிர்ப்பு, ஆந்திராவில் மின் கட்டண உயர்வு எதிர்ப்பு போன்று - எந்தப் போராட்டமும் சி.பி.(எம்) தலைமையில் நடந்ததில்லை.

தாராளமய எதிர்ப்புக்கான தார்மீக உரிமைகூட சி.பி.(எம்) கட்சிக்குக் கிடையாது. இவர்கள் சோசலிச நாடுகள் எனக் கூறிக் கொள்ளும் சீனா, வியத்நாம் போன்றவை உலகமயம், தாராளமயம், தனியார்மயம் ஆகியவற்றை சந்தை சோசலிசம் என்ற பெயரால் ஏற்றுக் கொண்டுள்ளன. அவை உலக வர்த்தக சபையின் நிபந்தனைகளை ஏற்று, அதில் அங்கமாகி அதில் உறுப்பினராக முடிவு செய்துள்ளன. மாநிலத் தொழில் முன்னேற்றம், வேலை வாய்ப்புப் பெருக்கம் என்ற பெயரில் தனியார்மயம் - தாராளமயமாகக்கலை சி.பி.எம். ஆளும் மாநிலங்களிலேயே கடைப்பிடிக்கின்றன. அதுமட்டுமல்ல, 1993 ஆகஸ்டு இரண்டாவது விடுதலைப் போராட்ட அறிவிப்புக்குப் பிறகு பா.ஜ.க. ஆட்சிக்கு வரும்வரை தாராளமயமாக்க எதிர்ப்பு அரசியலைக் கிடப்பில் போட்டு விட்டார்கள். இடதுசாரி கூட்டணியின் ஆதரவு பெற்ற ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது, கொண்டு வரப்பட்ட தாராளமயமாக்கலை எதிர்த்தார்களா?

அதேபோலத்தான் வகுப்புவாத எதிர்ப்பு என்பது கூட வெறும் சவடாலாகத்


படிப்பகம்

www.padippakam.com

தான் உள்ளது. கண்டன அறிக்கை - பேச்சு, மத நல்லிணக்க மாநாடுக்கு மேல் ஒன்று மில்லை. மதச்சார்பற்ற கூட்டணி என்பதே ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் கூட்டணிதான். தேர்தல் அரசியலுக்கு மேல் ஒரு வெங்காய மும் கிடையாது. பாபரி மசூதி இடிப்புக்கு உடந்தையாக இருந்த காங்கிரசு, ஜெயலலிதா வுடன் கூட்டுச் சேர்ந்து மதச்சார்பற்ற கூட் டணி என்பதே பித்தலாட்டம் தவிர வேறென்ன?

தாராளமயம் வகுப்புவாதம் ஆகியவற் றுக்கு எதிரான போராட்டத்தில் சி.பி.(எம்) மற்றும் இடதுசாரிகள் முக்கியப் பங்காற்றுவ தற்கு காரணம் 1964 கட்சித் திட்டத்தின் சரி யான கோட்பாடுகள்தாம் என்றால் அவை என்னென்ன காட்ட வேண்டாமா? "மொட் டைத்தாசன் குட்டையில் விழுந்தான்" என்ப தைப் போல சமூக மாற்றத்துக்கு பெரும் தடைகள் என ஏகாதிபத் தியம், ஏகபோக மூலத னம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றை 1964 திட் டம் அடையாளம் காட்டி விட்டதென கூறுகிறார். இவற்றுக்கு எதிராக சி.பி.(எம்) என்ன செய் தது? தாராளமயத்துக் கும் வகுப்பு வாதத்துக் கும் இவற்றுக்கும் என்ன தொடர்பு என்பதை வைத்து இவர்கள் போரா டியதுண்டா? தாராளம யம் என்றால் அது காங் கிரசு - பா.ஜ.க. கட்சிக் ளின் தவறான கொள்கை கள் என்றும், வகுப்புவா தம் என்றால் பா.ஜ.க. வின் தவறான கொள்கை என்றும் ஆளும் கட்சி களையும் அவற்றின் கொள்கைகளையும் மாற் றினால் எல்லாம் சரியாகி விடும் என்பதுதானே சி.பி.(எம்)-இன் அணுகுமுறை!

★ "நமது நாட்டின் பொருளாதார இறை யாண்மைக்கு ஆபத்து விளைவித்து மக்களு டைய வாழ்க்கையை நாசமாக்கும் வகையில் ஏகாதிபத்தியம் முன்தள்ளும் உலகமயமாக்கம்"

★ "வகுப்பு நல்லிணக்கத்தையும் தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைப்பதில் முழு மூச்சாக இறங்கியிருக்கும் சக்திகள்"

- இவை இரண்டையும் உறுதியாக எதிர்ப்பதுதான் சி.பி.(எம்) முன்வைக்கும் உடனடிக் கடமைகள்.

"இன்றைய புதிய உலக நிலைமைகளில் ஏகாதிபத்தியத்தின் மேலும் மூர்க்கமான தாக் குதல்களையும், தேசத்தின் கௌரவம், சுதந்தி ரத்துக்காக வலிந்து நிற்காத ஆளும் வர்க்கங் களின் கேடு விளைவிக்கும் உள்நாட்டுக் கொள்கைகளையும் எதிர்த்துப் போராடுவ தற்கு அவசியமான செயல்தந்திர வழிகாட்டு தல்களைத் தற்போதைய யுத்த தந்திரத் திட் டம் தருகிறது" என்கிறார் சுர்ஜித்.

ஏகாதிபத்திய உலகமயமாக்கலால் வரும் தாக்குதல்கள், ஆளும் வர்க்கங்களின் மக்கள் விரோத - தேசவிரோத கொள்கைகள், இவற்றால் நாட்டின் இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஏற்படும் ஆபத்து குறித்து மீண்டும் மீண்டும் இவர்கள் வாய் கிழிய நீட்டி முழக்குவது இருக்கட்டும். இவற்றுக்கு எதிராக இவர்கள் என்ன செய் யப் போகிறார்கள், மேம்படுத்தப்பட்ட திட் டம்தான் என்ன வழி காட்டுகிறது?

திட்டத்தை நிறைவேற்றிய மாநாட்டுத் தலைவரும், சாதனை கால மேற்கு வங்க முதல்வருமான ஜோதிபாசு ஏகாதிபத்தியம், உலகமயமாக்கம், வகுப்புவாதம் ஆகியவற் றின் தாக்குதலை முறியடிப்பதற்கான வழியை எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறார் பாருங்கள்: "தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தினர், பெண்கள், இளைஞர் கள், மாணவர்கள் மற்றும் உழைக்கும் மக்க ளின் பிற பிரிவினரைத் திரட்டி, ஒரு சக்தி வாய்ந்த இயக்கத்தைக் கட்டி அவசியமான சமூக மாற்றத்துக்கு சி.பி.(எம்) முயலும். அதே சமயம், கையிலெடுக்க வேண்டிய உடனடிக் கடமைகள் பற்றியும் உணர்ந்திருக் கிறது. அதற்கு அவசியமான நடவடிக்கை களையும் மேற்கொள்ளும்" என்று உறுதி கூறுகிறார், ஜோதிபாசு.

அது என்ன உடனடிக் கடமை, அவசிய மான நடவடிக்கை என்றால், "மீன்காரனுக்கு மிதவை மீதுதான் கண்" என்பதைப் போல, நாற்காலியைக் குறிவைத்தே விளக்குகிறார் ஜோதிபாசு! "இன்றைய உடனடி அவசியம் மத்தியில் அதிகாரத்திலுள்ள பா.ஜ.க.வுக்கு ஒரு மாற்று அணி மற்றும் கடந்த 40 ஆண்டு களாக காங்கிரசு பின்பற்றி வந்த கொள்கை களில் இருந்து ஒரு விலகல்" என்கிறார்.

அதாவது, "மூன்றாவது அணிதான் இன் றைய அவசியம் என்று சமூக மாற்றங்கள் வலியுறுத்துகின்றன. கடந்த மூன்றாண்டுக ளில் சிதறிப் போன சக்திகள் மீண்டும் இப் போது ஒன்று திரளுகின்றன. மத்திய அரசு மேற்கொள்ளும் பொருளாதாரக் கொள்கை களால் மிகவும் துன்ப துயரத்துக்குள்ளான எல்லாப் பிரிவு மக்களும் போராடுவதும் இயக்கங்கள் நடத்துவதும் அதிகரிக்கும் பின் னணியில் அக்குழுக்கள் ஒன்று திரளுகின் றன" என்று சரடு விடுகிறார் ஜோதிபாசு. அதாவது முன்னாள் பிரதமர்கள் சந்திரசேகர், வி.பி.சிங், குஜரால், தேவே கவுடா ஆகி யோர் புது தில்லியில் கூடி ஆண்டிகள் மடங் கட்டுவதைப் போல் அரட்டை அடித்துக் கலைந்து போவதைத் தான் மூன்றாவது அணி ஒன்று திரள்வ தாக ஊதிப் பெருக்கு கிறார்.

இந்த மூன்றாவது அணி என்பது நொண்டிக் குதிரை யின் மீது பந்தயம் கட்டுவதுதான் என் பது சி.பி.(எம்) தலை வர்களில் பலருக்கும் தெரியும்; தமிழ்நாடு, பீகார் போன்ற பல மாநிலங்களிலும் "மூன்றாவது அணி கூடாது, அது 'போணி ஆகாது' என்று கூறி ஜெயலலி தாக்கள், லல்லுக்க ளோடு போய் காங்கி ரசுடன் அணி சேரவே மாநிலத் தலைமை துடிக்கிறது. என்றாலும் கை நழுவிப் போன பிரதமராகும் வாய்ப்புக்காக ஏங்கி நிற்கும் ஜோதிபாசு - சுர்ஜித் குழு மூன்றாவது அணி அமைக்கும் கனவில் இருந்து கலையவில் லை.

இருந்தபோதும் நடைமுறை என்னவோ பா.ஜ.க.வுக்கு எதிராக காங்கிரசுடன் அணி சேர்வதாகவே உள்ளது. மதச்சார்பற்ற கூட் டணி என்கிற பெயரில் காங்கிரசோடு சேரும் அதேசமயம், காங்கிரசோ தாராளமயமாக்க லில் பா.ஜ.க.வுடன் அணிசேருகிறது. வகுப்பு வாதம், தாராளமயம் இரண்டையும் எதிர்த் துப் போராட அணி சேர்ப்பது பகற் கனவே. (சி.பி.(எம்), காங்கிரசு இரண்டினதும் மதச் சார்பின்மையே போலியானது; உண்மையில் இந்து மதவாத அடிப்படையிலானது என்பது இன்னொரு விடயம்). பெயரளவுக்காவது சி.பி.(எம்) அமைக்கும் மதச்சார்பற்ற கூட்



**உலக வர்த்தகக் கழகத்தின் உருவ பொம்மையை எரிக்கும் 'மார்க்சிஸ்டு' தொண்டர்களே, மேற்கு வங்கத்தில் தாராளமயத்தை நடைமுறைப்படுத்தும் உங்களின் தலைவர்களை என்ன செய்யப் போகிறீர்கள்?**

www.padippakam.com

டணி என்பது தாராளமயத்துக்கு எதிரான தல்ல. இந்த உண்மையை அறிந்துதான் (மூன்றாவது அணி) மதச்சார்பற்ற, தாராள மய எதிர்ப்புக் கொள்கை உடையதைப் போல தோன்றும் என்று சி.பி.(எம்) பசப்புகி றது. ஆனால், இந்த மூன்றாவது அணியின் மூலகர்த்தாக்களான வி.பி. சிங், குஜ்ரால், தேவே கவுடா, சந்திரசேகர் உள்ளிட்ட இவர் களில் எவராவது தாராளமய எதிர்ப்பாளர் களா?

ஆக, சி.பி.(எம்)மின் உடனடித் திட்டத் தில் தாராளமயம் - வகுப்புவாத எதிர்ப்பு என்பது வெறும் பித்தலாட்டம்தான். இந்த உண்மயைச் சித்தாந்தச் சவடால்களால் மூடி மறைப்பதுதான், சி.பி.எம். திட்டம். "ஒரு இடது மற்றும் ஜனநாயகக் கூட்டணி அமைப் பது தான் தற்போது பின்பற்றப்படும் தவ றான கொள்கைகளை எதிர்ப்பதற்கு அவசிய மானது என்று சி.பி.எம். கருதுகிறது. அந்தச் செய்வதற்கு வகுப்பவாத ஆபத்தையும், மக் களுடைய பொருளாதார நலன்கள் மீதான தாக்குதலையும் எதிர்த்துப் போராடத் தயா ராக உள்ள அனைத்துச் சக்திகளையும் உடன டியாகத் திரட்ட வேண்டும்" என்கிறார் ஜோதிபாசு.

"சி.பி.(எம்) கட்சி நிறைவேற்றியுள்ள திட்டம், ஒரு தெளிவான பார்வையுடன் நாட் டின் அரசியல் வாழ்க்கையில் தலையீடு செய்ய உதவும்; ஒரு மூன்றாவது அணியை மீண்டும் உருவாக்கி, அதை ஒரு இடதுசாரி ஜனநாயக முன்னணியாகக் கட்டுவதற்கான போராட்டத்துக்கு முன்னெடுத்துச் செல்ல உதவும்" என்கிறார், ஜோதிபாசு.

அப்பாடா புரிந்து விட்டது. காங்கிரசு, பா.ஜ.க. தவிர, முலயம், லல்லு, பவார், சந்தி ரபாபு நாயுடு, ஜெயலலிதா, மூப்பனார், கரு ணாநிதி, வைக்கோ, ராமதாசு, தேவே கவுடா, குஜ்ரால் போன்றவர்களுடன் சேர்ந்து அமைக்கும் மூன்றாவது மாற்று அணியைக் கட்டி, அதிலிருந்து ஒரு இடதுசாரி ஜனநாயக அணியைக் கட்டுவதை நோக்கி போராட் டத்தை முன்னெடுக்கப் போகிறார்கள். இதற் கான வழிகாட்டுதலை மேம்படுத்தப்பட்ட திருவனந்தபுரம் திட்டம் சுட்டிக் காட்டுகிறது. கேழ்வரகில் நெய் வடிகிறது கேளுங்கள் என் கிறார்கள், சி.பி.(எம்) தலைவர்கள். அதை யும் பார்ப்போம்!

(தொடரும்)

## நீதிமன்றத்தை உலுக்கிய பு.மா.இ.மு.வின் ஆர்ப்பாட்டம்

கரூரில் இயங்கி வரும் புரட்சிகர மாண வர் - இளைஞர் முன்னணியைச் சேர்ந்த தோழர் செல்வராசு, ரவுடி கும்பலின் அட்டூ ழியத்தை எதிர்த்து நடந்த போராட்டத்தில் படுகொலை செய்யப்பட்டதை ஏற்கனவே வெளியிட்டிருந்தோம்.

அச்சமூக விரோத, கொலைகார ரவுடி கும்பல் கடந்த 12.01.2001 அன்று நீதி மன்ற விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட னர். அப்பொழுது கரூர் நகர பு.மா.இ.மு. தோழர்கள், "குற்றவாளிகளுக்குப் பிணை வழங்கக் கூடாது; விசாரணையை விரைந்து நடத்து" என முழக்கமிட்டு, நீதிமன்ற வளா கத்தினுள்ளேயே ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அந்த ரவுடிகளுக்கு ஆதரவாக வேட்டு வக் கவுண்டர் சாதித் தலைவர் மருதமுத்து வும் அச்சாதியைச் சேர்ந்த பிற ரவுடிகளும் வந்திருந்தனர். அவர்கள் நீதிமன்ற வளாகத் தில் பு.மா.இ.மு. நடத்திய ஆர்ப்பாட்டத்தில் சலசலப்பு ஏற்படுத்தித் தடுத்துவிட முயன்று, மூக்கறுபட்டுப் போயினர். சாதிப் பிரமுகர்கள் 'சமூகக் காவலர்கள்' எனப் பட் டம் போட்டுக் கொண்டு திரிவது, உண்மை யில் இந்த ரவுடிகள் போன்ற சமூக விரோதக் கும்பலை காப்பாற்றுவதற்குதான் என்பதை இச்சம்பவம் நிரூபித்துக் காட்டியது.

தோழர் செல்வராசைக் கொன்ற ரவுடிகள் ஆதிக்கம் செலுத்தி வரும் பகுதியிலேயே 22.01.2001 அன்று தியாகத் தோழர் செல்வரா சின் படத்திறப்பு நிகழ்ச்சியும், அவரின் மறை வுக்கு அஞ்சலி செலுத்தி வீர வணக்கப் பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டன. 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டு, கரூர் நகரில் ரவுடிகளின் அட்டகாசம் - அட்டூ ழியத்தை எதிர்த்து பு.மா.இ.மு. நடத்தி வரும் போராட்டத்திற்கு ஆதரவளித்தனர்.

தகவல்: பு.மா.இ.மு., கரூர்.

## வாசகர் கடிதம்

★ உழைக்கும் மக்களுக்காகப் போராடி வீர மரணம் அடைந்த போராளி லீலாவதியை வைத்து சி.பி.எம். ஓட்டு திரட்டி வருவது கேவலம். லீலாவதி பெயரைச் சொல்லி பணம் பண்ணி அதை மூடி மறைத்து வைத்திருப்பது சி.பி.எம். கட்சியின் அவல நிலையைக் காட்டுகிறது.

– துரை. பிரசாந்த், சென்னை.

★ தாராளமய தாசர்களும், நவீன எட்டப்பர்க ளும் கட்டுரை தெளிவான விளக்கங்களை தெரி வித்திருந்தது. இது தோழர்களுக்கு நடைமுறை வழிகாட்டியாகவும் இருக்கும் என்பது உண்மை.

– வாசக நண்பர்கள், மணமேல்குடி.

★ நாட்டின் எதிர்காலச் சீரழி விற்கு வித்திடும் தாராள மயத்தை புதிய ஜனநாயகம் வழியே உணர்த்திய பிறகும் மக்கள் உயிர்த் தெழுவார்களா? அல்லது உதவாக்கரை அரசி யல் வாதிகளையே பின் தொடர்வார்களா?

– பி. தர்மராஜ், திருச்சி.

★ 'ஓட்டுப் பொறுக்கும் கூடாரத்தில் நுழைந் தால் கன்றும் பன்றியாகும்' என்பதை நன்றா கவே உணர வைத்துள்ளது - தலித் அரசியல் நடத்தும் தான்தோன்றி பிழைப்புவாதிகளை அம்பலப்படுத்திய தலையங்கம்.

– வாசகர் வட்டம், சிவகங்கை.

12-ம் பக்கத் தொடர்ச்சி

டுவது சுதேசியம்." (எது சுதேசி? ஏன் சுதேசி?) இங்கே, ஆர்.எஸ்.எஸ்.-இன் சுதே சியில் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதே இல் லாமல், இந்துத்துவ பார்ப்பனிய பண்பாட்டு வெறிதான் வெளிப்படுகிறது.

சுதேசி தொழில் கண்காட்சியில் ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணியும், விவே கானந்தா மையம், சின்மயா இயக்கம், மாதா அமிர்தானந்தமாயி மடம் ஆகியவையும் போட்டி போட்டுக் கொண்டு இந்துத்து வாவை விற்றன. ஆன்மீகத்திற்கும் அறிவி யல் கண்டுபிடிப்புகளும் என்றுமே ஒத்துப் போனது கிடையாது. ஆனால், ஆர்.எஸ்.எஸ்.ஸோ, இந்து மதம்தான் நமது சுதேசியின் அடிப்படை எனக் காட்டி, இந்து மதவெறி அரசியலைப் புகுத்துகிறது. இதன் மூலம் மத வேறுபாடின்றி எழ வேண்டிய ஏகாதிபத்திய எதிர்ப்பு சுதேசி போராட்டத் தைச் சிதைத்து, திசை திருப்ப முயலுகிறது.

பன்னாட்டு நிறுவனங்களிடம் மூலதனக் கூட்டும், தொழில்நுட்பக் கூட்டும் கொண்டி ருக்கும் டாடா, எஸ்ஸார் போன்ற அந்நியக் கைக்கூலி இந்திய முதலாளிகளை சுதேசி விழிப்புணர்வு இயக்கம் "சுதேசி"யாகக் கருதுகிறது. அதைப்போலவே, இந்தியர்க ளால் ஆளப்படும் இந்த அரசியல் - அரசு அமைப்பையும் சுதந்திரமானதாகக் கருதுகிறது.

தாராளமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு பன்னாட்டு நிறுவனங்கள் சில நேரங்களில் இந்தியத் தரகு முதலாளிகளின் நிறுவனங்களைக் கூட விழுங்கிவிடுவதால் தான், ஆர்.எஸ்.எஸ்.-இன் சுதேசி விழிப் புணர்வு இயக்கம் பன்னாட்டு நிறுவனங்க ளின் பொருளாதார ஆதிக்கம் பற்றிப் புலம் புகிறது. அதே சமயம், பன்னாட்டு - ஏகாதி பத்திய நிறுவனங்களின் அரசியல் ஆதிக்கம், அவற்றின் பொருளாதார ஆதிக்கம் போல் மிகவும் வெளிப்படையாக தெரியாமல் இருப்பது, அது பற்றி சுதேசி விழிப்புணர்வு இயக்கம் வாய்மூடிக் கிடப்பதற்கு மிகவும் வசதியாக உள்ளது. அதேசமயம், அரசியல் ஆதிக்கம் வெளிப்படையாக தெரியும் விச யங்களை (உதாரணமாக, காஷ்மீர் பிரச்சினை யில் அமெரிக்காவின் ஆதிக்கம்) இக்கும்பல் கண்டு கொள்வதேயில்லை.

ஆர்.எஸ்.எஸ். தோன்றிய காலத்தில் இருந்தே, அது ஏகாதிபத்தியங்களின் ஆதிக் கத்திற்கு எதிராக ஒரு துரும்பைக் கூட அசைத்தது கிடையாது. இன்று, இந்திய மக் கள் மத்தியில் சுதேசி விழிப்புணர்வை ஏற்ப டுத்துவதாகப் பசப்பும் ஆர்.எஸ்.எஸ்., ஆங் கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இந்திய மக் களிடம் சுதேசி உணர்வு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தபொழுது, என்ன செய்து கொண்டிருந்தது தெரியுமா? ஆர்.எஸ்.எஸ்.-இன் கடந்த காலத்தைத் தெரிந்து கொள்வது, அதன் சுதேசியானது பசுத்தோல் போர்த்திய புலியைப் போன்றது தான் என்பதைப் புரிந்து கொள்ள நமக்கு உதவும்.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com



## அவலத்தின் நடுவே ஆதாயம் தேடும் இந்து வெறியர்கள்

குஜராத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அங்கு மீட்புப் பணியிலும், நிவாரணப் பணியிலும் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் முன்னணியில் நின்று அருந்தொண்டாற்றி வருவதாக இந்து வெறியர்களும் பார்ப்பன பத்திரிகைகளும் புகழ்ந்து எழுதி வருகின்றன. ஆர்.எஸ்.எஸ். - தேசிய சேவைக்கென தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள அமைப்பு என்று மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளதாக அதற்கு ஒளிவட்டம் போட்டு வருகின்றன. ஆனால் குஜராத்திலிருந்து மெதுவாகக் கசிந்து வரும் உண்மைச் செய்திகளோ, இந்த கோயபல்சு பாணி பிரச்சார மோசடியைத் திரைகிழித்து வருகின்றன.

பிப்ரவரி முதல் நாளன்று தமது நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட நிவாரணப் பொருட்களுடன் ஸ்பெயின் நாட்டு அதிகாரிகள், அகமதாபாத்திலிருந்து புஜ் நகருக்குச் சென்றனர். நெடுஞ்சாலையில் அவர்களது வாகனத்தை வழிமறித்த ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள், புஜ் நகரில் பட்டினியால் தவிக்கும் மக்கள் நிவாரணப் பொருட்களைச் சூறையாடித் தாக்குவார்கள் என்று அவர்களைப் பீதியூட்டி, தமது பொறுப்பில் இவற்றை ஒப்படைக்குமாறும் தாங்களே அவற்றை முறையாக விநியோகிப்பதாகவும் கூறி பறித்துச் சென்றனர். மறுநாள், போலீசு பாதுகாப்புடன் புஜ் நகருக்குச் சென்ற ஸ்பெயின் அதிகாரிகள், தமது நாட்டு நிவாரணப் பொருட்கள் அங்கு வரவேயில்லை என்பதை அறிந்து, அரசாங்கத்திடம் முறையிட்டனர். ஆனாலும் அரசாங்கத்திடமிருந்து இன்று வரை உரிய விளக்கம் கிடைக்கவில்லை.

பிப்ரவரி 3-ஆம் நாளன்று ஜப்பானிலிருந்து விமானத்தில் வந்த நிவார்ணப் பொருட்களை விசுவ இந்து பரிஷத் எனும் இந்துவெறி அமைப்பின் குண்டர்கள் கடத்திச் செல்ல முயன்றதால், அந்த விமானம் இரு நாட்களுக்கு அகமதாபாத் விமான நிலையத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டது. நிவாரணப் பொருட்கள் மாநில அரசின் பெயருக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும், அதை ஜப்பானிலுள்ள தமது அமைப்பின் ஆதரவாளர் தமக்கு அனுப்பியுள்ளதாக விசுவ இந்து பிரசத் உரிமை பாராட்டியது. ஆளும் பாரதீய ஜனதா அரசின் நிர்பந்தங்கள் காரணமாக, அதிகாரிகள் இந்நிவாரண பொருட்களை விசுவ இந்து பரிசத்திடம் ஒப்படைக்க முன்வந்தனர். ஆனால் நிவாரண பொருட்களில் எந்திர சாதனங்களும் உள்ளதால் அரசாங்கத்தைத் தவிர வேறெந்த அமைப்பு இவற்றைப் பெற்றாலும் அதற்குத் தீர்வையாக ரூ. 4 கோடி செலுத்த வேண்டும் என்று சுங்கத் துறை உத்தரவிட்டது. பின்னர் வேறு வழியின்றி, அரசாங்கம் பொறுப்பேற்று ஜப்பானிய நிவாரண்ப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு விமானத்தை வழியனுப்பியது. அதன் பிறகு அவற்றைக் கைப்பற்றிக் கொண்ட விசுவ இந்து பரிசத். தனது பொறுப்பிலேயே அவற்றை விநியோகம் செய்தது.



இதேபோல குஜராத்திலுள்ள பல்வேறு தன்னார்வக் குழுக்கள், தொண்டு நிறுவனங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்களை இந்து வெறியர்கள் பறித்துச் சென்று தமது பொறுப்பில் விநியோகித்தனர். இந்த அநியாயத்தை எதிர்த்து முறையிட்ட போதிலும் பா.ஜ.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவை ஒருபுறமிருக்க, நிவாரணப் பொருட்களுடன் செல்லும் அரசு வாகங்களையே இந்து வெறியர்கள் வழிமறித்து சூறையாடிச் சென்றுள்ளனர் என்று பல அதிகாரிகளே வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளனர். இன்னும் சில பகுதிகளில், நிவாரணப் பொருட்களை பா.ஜ.க. அல்லது இந்து வெறி அமைப்புகளின் தலைமையில் தான் விநியோகிக்க வேண்டும் என்று மீட்புப் பணியாளர்களுக்கு பா.ஜ.க. அரசு வாய்வழி உத்தரவு போட்டுள்ளது. இதனால் பல பகுதிகளில் நிவார்ரணப் பொருட்கள் விநியோகிக்கப்படாமல் மக்கள் பரிதவிக்கின்றனர். இந்துவெறி அமைப்புகள் செயல்படும் பகுதிகளில் மட்டுமே நிவாரண உதவிகள் கிடைக்கின்றன.

தமது பொறுப்பில் நிவாரணப் பொருட்களை விநியோகிக்கும் இந்து வெறியர்கள், "ஜெய்சிறீராம்!" என்று கூறி அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு மக்களை நிர்பந்திக்கின்றனர். சிறுபான்மை மதத்தினர் அவ்வாறு கூற மறுத்ததற்காக, அவர்களுக்கு உணவுப் பொருட்களைக் கூட கொடுக்காமல் பரிதவிக்க விட்டனர். சில பகுதிகளில் இதையொட்டி தகராறுகளும் கைகலப்புகளும் நடந்துள்ளன. ஒரு கத்தோலிக்க திருச்சபை நிவாரண உதவியாக ரூ. 20 கோடியை வழங்கிய போதிலும், போப்பாண்டவர் மதமாற்றத்தை ஆதரிப்பதால் இந்நிவாரணத் தொகையை அரசு ஏற்கக் கூடாது என்று இந்து வெறி விசுவ இந்து பரிசத்தின் தலைவரான அசோக் சிங்கால் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நிலநடுக்கப் பேரழிவு குடியரசு தின விடுமுறை நாளன்று நிகழ்ந்ததால் உடனடியாக அரசு எந்திரம் செயல்பட முடியாததையும், தவகல் தொடர்பு துண்டிக்கப்பட்டதால் ஏற்பட்ட குழப்பம் - கால தாமதத்தையும் சாதகமாக்கிக் கொண்டு, இந்து வெறியர்கள் தாங்கள் மட்டுமே முன்னணியில் நின்று மீட்புப் பணியில் ஈடுபட்டதாக விளம்பரப்படுத்திக் கொண்டனர். உண்மையில் ஜனவரி 27-ஆம் தேதியன்று காலையில் துணை இராணுவப் படைகளும், விரைவு அதிரடிப் படைகளும் வந்த பிறகுதான் மீட்புப் பணிகளே தொடங்கின.

உண்மையாக மக்களுக்குத் தொண்டாற்றுபவர்கள் எவரும் சுயவிளம்பரம் தேடிக் கொள்வதில்லை. மத வெறியர்கள் மக்களுக்குச் சேவை செய்ததாக வரலாறுமில்லை.

## கிழக்கே வீசும் போராட்டப் புயல்

டேவூ கார் நிறுவனம், தென்கொரிய நாட்டின் தரகுப் பெரு முதலாளித்துவ ஏகபோக நிறுவனமாகும். அதன் பல கோடி ரூபாய் மதிப்புடைய பங்குகளை அதன் துணை நிறுவனங்களுக்கு முறைகேடாக் மாற்றி பங்குச் சந்தையில் முதலாளிகள் சூதாடியதாலும், பங்குகளை மூலதனமாக்கி வெளிநாடுகளுக்கு இரகசியமாகக் கடத்தியதாலும் கடன் பொறியில் சிக்கி அந்நிறுவனம் அண்மையில் திவாலாகியது. டேவூ நிறுவனத்துக்குக் கடன் கொடுத்த வங்கிகளும் நிதி நிறுவனங்களும் எஞ்சியுள்ள பங்குகளை விற்று கடனைத் திருப்பிச் செலுத்துமாறு டேவூ நிறுவனத்தை நிர்பந்திக்கின்றன. இந்நிறுவனத்தின் கணிசமான பங்குகளை வாங்கியுள்ள அமெரிக்காவின் ஜெனரல் மோட்டார்ஸ் என்ற ஏகபோக நிறுவனம், எஞ்சிய பங்குகளை அடிமாட்டு விலைக்கு வாங்கி டேவூ நிறுவனத்தைக் கபளீகரம் செய்யத் துடிக்கிறது. திவாலான இந்நிறுவனத்தின் பங்குகள், பங்குச் சந்தையில் விலைபோக வேண்டுமென்றால், தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று டேவூ-வின் நிர்வாக அதிகாரிகள் 5000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை கடந்த பிப்ரவரியில் வேலை நீக்கம் செய்தனர். இதுதவிர 3000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு லே-ஆப் அறிவித்தனர்.

தமது வாழ்வைப் பறித்த இக்கொடுஞ்செயலை எதிர்த்து தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்தனர். ஆலையை மூடி தொழிலாளர்களை வீதியில் வீசியெறிவதை உடனே நிறுத்த வேண்டும்; டேவூ நிறுவனப் பங்குகளை துணை நிறுவனங்களுக்கு முறைகேடாக மாற்றி பங்



படிப்பகம்

www.padippakam.com



குச் சந்தையில் சூதாடிய் டேவூ நிறுவனத்தின் முதாலளி கிம் ஊ-சூங் கைக் கைது செய்து சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்று கோரி தொழிலாளர்கள் டேவூ நிறுவனத்தின் ஆலைகளை ஆக் கிரமித்துக் கொண்டனர். அவர்களை வெளியேற்ற போலீசு அதிரடித் தாக்குதல் நடத்தியதும், வெகுண்டெழுந்த தொழிலாளர்கள் போலீசார் மீது பெட்ரோல் குண்டுகளை வீசி வீதிகளில் வீரப்போர் புரிந்தனர்.

கொரியாவின் மிகப்பெரிய தொலைபேசி நிறுவனமான "கொரி யா டெலிகாம்", கடந்த டிசம்பரில் 13,000 தொழிலாளர்களை வேலை யிலிருந்து விரட்டியடித்தது. நிர்வாகச் சீர்திருத்தம் என்ற பெயரில் நடந்த இந்த அட்டூழியத்தைப் போலவே இப்போது, டேவூ நிறுவன மும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டுவதை எதிர்த்து நாடு முழுவதுமுள்ள தொழிலாளி வர்க்கம் ஓர ணியில் திரண்டு போராட்டத்தில் குதித்துள்ளது. தொழிலாளர்களின் போராட்டத்தை ஆதரித்து கல்லூரி மாணவர்கள் வகுப்புகளைப் புறக் கணித்து விட்டு ஆர்ப்பாட்டங்களைத் தொடருகின்றனர். கடந்த பிப் ரவரி 9-ந் தேதியன்று தலைநகர் சியோலில் உள்ள டேவூ நிறுவன முத லாளி கிம்-இன் மாளிகையை ஆக்கிரமித்துக் கொண்ட மாணவர்கள், கிம்-ஐக் கைது செய்து சொத்துக்களைப் பறிமுதல் செய்யாதவரை நாங்கள் வெளியேற மாட்டோம் என்று எச்சரித்தனர். கிம் தப்பி யோடித் தலைமறைவாகி விட்டதாக அறிவித்த அரசு, மாணவர்கள் மீது தடியடித் தாக்குல் - கண் ணீர் புகைக் குண்டுகளை வீசி அம்மாளிகையை விட்டு வெளியேற்றி முன்னணியா ளர்களைக் கைது செய்துள்ளது. உழைக்கும் மக்களின் போராட்ட நிர்பந்தம் காரண மாக வேறு வழியின்றி டேவூ நிறுவனத்தின் நிர்வாக இயக்கு னர்கள் - உயர் அதிகாரிகளைக் கைது செய்துள்ள கொரிய அரசு, விசாரணை நாடகமாடி வருகிறது.



வாழ்வைப் பறித்த மோசடி முதலாளியைக் கைது செய்ய வக்கற்று, தம்மை ஒடுக்கும் போலீசுக்கு எதிராக டேவூ கார் நிறுவனத் தொழிலாளர்கள் நடத்தும் வீரப்போர்.

## தொழிற்சங்கத் தலைவர் கொலை முதலாளித்துவத்தின் கொடூரம்

தர்ஷன் கோடா - போலி கம்யூனிஸ்டு கட்சியான சி.பி.எம். தலைமையின் கீழுள்ள சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவர். பஞ்சாலைகள் நிறைந்த இராசஸ்தான் மாநி லத்தின் கங்கா நகர் மாவட்டத்தில் முறைசாரா பஞ்சாலைத் தொழிலா ளர்கள் மற்றும் செங்கற்சூளை, கட்டிடத் தொழில், சுமை தாக்குதல் முத லான முறைசாரா கூலித் தொழிலாளர்களை அணிதிரட்டி குறைந்த பட்சக் கூலிக்காகவும் உரிமைக்காகவும் போராடி வந்தார்.

12 மணி நேர கட்டாய உழைப்பும் 30 ரூபாய் தினக்கூலியுமே உள்ள பெரும்பாலான பஞ்சாலைகளில், தாழ்த்தப்பட்ட பெண்களும் சிறுவர்களுமே பெருமளவில் வேலை செய்கின்றனர். அரசாங்கமோ 8 மணி நேர உழைப்பும் ரூ. 60 குறைந்தபட்சக் கூலியும் மருத்துவ விடுப்பும் நிர்ணயித்துள்ளது. ஆனால் பஞ்சாலை முதலாளிகளோ இதை ஏற்க மறுத்து அற்பக் கூலிக்கு தொழிலாளர்களைக் கொடூ மாகச் சுரண்டி வந்தனர். இக்கொடுமைக்கு எதிராக, கோடா தலைமை யில் போராடி வந்த தொழிலாளர்கள் அடுத்த கட்டமாக டிசம்பர் 8-ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர்.

ஒருவார காலத்திற்குப் பிறகு, டிசம்பர் 16-ஆம் தேதியன்று முத லாளிகள் - அரசாங்கம் - தொழிற்சங்கம் அடங்கிய முத்தரப்பு பேச்சு வார்த்தை நடந்து, அரசு நிர்ணயித்துள்ள 8 மணி நேர வேலைக்கு குறைந்தபட்சக் கூலியான ரூ. 60-ஐ வழங்குவதென ஒப்பந்தம் ஏற் பட்டது. அதைத் தொடர்ந்து வேலை நிறுத்தமும் விலக்கிக் கொள்ளப் பட்டது. இருப்பினும் ஒரு பிரிவு முதலாளிகள் இந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்து, பழைய தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து விட்டு, புதிய தொழிலாளர்களை குறைந்த கூலிக்கு அமர்த்த முயற் சித்து வந்தனர். இதைக் கண்டித்து கஜ்சிங்பூரில் டிசம்பர் 17-ஆம் தேதி யன்று நடந்த பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிவிட்டு அங்கி ருந்து பதரம்பூருக்கு உடன் ஒரு தொழிலாளியுடன் பேருந்தில் பய ணமானார், கோடா.

சிறிது நேரத்தில் அடியாட்களுடன் தமது வாகனத்தில் வந்த முத லாளிகள் பேருந்தை வழிமறித்து, கோடாவையும் உடன் வந்த தொழி லாளியையும் தாக்கி கடத்திச் சென்றனர். ஒரு பஞ்சாலைக் கிடங்கில் அவர்களை அடைத்து தடிகளாலும் இரும்புக் கம்பிகளாலும் சுற்றி வளைத்து அடித்து நொறுக்கினர். இரத்த வெள்ளத்தில் மயங்கி விழுந்த அவர்களை வயல் வெளியில் வீசியெறிந்துவிட்டுத் தப்பி யோடினர். அந்த வழியே வந்தவர்கள், குற்றுயிராகக் கிடந்த இவ்விரு வரையும் மருத்துவமனையில் சேர்த்தனர். இருப்பினும் சிகிச்சை பல னின்றி டிசம்பர் 18-ஆம் தேதியன்று அதிகாலையில் கோடா மரண மடைந்தார். உடன் வந்த தொழிலாளி உயிர் பிழைத்து சிகிச்சை பெற்று வருகிறார். கொடூர மான தாக்குதலால் கபாலம் மற்றும் கை - கால் எலும்பு கள் முறிந்து உடலெங்கும் கத்திக் குத்துக் காயங்களால் கோடா மரணமடைந்துள் ளதை பிரேதப் பரிசோதனை அறிக்கை நிரூபித்துக் காட்டு கிறது. இப்படுகொலையைச் செய்த முதலாளிகள் ஆளும் காங்கிரசு மற்றும் எதிர்க் கட்சியான பாரதீய ஜனதாவின் முக்கிய பிரமு கர்கள் என்பதும் அம்பலமா கியுள்ளது.

இப்படுகொலையைக் கண்டித்து டிசம்பர் 18-ஆம் தேதியன்று கங்கா நகர், பிகா னீர், அனுமந்கார் மாவட் டங்களில் தொழிலாளர்கள் தமது குடும்பத்தோடு திரண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அதைத் தொடர்ந்து நடந்த கடையடைப்பு போராட்டத்தினால் இம்மாவட்டங்கள் இரு நாட்க ளுக்குச் செயலிழந்தது. முதலாளிகள் மற்றும் அடியாட்கள் உள்ளிட்ட 20 பேர் மீது குற்றம் சாட்டப்பட்ட போதிலும் இதுவரை 4 பேரை மட் டுமே போலீசு கைது செய்துள்ளது. ஒரு மாதத்துக்கும் மேலாகியும் கொலைகாரர்களைக் கைது செய்யாத போலீசையும், கொலைகார முத லாளிகளின் கூட்டாளிகளான காங்கிரசு - பாரதீய ஜனதா கட்சிகளை எதிர்த்தும் மீண்டும் ஜனவரி 24-ஆம் தேதியன்று தொழிலாளர்கள் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

தர்ஷன் கோடா, சட்டரீதியான தொழிற்சங்க உரிமைக்கான போராட்டத்தைத்தான் நடத்தினார். ஆனால் இலாப வெறி கொண்ட முதலாளிகளோ சட்ட ரீதியான உரிமையைக் கூட ஏற்க மறுத்து தொழிற்சங்கத் தலைவரையே கொன்றொழித்து பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். நாமனைவரும் ஒரே மதம் என்று கூறும் இந்து வெறியர்கள், தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு சட்டரீதி யான கூலியைக் கூட கொடுக்கத் தயாராக இல்லை. எதிரெதிர் அணி யில் நின்று அரசியல் நடத்தும் காங்கிரசும் பாரதீய ஜனதாவும் தமது வர்க்க நலன் பாதிக்கப்படும்போது ஓரணியில் நின்று கொலை வெறி




படிப்பகம்

www.padippakam.com



யாட்டம் போடுகின்றன. தனியார் முதலாளிகள் சட்ட ரீதியான குறைந்தபட்சக் கூலியைக் கூடத் தராமல் இப்படிக் கொலை வெறியாட்டம் போடும் போது, எஞ்சிய அரசுத் துறைகளையும் தனியாருக்குத் தாரை வார்த்தால் என்ன கதி ஏற்படும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.



முதலாளிகளால் படுகொலை செய்யப்பட்ட தமது அன்புத் தலைவரின் இறுதி ஊர்வலத்தில் திரண்ட உழைக்கும் மக்கள். உள்ளே: தொழிற்சங்கத் தலைவர் தர்ஷன் கோடா.

## நிலக்கரி சுரங்கமா? மரணக் குழியா?

கடந்த பிப்ரவரி 2-ந் தேதியன்று ஜார்கந்த் மாநிலத்தின் தன்பாதிலுள்ள பாக்திகி நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 38 தொழிலாளர்கள் நீரில் மூழ்கடிக்கப்பட்டு கோரமாக கொல்லப்பட்டுள்ளனர். அவசர நிலை பாசிச ஆட்சியின் போது நடந்த சாஸ்நலா சுரங்க விபத்தைப் போன்ற கோரமான விபத்து இது.

கனிம வளமிக்க தன்பாதில் திறந்தவெளி நிலக்கரிச் சுரங்கங்கள் குறைவு. ஏறத்தாழ 300 அடிக்கு பூமியைத் துளைத்து "டோலி"களில் தொழிலாளர்களை இறக்கி நிலக்கரியை வெட்டி எடுக்கும் உள் சுரங்கங்களே அதிகம். அரசுத் துறை நிறுவனமான பாரத நிலக்கரி நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இச்சுரங்கங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதன் விளைவாகவே இக்கோர விபத்து நடந்துள்ளது. 1955-இல் அம்லாபாத் சுரங்கத்தில் ஏற்பட்ட கோரமான விபத்துக்குப் பிறகு நடந்துள்ள 10-வது மிகப் பெரிய விபத்து இது.

உற்பத்தி இலக்கை அடைவதற்காக வெறியோடு அலையும் நிர்வாக அதிகாரிகள் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றி கடுகளவு கூட அக்கறைப்படுவதில்லை. இதனால் கடந்த 40 ஆண்டுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்டத் தொழிலாளர்கள் நிலக்கரிச் சுரங்க விபத்துகளில் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பலரது உடலைக் கூட மீட்க முடியாமல் போயுள்ளது. இப்படுகொலைகளுக்குக் காரணமான உயர் அதிகாரிகள் தண்டிக்கப்படாத அதே சமயம், அவர்களுக்கும் பதவி உயர்வு அளிக்கும் கொடுமையும் கேள்விமுறையின்றித் தொடர்கிறது.

தன்பாதிலுள்ள சுரங்கங்களிலிருந்து நிலக்கரி வெட்டி எடுத்த பின்னர், அச்சுரங்கங்களை மண்ணைக் கொட்டி மூடுவதில்லை. மாறாக, அப்படியே விடப்படுகின்றன. இவற்றில் ஊற்றெடுக்கும் நீரானது ஏரி போலத் தேங்கி உடைப்பெடுத்து அடுத்த உள்சுரங்கத்தில் வெள்ளமெனப் பாய்ந்து தொழிலாளர்களைப் பலி கொள்ளும் அவலம் பல ஆண்டுகளாகத் தொடர்கிறது. பாக்திகி சுரங்க விபத்தும் இதே வழியில்தான் நடந்துள்ளது. கைவிடப்பட்ட ஜெயராம்பூர் சுரங்கத்திலிருந்து கரைகள் உடைந்து திடீரென வெள்ளம் பாய்ந்ததாலேயே பாக்திகி சுரங்க விபத்து சேர்ந்துள்ளது. கைவிடப்பட்ட சுரங்கத்துக்கும் அடுத்த சுரங்கத்துக்கும் 120 மீட்டர் அகலத்துக்கு இடைவெளி இருக்க வேண்டும். ஆனால் 10 மீட்டர் அளவுக்குக் கூட இடைவெளி இல்லாமல் பாக்திகி சுரங்கம் அமைக்கப்பட்டதால் இரு சுரங்கங்களுக்கிடையிலான மண்சுவர் இடிந்து கைவிடப்பட்ட ஜெயராம்பூர் சுரங்கத்திலிருந்து பல ஆண்டுகளாகத் தேங்கிய நச்சு நீர் வெள்ளமெனப் பாய்ந்ததால் 38 தொழிலாளிகள் நீரில் மூழ்கி மாண்டு போயுள்ளனர்.

தன்பாதிலுள்ள நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களுக்கு ஏறத்தாழ 2,50,000 சுவாசக் கவசங்கள் தேவை. ஆனால் 73,000 கவசங்களே உள்ளன. பல தொழிலாளர்களுக்கு தலைக்கவசத் தொப்பிகளே தரப்படுவதில்லை. கவசத் தொப்பி இருந்தாலும் அவற்றில் பொருத்தப்படும் "பாட்டரி" விளக்கு இருப்பதில்லை. ஐந்து பேருக்கு ஒரு விளக்கு பொருத்திய தொப்பியைக் கொண்டு இருள் சூழ்ந்த சுரங்கத்தினுள் தொழிலாளர்கள் மூச்சு முட்ட உழைக்க வேண்டும் என்ற அடிமைக்கால அவலம் தொடர்கிறது.

இவை ஒருபுறமிருக்க, சுரங்கத்தினுள் அபாயம் ஏற்பட்டால் தகவல் தெரிவிக்கக் கூட தொலைபேசி இணைப்பு இல்லை. இருந்தாலும் அவை செயல்படுவதுமில்லை. விபத்து நடந்த நாளன்றுகூட, பணிக்குச் செல்லுமுன் பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாததை எதிர்த்து பலியானத் தொழிலாளர்கள் போராடியுள்ளனர். உயர் அதிகாரிகளோ எல்லாம் சரியாக உள்ளதாக மாய்மாலம் செய்து, தொழிலாளர்களை மரணக் குழியில் தள்ளியுள்ளனர். விபத்து நடந்த பிறகு கூட, கடற்படையினர் வந்து சுரங்கத்தினுள் மூழ்கிச் சென்று தொழிலாளர்களைக் காப்பாற்ற முடியவில்லை. ஏனெனில் சுரங்கத்தினுள் அமைந்துள்ள பாதைக்கான வரைபடம் நிர்வாகத்திடம் இல்லை. இதனால் பல நாட்கள் தேட வேண்டியதாகி, யாரையும் காப்பாற்ற முடியவில்லை. நீர் உறிஞ்சும் குழாயைப் பிடித்து தொங்கிக் கொண்டிருந்த ஒரு தொழிலாளி மட்டுமே மயங்கிய நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளார். இத்தனைக்கும் பிறகும் கூட, கிரிமினல் குற்றவாளிகளான கொலைகார அதிகார வர்க்கத்தைக் கைது செய்து தண்டிப்பதற்குப் பதிலாக, விசாரணை நாடகமாடி வருகிறது அரசு.

பாக்திகி சுரங்கத்தில் கொல்லப்பட்ட தொழிலாளர்களின் குடும்பம் மீளாத் துயரில். இனியும் தொடருமோ இந்தக் கொடுமை?





படிப்பகம்

www.padippakam.com

# சமாதான நாடகம் பொய்த்துப் போனது பனிமலை, குமுறும் எரிமலையானது

இந்திய ஆட்சியாளர்கள் பித்தலாட்டக் காரர்கள்; இரட்டை நாக்குப் பேர்வழிகள். ஒருபுறம் சமாதான நாடகமாடிக் கொண்டே மறுபுறம் படுகொலையைக் கட்டவிழ்த்துவிடும் பாசிச பயங்கரவாதிகள். இந்த உண்மையை போர் நிறுத்த அறிவிப்புக்குப் பின்னரும் காசுமீரில் இந்திய இராணுவம் நடத்தி வரும் படுகொலைகள் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது.

காசுமீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி என்ற பெயரில் போர் நிறுத்த - சமாதான நாடகமாடி வருகிறது இந்திய அரசு. ஆனால், இந்தப் போர் நிறுத்த ஏற்பாடு குண்டுகளால் துளைக்கப்பட்டு காசுமீரில் இரத்த ஆறு பாய்கிறது. இப்போர் நிறுத்த ஏற்பாட்டைத் தகர்ப்பவர்கள், பா.ஜ.க. அரசு கூறிவருவது போல, காசுமீர் தீவிரவாதிகள் அல்ல; பாகிஸ்தானிலிருந்து ஏவப்படும் கூலிப் படையினர் அல்ல. மாறாக, இந்திய இராணுவம்தான், தானே அறிவித்த போர் நிறுத்த ஏற்பாட்டைத் தகர்த்து, காசுமீர் மக்கள் மீது அறிவிக்கப்படாத போரை நடத்தி வருகிறது.

ஜலீல் அகமது ஷா, யாசின் மாலிக் தலைமையில் இயங்கும் - ஜம்மு காசுமீர் விடுதலை முன்னணியின் பாரமுல்லா மாவட்டச் செயலாளர். யுனானி மருந்துக்கடை உரிமையாளர். இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களுக்கு எதிராகப் பல போராட்டங்களை நடத்தி மக்களிடம் ஆதரவும் செல்வாக்கும் பெற்றவர். குஜராத் நிலநடுக்கப் பேரழிவைக் கண்டு துடிதுடித்துப் போன அவர், பாதிக்கப்பட்ட மக்களின் உயிர்காக்க இரத்ததானம் செய்தவர். மிக உயரிய மனிதாபிமான உள்ளம் கொண்ட இவரை, பாகிஸ்தானால் ஏவிவிடப்பட்ட தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று குற்றம் சாட்டி இந்திய இராணுவத்தின் சிறப்பு வேட்டைப் படை (SOG) கடந்த பிப்ரவரி 14-ஆம் தேதியன்று கைது செய்து இழுத்துச் சென்றது. கொட்டடியில் அவரை வதைத்துச் சுட்டுக் கொன்ற வேட்டைப் படை, இராணுவத்துக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் இடையில் சிக்கி அவர் மாண்டு போனதாகக் கதை கட்டியது. காசுமீர் மக்களின் இயல்பான மனிதநேய உணர்வுக்கும் இந்திய இராணுவத்தின் பயங்கரவாத வெறியாட்டத்துக்கும் ஜலீல் அகமது ஷாவின் படுகொலையே சாட்சியமாக அமைந்துள்ளது.

இந்திய இராணுவத்தின் இக்கொலை வெறியாட்டத்தை எதிர்த்து சோபூர் - குப்வாரா நெடுஞ்சாலையில் உள்ள ஹைகாம் எனும் சந்தை நகரத்தில் பிப்ரவரி 15-ஆம் தேதியன்று ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தி, அத்தியாகியின் உடலை ஒப்படைக்கக் கோரி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்த நெடுஞ்சாலையில் வந்த இந்திய இராணுவத்தின் 15-ஆவது பிரிவுப்படை, போக்குவரத்துக்கு இடையூறு செய்வதாகக் குற்றம் சாட்டி, அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த நிராயுதபாணியான மக்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இக்கொலை வெறியாட்டத்தில் 6 பேர் கொல்லப்பட்டனர். 24 பேர் படுகாயமடைந்து மயங்கிய நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தைச் சாலையோரத்திலுள்ள தனது வீட்டின் அருகே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஜாவீது ஷா என்ற மனவளர்ச்சி குன்றிய சிறுவனும் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டுள்ளான். சாலையோர மரங்களும் கடைகளும் வாகனங்களும் கூடத் துப்பாக்கிச் குண்டுகளால் துளைக்கப்பட்டுள்ளது. இந்திய இராணுவம் எந்த அளவு காட்டுமிராண்டித்தனமான மிருக வெறியோடு இக்கொலை வெறியாட்டத்தை நடத்தியுள்ளது என்பதற்கு இவையே சாட்சியங்கள்.

இக்கொடுஞ்செயலை எதிர்த்து பிப்ரவரி 16-ஆம் தேதியன்று காசுமீர் மாநிலமே போராட்டத்தில் குதித்தது. மாநிலம் முழுவதும் கடைகளும் அங்காடிகளும் அடைக்கப்பட்டு, போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. பீதியடைந்த ஆட்சியாளர்கள் மாநிலம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தனர். இத்தடையை மீறி ஆர்ப்பாட்டங்களைத் தொடருமாறு போராளி அமைப்புகள் அறைகூவி அழைத்தன. மாநிலமெங்கும் ஆங்காங்கே ஆயிரக்கணக்கில் திரண்ட மக்கள் தடையை மீறி ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். "இந்திய அரசே! போர் நிறுத்தம் என்ற பெயரில் இரட்டை வேடம் போடாதே!" என்று முழங்கியபடியே தலைநகரான சிறீநகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது, மைசுமா பகுதியில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார். 8 பேர் படுகாயமடைந்தனர். இதையறிந்து வீறுகொண்டு எழுந்த மக்கள் லால்சவுக் பகுதியில் மத்திய ரிசர்வ் போலீசுப் படையை எதிர்த்து கல்லெறித் தாக்குதலில் இறங்கி வீதிகளில் வீரப்போர் புரிந்தனர்.

மறுநாள், பிப்ரவரி 17-ஆம் தேதியன்று துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டோரின் இறுதி ஊர்வலம், இந்திய அரசு - போலீசு - இராணுவத்துக்கு எதிரான மிகப்பெரிய ஆர்ப்பாட்டமாக நடந்தது. "காசுமீர் - இந்தியாவின் காலனி அல்ல", "சமாதானம் என்ற பெயரில் மக்களை முட்டாளாக்காதே!" என்று முழங்கியபடியே நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, சிறீநகரின் புறநகரான சட்டபால் பகுதியில், மத்திய ரிசர்வ் போலீசுப் படை தடியடி தாக்குதலை நடத்தியதோடு, துப்பாக்கிச் சூடும் நடத்தி பலரைப் படுகாயப்படுத்தியது.

ஹூரியத் மாநாட்டுக் கட்சிகளின் தலைவர்களான ஷாபிர்ஷா, யாசின் மாலிக், கீலானி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அப்துல்கனி பட் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். இது தவிர ஆர்ப்பாட்டங்களைத் தலைமையேற்று நடத்திய முன்னணியாளர்கள் கைது

**"கைது செய்யப்பட்ட எனது மகன் எங்கே?" - வேதனையுடனும் கோபத்துடனும் இந்திய இராணுவத்திடம் வாதிடும் காசுமீர் தாய்மார்கள்.**




படிப்பகம்

www.padippakam.com

செய்யப்பட்டனர். காசுமீரில் போர் நிறுத்தம் தொடர்கிறதா அல்லது நீக்கப்பட்டு விட்டதா என்றே புரியவில்லை என முதலாளித்துவப் பத்திரிகைகளே குறிப்பிடுமளவுக்கு அடக்குமுறை தலைவிரித்தாடுகிறது.

இதற்கிடையே, பிப்ரவரி 16-ஆம் தேதியன்று மாநில சட்டமன்றம் கூடியபோது, அனைத்து ஓட்டுக் கட்சிகளும் ஓரணியில் நின்று இந்திய இராணுவத்தின் ஹைகாம் படுகொலையைக் கண்டித்தன. இராணுவ ஆட்டூழியங்களுக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் பற்றிப் படர்வதால், மக்களிடமிருந்து மேலும் தனிமைப்படாதிருக்க எல்லா கட்சிகளும் முதலைக் கண்ணீர் வடித்தன. துரோக முதல்வர் பரூக் அப்துல்லா, 'எனது இதயத்தைத் துளைத்த கொடுஞ்செயல்' என்று இராணுவத்தின் கொலை வெறியாட்டத்தைக் குற்றம் சாட்டினார். அனைத்து கட்சிகளின் கண்டனங்கள், எதிர்ப்புக் கூச்சல்களுக்குப் பிறகு இப்படுகொலை பற்றி விசாரணைக் கமிஷன் அமைக்கவும் ஒப்புக் கொண்டார். கட்சி வேறுபாடுகளைக் கடந்து அனைத்து ஓட்டுக் கட்சிகளும் ஓரணியில் நின்று சட்டமன்றத்தில் கண்டனம் தெரிவித்தபோது, இந்திய இராணுவத்தின் கொடுஞ்செயலை ஆதரித்து நியாயப்படுத்திய ஒரே கட்சி பாரதீய ஜனதாதான்!



''இந்திய அரசே, இரட்டை வேடம் போடாதே!'' - இந்திய இராணுவத்தின் கொலை வெறியாட்டத்தை எதிர்த்து காசுமீர் வீதிகளில் இளைஞர்களின் ஆர்ப்பாட்டம்.

இந்திய இராணுவத்தின் கொலை வெறியாட்டத்துக்கு எதிராக தொடர்ச்சியாகப் போராட்டங்களும் பொதுக் கருத்தும் வலுக்கத் தொடங்கியதும் பிப்ரவரி 17-ஆம் நாளன்று, இந்திய இராணுவத்தின் 15-வது படைப் பிரிவின் தளபதியான ஜே.ஆர். முகர்ஜி, பகிரங்கமாக வருத்தம் தெரிவித்தார். துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டோருக்கு இரங்கல் தெரிவிப்பதாகவும், இராணுவப் படை வீரர்களின் கட்டுப்பாடற்ற செயலுக்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் அவர் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டார். இக்கொடுஞ்செயலில் ஈடுபட்ட படை வீரர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாகவும், காசுமீர் மக்கள் போராட்டத்தைக் கைவிடுமாறும் வேண்டுகோள் விடுத்தார். இராணுவப் படைப் பிரிவின் தளபதி வருத்தம் தெரிவித்த அதேசமயம், இராணுவ அமைச்சர் பெர்னாண்டஸோ, உள்துறை அமைச்சர் அத்வானியோ இராணுவத்தின் கொலை வெறியாட்டத்தைக் கண்டிக்கவோ, காசுமீர் மக்களிடம் வருத்தம் தெரிவிக்கவோ, ஆறுதல் கூறவோ முன்வரவில்லை. மாறாக, இராணுவத்தின் அட்டூழியங்களை ஆதரித்து, இனியும் போர் நிறுத்தத்தைத் தொடரக் கூடாது என்றே வாதிட்டனர்.

போர் நிறுத்த அறிவிப்புக்குப் பிறகு, ஹைகாமில் நடந்தது முதலாவது படுகொலை அல்ல. ஜலீல் அகமது ஷாவின் படுகொலைக்கு முதல் நாளன்று குர்ஷித் அகமதுதர் என்ற போராளி, இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதை எதிர்த்து பாரமுல்லாவில் காசுமீரிகள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். போர் நிறுத்த அறிவிப்புக்குப் பின் - டிசம்பரிலிருந்து பிப்ரவரி 15-ஆம் தேதிவரை 23 பேர் போலீசால் கொல்லப்பட்டுள்ளனர். இன்னும் பலர் இராணுவத்தால் இழுத்துச் செல்லப்பட்டு, 'காணாமல்' போயுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் தீவிரவாதிகளுக்கு உதவியதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளை ஒடுக்குவது என்ற பெயரில் அரசு பயங்கரவாத அட்டூழியங்கள் கேள்வி முறையின்றித் தொடர்கின்றன.

இப்படி காசுமீர் மக்களைக் கேள்வி முறையின்றி வதைப்பதுதான் போர் நிறுத்தமா? சமாதான முயற்சியா?

போர் நிறுத்தம் என்றால் துப்பாக்கிகளைக் கீழே போட்டுவிட்டு முடங்கிக் கிடப்பதல்ல என்று புதிய விளக்கம் தருகிறார் அத்வானி. ''பிரதமர் வாஜ்பாயி, போர் நிறுத்தம் என்று ஒருபோதும் கூறவில்லை. பத்திரிகைகள் தவறாக விளக்கமளிக்கின்றன. இந்திய இராணுவம் தீவிரவாதிகளுக்கு எதிரான போரை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது; அதேசமயம் தீவிரவாதிகள் தாக்கினால், அதிலிருந்து தற்காத்துக் கொள்ள இந்திய இராணுவம் எதிர்த்தாக்குதல் நடத்தவே செய்யும்'' என்று நாடாளுமன்றத்தில் விளக்கியுள்ளார். போர் நிறுத்தம் என்ற பெயரில், தாழ்நிலைப் போரைத் தொடருவது, அரசு பயங்கரவாதத்தை வாய்ப்புள்ள அளவுக்கு ஏவுவது என்ற உத்தியுடன்தான் இந்திய ஆட்சியாளர்கள் சமாதான நாடகமாடி வருகின்றனர் என்ற உண்மையை அத்வானியின் வாக்குமூலமே நிரூபித்துக் காட்டுகிறது.

காசுமீர் - இந்தியாவின் உள்நாட்டு விவகாரம் என்று கூறும் ஆட்சியாளர்கள், உள்நாட்டு விவகாரத்துக்கே இராணுவத்தை ஏவி பயங்கரவாதத்தைத் தொடர்கின்றனர். இதன் காரணமாக, இந்திய அரசு காசுமீர் மக்களிடம் முற்றாகத் தனிமைப்பட்டுப் போயுள்ளதோடு, உலக அரங்கிலும் மேலும் மேலும் அம்பலப்பட்டு வருகிறது. இதை மூடி மறைக்க இப்போது மீண்டும் போர் நிறுத்தத்தை நீட்டித்துச் சமாதான நாடகமாடுகிறது.

காசுமீர் என்பது வெறும் நிலப்பரப்பு அல்ல; அது இரத்தமும் சதையும் மானமும் உணர்வும் கொண்ட மக்கள் வாழும் பூமி. அரசு பயங்கரவாதத்தால் காசுமீரை அடிமைப்படுத்திவிட முடியாது. காசுமீர் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை வழங்குவதைத் தவிர வேறெந்த பித்தலாட்டத் தீர்வும் ஒருக்காலும் வெற்றி பெறாது.

● பச்சையப்பன்


**''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்**
**படிவம் IV (விதி-8)**

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | 25, அருணாச்சலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், சென்னை - 600 083. |
| 2. வெளியிடும் காலம் | : | மாதம் இருமுறை |
| 3. அச்சிடுபவர் பெயர் | : | இரா. சன்முகராசு, |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | எழில் பிரிண்டர்ஸ், 110, 2-ஆம் தளம், 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024. |
| 4. வெளியிடுபவர் பெயர் | : | இரா. சன்முகராசு, |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 25, அருணாச்சலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், சென்னை - 600 083. |
| 5. ஆசிரியர் பெயர் | : | இரா. சன்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 25, அருணாச்சலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், சென்னை - 600 083. |

**இரா. சன்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.**

**(ஒ-ம்) இரா. சன்முகராசு,**
**வெளியிடுபவர்.**

www.padippakam.com

## நவீன விவசாயம்

# விளைநிலத்தை நாசமாக்கி... விவசாயிகளை நாடோடிகளாக்கி...

தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டாரத்திலேயே தண்ணீர் வளமும், மண் வளமும் கொண்ட ஊர்களில் தேவாரமும் ஒன்று. இக்கிராமத்தில் வசிக்கும் சந்திரன், 7 குழி (சுமார் 4 ஏக்கர்) நிலத்துக்குச் சொந்தக்காரர். இவர் கடந்த ஏழு மாதமாக தன் வளமான நிலத்தைத் தரிசாகப் போட்டுவிட்டு கேரளாவுக்கு கூலி வேலைக்குப் போய்விட்டார். காரணம் கேட்டால் "இந்த ஆறேழு மாசத்துல என் குடும்பச் செலவு போக பத்தாயிரம் கடனை அடைச்சிருக்கேன். இதே ஆறு மாசத்துல தக்காளியோ, பீன்சோ வெதைச்சிருந்தா பதினைஞ்சாயிரம் ருபாய்கூட கிடைச்சிருக்கும். ஆனால் மகசூல் குறைஞ்சாலோ, விலை இல்லாமல் போனாலோ, இதே அளவுக்கு கடனாளியாகியிருப்பேன். அதுக்கு கூலி வேலை எவ்வளவோ பரவாயில்லைப்பா" என்று அடித்துப் பேசுகிறார்.

முருகனும் சந்திரனைப் போல சிறு விவசாயிதான். தன் 4 குழி (2.4 ஏக்கர்) நிலத்தில் முதலில் பீன்சு பயிரிட்டார். விலை ஏறி இறங்கியதால் கை நட்டம் வராமல் போனது. அடுத்து தக்காளி பயிரிட்டார். முதல் மூன்று அறுவடைக்கு நல்ல விலை கிடைத்தது. அடுத்த இரண்டு அறுவடையில் விலை குறைந்து கூலியாள் சம்பளத்துக்கே கட்டுப்படியாகவில்லை. எனவே காய், பழத்தோடு உழுது அழித்துவிட்டு சோளம் பயிரிட்டார். குவிண்டால் 450 ரூபாய்க்கு சந்தையில் விலை இருந்தது. கடைசியில்'கடவுள் கண்ணைத் தொறந்துட்டான்' என்று பெருமூச்சோடு அறுவடைக்குப் போனால், எல்லாக் கதிரையும் ஈ குடித்து விட்டது.

தற்போது முருகன் தன் இரண்டு குழந்தைகள், மனைவியுடன் திருப்பூரில் கூலி வேலை செய்கிறார். "நாலு குழி நிலமிருக்கு. தலைக்கு மேல கடனிருக்கு. இடிமேல இடி விழுந்தா ஒரு மனுசன் என்னப்பா செய்ய முடியும்?" என்று தான் பஞ்சம் பிழைக்கப் போனக் கதையை நெஞ்சடைக்கக் கூறுகிறார்.

சந்திரன், முருகனைப் போல் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள். இவ்வட்டாரத்தில் தங்கள் நிலத்தை விட்டுவிட்டு 'கூலி வேலையே மேல்' என்று திருப்பூர், கோவை மற்றும் கேரளாவுக்குப் போய் விட்டனர். ஏற்கனவே மானாவாரிக் காடுகள் முழுக்க தேக்குப் பண்ணைக் கம்பெனிகளிடம் பறிகொடுத்த ஆயிரக்கணக்கான விவசாயிகளும் இவ்வாறே வெளியேறி உள்ளனர்.

சிறு விவசாயிகளின் கதை இப்படியென்றால், பணக்கார விவசாயம் என்று பெயர் பெற்ற தென்னை விவசாயமும் சிலந்திப் பூச்சி தாக்குதலால் பெரும் சேதமடைந்து விட்டது. இந்நிலையில் வெளிநாட்டுக் கொப்பரை தேங்காய் இறக்குமதியால், தேங்காய் விலை குறைந்து விவசாயிகள் பெரு நட்டம் அடைந்துள்ளனர். தேனி மாவட்டத்தில் மட்டும் இவ்வாறு பல இலட்சம் தேங்காய்கள் கிடங்குகளில் தேங்கி கிடக்கிறது.

"பச்சை தங்கம்" எனப்படும் ஏலக்காய் விவசாயத்திலும் இதே நிலைதான். கார், பங்களா என உலாவரும் பெரிய ஏலக்காய் விவசாயிகள்கூட திடீர் விலை சரிவால் ஒரே நாளில் போண்டியாகும் நிலையே உள்ளது.

இவ்வாறு சிறு விவசாயி முதல் பணக்கார விவசாயிகள் வரை 'விவசாயத்தை நம்பி இனி பிழைக்க முடியாது. இந்தச் சனியனைக் கட்டியழுவதற்குப் பதில் கூலி வேலையே பரவாயில்லை' என்று விவசாயத்தையே விட்டு ஓடும் நிலைக்கு ஆளாகி வருகின்றனர்.

பாரம்பரியமாய் விவசாயத்தில் ஈடுபட்ட வந்த விவசாயிகள் இவ்வாறு நிலத்தை விட்டு வெறுத்து ஓடிக் கொண்டிருக்கும் போது பன்னாட்டு நிறுவனங்களின் கூட்டோடு சில பெரிய கம்பெனிகள் 'நவீன' விவசாயத்தில் ஈடுபட்டு கொள்ளை இலாபம் ஈட்டுகின்றன. விவசாயம் என்றதுமே கோவணம், சேறு, கலப்பை, மாட்டு வண்டி என்று நினைத்துவிடக் கூடாது. இது உடம்பில் மண் ஒட்டாத 'நவீன விவசாயம்.'

அப்படியென்ன நவீன விவசாயம் என்கிறீர்களா? செண்டுப்பூ அல்லது மாட்டு செவ்வந்திப் பூ என்ற வீரியரக பூவிலிருந்து அதன் மஞ்சள் நிறமியைப் பிரித்து எடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும், ஐஸ்கிரீம், கேக், பிஸ்கட்டுகளில் நறுமணம் சேர்க்கும் வெணிலா சாறு (எஸ்ஸென்ஸ்) உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதும்தான்.

தேயிலை விற்பனை மூலம் பரவலான மக்களிடம் அறிமுகமாகியுள்ள நிறுவனம் ஏ.வி.டி. இந்நிறுவனத்தின் இயற்கை மூலப் பொருட்கள் பிரித்தெடுக்கும் துறை "ஏ.வி.டி. இண்டஸ்டரிஸ் புரோடக்ட்ஸ் லிமிடெட்" என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது. இது மெக்சிகோ நாட்டில் 'பயோகுமிக்ஸ்' நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இயங்கி வருகிறது. இதன் அலுவலகங்களை சென்னை, கொச்சியிலும், தொழிற்சாலைகளை சத்தியமங்கலம், திருவனந்தபுரத்திலும் நிறுவியுள்ளது.

இங்கு செண்டுப் பூவின் வீரிய ரக விதைகளை இறக்குமதி செய்து, தனது முகவர்கள் மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்கிறது ஏ.வி.டி. ஒரு ஏக்கர் நிலத்துக்கு நானூறு ரூபாய்க்கு விதைகளைத் தருவதோடு அவை நன்கு வளர்வதற்கு ஏற்ற தொழில்நுட்ப தகவலையும், வழிமுறைகளையும் அவர்களே சொல்லிக் கொடுக்கின்றனர். விளைந்த பூக்கள் முகவர்கள் மூலமே கொள்முதல் செய்யப்பட்டு சத்தியமங்கலம் தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சாறு எடுக்கப்படுகிறது.

தாராளமயத்தின் பின் நச்சுக் காளானாகப் பெருகும் 'நவீன' விவசாயம்.




இந்த நிறமிச் சாறுக்கு ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் அமோகமான சந்தையுள்ளது. அப்படி என்னதான் இருக்கிறது இந்தச் சாறில்?

"செண்டு மல்லிப் பூக்களின் ஆரஞ்சு மஞ்சள் நிறத்துக்குக் காரணமான 'சாந்தோபில்' என்னும் நிறமியைப் பிரித்தெடுத்து ஏற்றுமதி செய்கிறது ஏ.வி.டி., பயோகுமிக்ஸ் நிறுவனம் இந்த நிறமியை மேலும் சுத்திகரித்து விற்பனை செய்கிறது அந்தப் பொருள் கோழித் தீவனம் மற்றும் இறால் மீன் தீவனத்துடன் சேர்க்கப்படுவதால், இதைத் தின்று வளரும் கோழி மற்றும் இறால் மீன்கள் அதன்



படிப்பகம்

www.padippakam.com

தோலில் ஆரஞ்சு, மஞ்சள் நிறத்தைப் படிய பெற்று உயர் ரகமாக தோன்றுவதால் மேலை நாடுகளில் நல்ல விலைக்கு வாங்கப்படுகி றது, மேலும் கோழிகள் இடும் முட்டைகளின் கரு ஆழ்ந்த மஞ்சள் நிறம் பெறுகின்றது. இவ் வகை கோழியை உண்ணும் மக்களின் கண் களுக்கும் இந்த நிறத்தில் அமைந்துள்ள 'கரோட்டின்' என்ற சத்து நல்ல பலனை அளிக்கிறது என்று மருத்துவ ஆராய்ச்சியா ளர்கள் கண்டறிந்துள்ளனர்'' என்கிறார் ஏ.வி.டி.யின் நிர்வாக இயக்குனர்.

ஏ.வி.டி. போலவே ரோனிபவுலென்க், புரோவிமி, நோவஸ், டெக்கால்ப் ஆகிய பன்னாட்டுக் கால்நடைத் தீவனக் கம்பனி களும், கோழி, இறால் மீன் குஞ்சு பொறிப் பக நிறுவனங்களும் இந்த மஞ்சள் நிறமியின் ஒவ்வொரு சொட்டையும் டாலர்களாக மாற் றிக் கொள்கின்றன. செயற்கையாகத் தயாரிக் கப்படும் நிறமிகளால் மனிதனுக்குப் பல ஆரோக்கிய கேடுகள் விளைவதால் அமெ ரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் செண்டுமல்லி, மிளகாய் போன்ற இயற்கை மூலப் பொருட்களிலிருந்து பி ரித்தெடுக்கப்படும் இவ் வகை நிறமிகள் அதிக மாக பயன்படுத்தப்படு கிறது.

இதைப் போலவே வெணிலா / சாறு அவரைக்காய் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வகை காயிலிருந்து எடுக்கப்படுகிறது. வெணிலா பயிர் உலக அளவில் மடகாஸ்கர், கேமரூன் ஆகிய நாடு களிலும், இந்தோனேசியாவிலும் மட்டுமே விளைகிறது. அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் நாடுகள்தான் வெணிலாவை அதிக அளவில் இறக்குமதி செய்கின்றன. சமீப காலமாக தொடர்ச்சியான நோய் தாக்கு தலாலும், உற்பத்தி செலவு அதிகரிப்பதாலும் வெணிலா உற்பத்தி அங்கு குறைந்துவிட் டது. ஆனால் தேவையோ அதிகரித்து வரு கிறது. அமெரிக்காவில் மட்டும் ஒரு ஆண்டுக்கு 300 டன் தேவைப்படுகிறது. உலகத் தேவை 3000 டன்கள்.

இத்தேவையை ஈடுகட்ட பல பன் னாட்டு நிறுவனங்கள் கிளம்பியுள்ளன. அதி லொரு அமெரிக்க நிறுவனம் ஏ.வி.டி.யுடன் இணைந்து இந்தியாவில் வெணிலா பயிர் விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறது. இப்பயி ருக்குப் பொருத்தமான சூழ்நிலையுள்ள கேரள மாநிலத்தில் முதல் கட்டமாக 5000 ஏக்கர் நிலத்தில் விவசாயிகளுடன் ஒப்பந்த முறையில் இதைப் பயிரிட்டு உள்ளனர். வரும் இரண்டு ஆண்டுகளில் 50,000 ஏக்க ராக இப்பரப்பளவை விரிவுபடுத்த வேண்டு மென்ற வெறியில் மேற்குத் தொடர்ச்சி மலை யடிவாரக் கிராமங்களைக் குறிவைத்துத் தேடி வருகின்றனர்.

துண்டு துக்காணி நிலங்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தலைக்கு மேல் துண்டு போர்த்திக் கொண்ட விவசாயி களிடம் இந்நிறுவனங்களின் முகவர்கள் குறு கிய இலாபத்தைக் காட்டி வலை விரிக்கின்ற னர். செண்டு மல்லி விவசாயத்தில் ஒரு ஏக் கருக்கு சாகுபடி செலவு ரூ. 4,000 போக, நிகர இலாபமாக ரூ. 8,000 முதல் 10,000 வரை பெறலாம் என்று ஆசை காட்டுகின்றனர்.

எதிர்பாராமல் நோய் தாக்கினாலோ, இந் நிறுவனங்கள் மூடப்பட்டாலோ என்ன செய் வது என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. உதாரணமாய், ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு சோயாவைப் பயிரிடச் சொல்லி வாங் குவதற்கு பல நிறுவனங்கள் காத்திருந்தன. இன்று நிலைமையே வேறு. சோயா பயிரிட விதை கிடைப்பதில்லை; உற்பத்தியாளர்களி டம் வரவேற்பில்லை என்று காரணம் காட்டி அந்நிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டன.



தாராளமயம்-உலகமயத்தை எதிர்த்து டெல்லியில் விவசாயிகள் நடத்திய ''டிராக்டர்'' பேரணி.

மேலும், செண்டு மல்லி பூக்கள் வருடத் தில் சில குறிப்பிட்ட பருவங்களில் மட்டுமே கிடைக்க வாய்ப்புள்ளது. இருப்பினும் வரு டத்தின் எல்லா பருவங்களிலும் அறுவடை செய்யும் வகையில் வேளாண் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துகிறது ஏ.வி.டி. போன்ற நிறுவனங்கள். இதனால் சீர்கேட்டை யும் நிலத்தின் தன்மை பற்றி எந்த ஆய்வு மில்லை; அல்லது அவை விவசாயிகளிடம் சொல்லப்படுவதில்லை.

ஏ.வி.டி. நிறுவனத்தைப் போலவே ஸ்பிக் உரக் கம்பெனி நோய் தாக்காத அதிக மகசூல் தரக்கூடிய நாற்றுகளை குளோனிங் முறையில் உற்பத்தி செய்து விற்பதில் ஈடு பட்டு வருகிறது. மகிந்திரா அண்டு மகிந்திரா என்ற டிராக்டர் கம்பெனி திண்டுக்கல் அரு கில் மூலிகைப் பண்ணை விவசாயமும், விவ சாயிகளுக்கு தொழில்நுட்ப தகவல் மற்றும் பயிற்சி மையமும் நிறுவி வருகிறது. சிந்தடிக் இண்டஸ்ட்ரீஸ் அண்ட் கெமிக்கல்ஸ், மற்றும் சிக்மா எஸ்ஸன்ஸ் அண்டு அரோமேட்டிக் (பி) லிமிடெட் ஆகிய காரமடையில் (கோவை மாவட்டம்) உள்ள இரு கம்பெனி களும் மரிக்கொழுந்து பூவை விவசாயி களிடம் ஒப்பந்த முறையில் பயிரிடச்செய்து, இதன் சாறெடுத்து வாசனை திரவியங்கள் தயாரிப்புக்காக ஏற்றுமதி செய்து வரு கின்றன.

அடிப்படை உற்பத்தியான அரிசி, தானிய வகைகள் ஒழிக்கப்பட்டு சில குறிப் பிட்ட தருணங்களில் மட்டுமே இலாபம் தரும் பூ, பழங்கள் போன்ற உலக நாடுகளின் தேவைக்கான உற்பத்தியாக விவசாயம் மாற் றப்பட்டுவிட்டது. விவசாயி தான் விளைவிக் கும் பொருள் யாருக்காக, எங்கு விற்கப்படு கிறது என்பதிலிருந்து எப்படி விதைப்பது, அறுப்பது என்பது வரை எதையும் முழு மையாகத் தெரிந்து கொள்ளாமலேயே, எல்லா உரிமைகளிலிருந்தும் துண்டிக்கப் பட்டு வெறும் ஒப்பந்தக்காரராகி நிற்கிறார். போண்டியான விவசாயிகள் விவசாயத்தை விட்டே ஓடுகின்ற னர். விவசாயத்தின் ஆணிவேரை அறுப் பது நாட்டை அடி மையாக்குவதில் முக் கியமான அம்சமா கும்.

ஏற்கனவே மானிய வெட்டு, இடு பொருட்கள் விலை உயர்வு, ஏற்றத் தாழ்வான சந்தை நிலைமை இவற்றால் உலக வங் கியின் உத்தரவுபடி குற்றுயிரும் குலையு யிருமாய் விவசாயி களை வீழ்த்தியது அரசாங்கம். அதன் கடைசி மூச்சையும் களவாட வந்து விட்டன புன்னாட்டு நிறு வனங்கள்.

ஆனாலும் விவசாயம் சூதாட்டமல்ல. விவசாயிகள் பலியாடுகளும் அல்ல. அன்று தன் நாட்டுக்குத் தேவையான நீலச் சாயம் தயாரிக்க அவுரிச் செடிகளைப் பயிரிடும்படி இந்திய விவ்சாயிகளை கட்டாயப்படுத்தியது கிழக்கிந்திய கம்பெனி. அந்நியக் கம்பெனி யின் கட்டளைக்கு அடிபணிய மறுத்து எழுந் தது அவுரி விவ்சாயிகளின் போராட்டம். இது அவுரி விவசாயிகளின் பாதையில் போராட்டத்துக்கு அணிதிரள வேண்டிய தருணம். உலகமயத்தின் விளைவால் நிலத் தைத் தரிசாகப் போட்டு விட்டு பஞ்சம் பிழைக்க நகரங்களுக்குப் போவதையும் பன் னாட்டு நிறுவனங்களின் நிர்பந்தத்துக்குப் பணிந்து போவதையும் இன்னும் எத்தனை காலம் சகித்துக் கொள்ளப் போகிறோம்?

● மாறன்,
வி.வி.மு..
உத்தமபாளையம் வட்டம்.

★ பெண் உயிரோடு எரிப்பு

★ இளம் பெண்கள் கடத்தல்

★ தொழிலாளர்களின் வீட்டு மனை அபகரிப்பு

# அரசியல் ரவுடிகளின் கொட்டம் திணறுகிறது தமிழகம்

நாட்டையும், மக்களையும் கவ்வியிருக்கும் பேரபாயம் எது? என்று கேட்டால், தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில், தீவிரவாதம்தான் என்று பதில் கூறுகின்றன; அதுவும் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. தூண்டுவிடும் தீவிரவாதம் எனத் தேசபற்றோடு அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றன. ''தீவிரவாதிகள் குண்டு வைக்கிறார்கள்; பொதுச் சொத்தை நாசப்படுத்துகிறார்கள்; நாட்டின் அமைதியை, சட்டம் - ஒழுங்கைக் குலைக்கிறார்கள்'' என்று தேசியக் கட்சி தலைவர்கள் இதற்குக் காரணங்களை அடுக்குகிறார்கள்.

தீவிரவாதத்தைப் பேரபாயமாக்க் குறிப்பிடுவதற்கு இவைதான் காரணங்கள் என்றால், தீவிரவாதத்தை, ரவுடியிசம் கண்டிப்பாகப் பின்னுக்குத் தள்ளிவிடும்; அதுவும், சாதாரண ரவுடித்தனம் இல்லை; அரசியல்வாதிகள், போலீசு அதிகாரிகள், முதலாளிகளால் தூண்டிவிடப்படும், வளர்த்து விடப்படும், ஆதரவும், பாதுகாப்பும் அளிக்கப்படும் ரவுடித்தனம்.

தேசியக் கட்சிகள் பேரபாயம் எனக் குறிப்பிடும் தீவிரவாதம் கூட நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுவதில்லை; ஆனால், ரவுடித்தனம், சிற்றூர் தொடங்கி பெரிய நகரங்கள் வரை, இந்தியாவெங்கும் பார்த்தீனியச் செடி போல் பரவி வளர்ந்திருக்கிறது; மக்களின் உயிர், உடமைக்கும் மட்டுமல்ல, அவர்களின் நடமாட்டத்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது.

● சென்னையில் உள்ள அண்ணா நகர் பகுதியில் இயங்கிவரும் பெண்ணுரிமை இயக்கத்தின் கிளைத் தலைவியாக இருந்தவர் பஞ்சவர்ணம். மூன்று மாதங்களுக்கு முன்பாக, இவர், தனது வீட்டின் முன்பாக நடுத்தெருவில் ரவுடிகளால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டார்.

அச்சம்பவ தினத்தன்று, பஞ்சவர்ணத்திற்கும் அவரது பக்கத்து வீட்டில் வசிக்கும் சாந்திக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டது. சாந்தியின் நெருங்கிய உறவினரான அ.தி.மு.க.வைச் சேர்ந்த குகன்தான் அப்பகுதியின் மாநகராட்சி மன்ற உறுப்பினர். அன்று மாலை பஞ்சவர்ணத்தின் வீட்டிக்குள் புகுந்த நாற்பதுக்கும் மேற்பட்ட ரவுடிகள், ''கவுன்சிலர் குகன் ரெண்டு தட்டு தட்டி விட்டு வரச் சொன்னதாகக் கூறி'', வீட்டுக்குள் இருந்த பெண்களைத் தாறுமாறாகத் தாக்கினர்; பஞ்சவர்ணத்தின் அக்கா மகள்களான ஆண்டாள், ஞான சௌந்திரி, தமிழ்ச் செல்வி மூவரையும் சுற்றி வளைத்து, அவர்களது ஆடைகளை உருவி மானபங்கப்படுத்தினர். தமிழ்ச் செல்வியை நாலைந்து ரவுடிகள் தனியாக இழுத்துக் கொண்டு போய் பலாத்காரம் செய்யவும் முயன்றனர்.

அந்த ரவுடி கும்பலோடு தனியாளாகப் போராடி, தனது பெண்களின் மானத்தைக் காப்பாற்ற முடியாது என உணர்ந்த பஞ்சவர்ணம், தனது மீது மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு, அப்பெண்களை மானபங்கப்படுத்துவதை நிறுத்தாவிட்டால், தான் தீக்குளித்து விடுவதாக மிரட்டினார். ஆனால், ரவுடி கும்பலோ பஞ்சவர்ணத்தின் மீது தீக்குச்சியை உரசிப் போட்டுவிட்டு ஓடிப் போய் விட்டது.



**பஞ்சவர்ணம் ரவுடிகளால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம், பொதுமக்கள் தானுண்டு தன் வேலையுண்டு என இனி வாழ முடியாது என்பதையே காட்டுகிறது.**

பஞ்சவர்ணம் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவரை, இத்தாக்குதலில் சம்பந்தப்பட்ட எந்தவொரு ரவுடியையும் கைது செய்யாத போலீசு, அவர் இறந்த பிறகுதான் ஒப்புக்காக சில ரவுடிகளைக் கைது செய்தது. ஆனாலும், சந்தேகத்துக்குரிய குகன் இது நாள் வரை கைது செய்யப்படவில்லை. அதேசமயம், ''இறந்துபோன பஞ்சவர்ணம் நடத்தை கெட்டவள்; கஞ்சா வியாபாரி'' என உளவுத்துறை போலீசே அவதூறுகளைப் பரப்பிவிட்டு, பஞ்சவர்ணம் கொல்லப்பட்டதை, ஏதோ அதர்மம் அழிக்கப்பட்டதைப் போல காட்டிவிட முயன்றனர்.

● சென்னை மாதவரம் பால் பண்ணைக்கு அருகே அரசுக்குச் சொந்தமான பனை பண்ணை நிறுவனம் இயங்கி வருகிறது. அதில் வேலை பார்க்கும் 120 பெண்களும் அந்நிறுவனத்திற்கு அருகேயுள்ள புறம்போக்கு நிலத்தில் குடிசை போட்டுக் கொண்டு, வசித்து வருகின்றனர். அரசு நிலத்தில் 10 வருடங்களாகக் குடியிருக்கும் ஏழை - எளிய மக்களுக்கு நிலப்பட்டா வழங்கப்படும் என தி.மு.க. அரசு அறிவித்தவுடனேயே, ரவுடிக் கும்பலொன்று, அப்பெண் தொழிலாளர்களின் குடிசையைப் பிய்த்தெறிந்து, அவர்களை அடித்துத் துரத்தி விட்டு, அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டது. அந்த ரவுடிகளுக்கு எம்.எல்.ஏ. ரெங்கநாதனின் ஆசி இருந்ததால், போலீசார் ரவுடிகளுக்கு எதிராகத் தங்களின் சுண்டுவிரலைக் கூட அசைக்கவில்லை. பனை பண்ணைத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக தி.மு.க. எம்.எல்.ஏ. டேவிட் செல்வன் ரெங்கநாதனிடம் சமரசப் பேச்சுவார்த்தை நடத்திய பொழுது, அவர், ''ஆளுக்குச் சரி பாதி'' எனப் பேரம் நடத்தியிருக்கிறார்.

● மதுரையைச் சேர்ந்த மேரியும், சுதாவும், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் செயல் வீரர்கள். ஆறேழு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் இவர்கள் இருவரும் தங்கள் அமைப்பு நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு, வீடு திரும்புவதற்காக இரவு 9.30 மணியளவில் சிம்மக்கல் பேருந்து நிறுத்தத்தில் பேருந்தை எதிர்பார்த்து நின்றிருந்தார்கள். அப்பொழுது ஆட்டோவில் வந்த ரவுடிக் கும்பலொன்று, இவர்கள் இருவரையும் கையைப் பிடித்து இழுத்து வம்பு செய்ததோடு, வலுக்கட்டாயமாக ஆட்டோவில் ஏற்றிக் கடத்த முயற்சியும் செய்தது. இப்பெண்கள் இருவரும் தைரியமாக ரவுடிக் கும்பலோடு மோதிக் கொண்டிருந்த பொழுதே, அங்குமிங்குமாக நின்று கொண்டிருந்த சிலர் ஆட்டோவை நோக்கி வரத் தொடங்கினர். இதையடுத்து அந்த ரவுடிக் கும்பல் இப்பெண்களைக் கடத்தும் முயற்சியைக் கைகழுவிவிட்டு, ஆட்டோவில் ஏறித் தப்பிவிட்டது.

இப்பெண்கள் இருவரும் தங்களின் அமைப்புத் தோழர்கள் உதவியோடு, தங்களைக் கடத்த முயன்ற கும்பலில் இருந்த இருவரைத் தேடிப் பிடித்து போலீசிடம் ஒப்படைத்துள்ளனர். இக்கடத்தல் முயற்சி தொடர்பாக போலீசும் தன் பங்குக்கு மூன்று நபர்களைக் கைது செய்திருந்தாலும், ஆட்டோ ஓட்டுநர் உட்பட முக்கிய குற்றவாளிகளைக் கைது செய்யாமல் இழுத்தடித்தது.

www.padippakam.com

இதற்கு அக்கும்பலின் அரசியல் பின்புலம் தான் காரணம் என்று இந்தப் பெண்கள் கூறியுள்ளனர். மேலும், ''வெளியே தெரியாத எத்தனையோ கடத்தல் முயற்சிகள் மதுரையில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன; தங்களைக் கடத்த முயற்சி நடந்த சில தினங்களுக்கு முன்பாகக் கூட, மதுரையில் உள்ள குருவிக்காரன் சாலை பகுதியில் இரண்டு பெண்களை ஒரு கும்பல் ஆட்டோவில் கடத்த முயற்சி செய்தனர்; அந்தப் பகுதியில் இருந்த கூலித் தொழிலாளர்கள் சிலர் அந்தப் பெண்களைக் காப்பாற்றினர்'' என்று இவர்கள் ரவுடிக் கும்பலின் அட்டகாசத்தைக் குறிப்பிட்டு கூறியிருக்கின்றனர்.

● தஞ்சையைச் சேர்ந்த உதயன் ரவுடிக் கும்பலின் தலைவனாக இருந்தவன் கிருஷ்ணமூர்த்தி. இவன் கடந்த ஆண்டு மார்ச் மாதம் சிறையில் இருந்து வெளியே வந்தவுடனேயே, உதயன் கும்பலுக்கு எதிரான வரதன் கும்பலின் தற்காலிகத் தலைவன் வேளாங்கண்ணியைத் தீர்த்துக் கட்டிவிடச் சபதம் எடுத்துக் கொண்டான்.

சபதத்தை நிறைவேற்ற பட்டாக் கத்திகளோடு ஆட்டோவில் பறந்த இந்தக் கும்பல், நடுவழியில் கணேசன் என்ற பழ வியாபாரியை வழிமறித்து, ''டேய் வேளாங்கண்ணி எங்கிருக்கிறான் தெரியுமா?'' என மிரட்டியது. ''நீங்க சொல்ற பேருல எனக்கு யாரையும் தெரியாதுங்க'' என அவர் சொல்லி முடிக்கும் முன்பே, அவரைப் பட்டாக் கத்தியால் வெட்டி, ஆட்டோவுக்குள் இழுத்துப் போட்டு, அவர் உடலெங்கும் கத்தியால் கீறிச் சித்திரவதை செய்தது. ''தெரியாதுன்னு பதில் சொல்ற இவன் உலகத்துல உயிரோடு இருந்து என்ன பண்ணப் போறான்னு'' சொல்லி, அவரது மண்டையைப் பட்டாக் கத்தியில் வெட்டி, நடுத் தெருவில் வீசியெறிந்து விட்டுச் சென்றனர்.

சம்பந்தமேயில்லாமல் பழ வியாபாரி கணேசன் வெட்டப்பட்டது போலவே, சாமி கும்பிட மாதா கோயிலுக்குச் சென்று கொண்டிருந்த சரணவகுமார்; புதுக்கோட்டை அரியாணப்பட்டியில் இருந்து மீன் குஞ்சு வாங்க தஞ்சைக்கு வந்திருந்த சுந்தரம், அவரது நண்பர்கள்; இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து வேலை தேடி தஞ்சைக்கு வந்திருந்த



தஞ்சை நகரில் ரவுடிக் கும்பலால் வெட்டப்பட்ட சரவணகுமார் (இடது) மற்றும் கணேசன் (கீழே)



ராமகிருஷ்ணன்; வெளியூர்க்காரரான சரவணகுமரன் - இவர்கள் கிருஷ்ணமூர்த்தி கும்பலால், பட்டப்பகலில் அடுத்தடுத்து வெட்டப்பட்டனர். இறுதியில் கிருஷ்ணமூர்த்தி போலீசுடன் நடந்த 'மோதலில்' சுட்டுக் கொல்லப்பட்டான்.

தஞ்சையில் பட்டப் பகலில் ரவுடிகளால் வெட்டப்பட்டவர்களும்; பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்த இடத்தில் இருந்து ரவுடிகளால் அடித்துத் துரத்தப்பட்ட பனை பண்ணைத் தொழிலாளர்களும் தானுண்டு தன் வேலையுண்டு என் வாழ்க்கை நடத்திவயர்கள். ரவுடிகளால் எரித்துக் கொல்லப்பட்ட பஞ்சவர்ணமும், ரவுடிகள் கடத்த முயன்ற மேரியும், சுதாவும் பெண்ணுரிமை இயக்கங்களில் செயலாற்றினாலும், ரவுடிகளை எதிர்த்துப் போராடியதாகத் தெரியவில்லை. ஆனாலும், இவர்கள் அனைவரும் முன்பின் தெரியாத ரவுடிக் கும்பலால் தாக்கப்படுகிறார்கள். இந்தத் தாக்குதல்கள், ''துஷ்டனைக் கண்டால் தூர விலகிப் போய்'' நிம்மதியாய் வாழ்ந்துவிட முடியாது என்பதைத்தான் காட்டுகின்றன.

தி.மு.க.வைச் சேர்ந்த மதுரை துணை மேயர் மிசா பாண்டியன் தனது வீட்டுப்படி ஏறி, தன்னை ஒருவன் (ஜெகதீசன்) எதிர்த்து விட்டான் என்ற ஆத்திரம் தாளாமல் ரவுடிக் கும்பலை ஏவிவிட்டு ஜெகதீசனைக் கொன்றார்; ஊழல் குற்றச்சாட்டில் தண்டிக்கப் பெற்ற ஜெயாவிற்காக, அவரிடம் பதவிப் பிச்சையைப் பெறுவதற்காக மூன்று இளம் மாணவிகளை உயிரோடு கொளுத்தியது அ.தி.மு.க. கும்பல். ஓட்டுக் கட்சி அரசியல் தலைவர்களுக்கும் ரவுடிகளுக்கும் இருக்கும் தொடர்பை, ஓட்டுச் சீட்டு அரசியலே கிரிமினல் மயமாகி வருவதை விளங்கிக் கொள்வதற்கு இதைவிட வேறு எடுத்துக் காட்டுகள் தேவையில்லை.

● திண்டுக்கல் மாவட்டத்தில் காவல்துறை கண்காணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற சோலை முத்தையாவின் மகன் சோலைரவி மதுரையைச் சேர்ந்த அழகர், இளங்கோ, புலிக்குமார் ரவுடிக் கும்பலுக்கு ''காட் ஃபாதராக'' இருந்து வருகிறான். சோலைரவி கோஷ்டிக்கு எதிராகச் செயல்பட்டு வந்த தென்றல் மோகன் ரவுடிக் கும்பலைச் சேர்ந்த வெடிகுண்டு பாஸ்கரன், அய்யனார் என்ற இரு ரவுடிகளை சோலைரவி உயிரோடு எரித்துக் கொன்றதற்கு, சோலை முத்தையா தனது அதிகாரம் அனைத்தையும் பயன்படுத்தி உதவியிருக்கிறார்.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள தேவகோட்டையில் தி.மு.க. இளைஞரணித் தலைவர் ரூசோவும், அந்நகரின் பா.ஜ.க. துணைத் தலைவர் கருப்புக் குழுக்களின் தந்தை பட்டுக் குருக்களும் வெட்டிக் கொல்லப்பட்டதன் பின்னும்; அந்நகரில் நடந்து வரும் கட்டப் பஞ்சாயத்து, சீட்டிங் போன்ற சமூக விரோதத் தொழில்களுக்குப் பாதுகாப்பு தருவதும் ஒரு போலீசு அதிகாரிதான் என முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம் கூறியிருக்கிறார். பொது மக்களால் நடத்தப் பெறும் தேவகோட்டை நகரப் பாதுகாப்புக் குழு, பட்டுக் குருக்கள் கொலை வழக்கை டி.எஸ்.பி. ரெங்கசாமியும், எஸ்.பி. சுந்தரமும் விசாரிக்கக் கூடாது எனத் தீர்மானம் இயற்றியிருக்கிறது.

தீவிரவாதிகளை இராணுவத்தை ஏவிவிட்டு ஒடுக்க வேண்டும் எனக் கூறும் ஓட்டுக் கட்சி தலைவர்களும் அதிகாரிகளும் தான் இப்படி ரவுடிக் கும்பலோடு கூடிக் குலாவிக் கொண்டு திரிகிறார்கள். இதனால் தான் ரவுடிக் கும்பலால் பட்டப் பகலிலேயே ஒரு பெண்ணை எரித்துக் கொல்ல முடிகிறது; தெருவில் நடந்து போவோரை வெட்டிச் சாய்க்க முடிகிறது; பெண்களின் கையைப் பிடித்து இழுத்துக் கடத்திச் செல்ல முடிகிறது. இந்த வீரிய ஓட்டு இரகச்சேர்க்கையால் ரவுடிகளின் முக விலாசமும், வாழ்க்கை முறையும், ரவுடித்தனத்தின் வீச்சும் அடியோடு மாறி விட்டது.

சென்னையைச் சேர்ந்த முன்னாள் ரவுடி எரணாவூர் நாராயணன், இன்று த.மா.கா.வில் முக்கிய புள்ளி; தொழில் அதிபர். கஞ்சா, கள்ளச் சாராய வியாபாரியான சேத்துப்பட்டு தங்கையா, புரட்சி பாரதம் கட்சியின் தொழிற்சங்கத் தலைவர். சிலை திருட்டில் கைது செய்யப்பட்டு, கைவிலங்கோடு ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட நரேந்திரன், இன்று செங்கல்பட்டு நகர தி.மு.க. செயலாளர். ஜெயாவுக்கு கட்-அவுட் வைத்த அயோத்தி குப்பம் தாதா வீரமணி, இன்று ''வீரமணியார்'' ஆகிவிட்டார். தஞ்சையைச் சேர்ந்த ரவுடி கிருஷ்ணமூர்த்தியும், சேலத்தைச் சேர்ந்த முரளி, குணா கோஷ்டிகளைச் சேர்ந்த ரவுடிகளும் சிறையில் இருந்து வெளியில் வந்தபொழுது, மாலை மரியாதையோடு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். சேலம் ரவுடி முரளியின் தண்ணி பார்ட்டி ஜோடியாக இருந்தவர் சேலம் நகர போலீசு உதவி ஆணையர் வீரமணி. ரவுடித்தனமும், சமூக விரோதச் செயல்களும் முன்பு போல ஒளிந்து மறைந்து இரகசியமாகச் செய்யக் கூடியதாகவோ, வெளியே சொல்லுவதற்கு வெட்கப்படக் கூடியதாகவோ இல்லை. மாறாக, ரவுடிக் கும்பலின் தலைவனை, ''அண்ணன்'', ''வள்ளல்'', ''தொழிலதிபர்'' என அடைமொழி

www.padippakam.com

போட்டு அழைக்கும் அளவிற்கு சமூக அந்தஸ்து மிக்கதாய் ரவுடித்தனம் மாறிவிட்டது.

ரவுடித்தனத்தின் வீச்சும் கஞ்சா, கள்ளச் சாராயம், போதை மருந்து விற்பனை, கூலிக்குக் கொலை செய்வது என்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. உள்ளூர்ப் பொருளாதாரத்தை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தும்படி வளர்ந்து நிற்கிறது. பல்வேறு குழுக்களாக கிட்டதட்ட 80 ரவுடிகள் அட்டகாசம் பண்ணித் திரியும் தஞ்சையில், ''வடக்கு வாசல், கீழ வாசல், பர்மா பஜார், கரந்தை போன்ற இடங்களில் ரவுடிகள் ராஜாங்கம்தான் நடந்து கொண்டிருப்பதாக'' அந்நகரப் பொதுமக்கள் கூறுகின்றனர். சேலத்தில் மாநகராட்சி மிதி வண்டி நிலையங்கள், நடைபாதைக் கடைகள், தினசரி காய்கறி, பால், பூ சந்தைகளை, முரளி கோஷ்டிதான் கட்டுப்படுத்தி வருகிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வரை சிதம்பரத்தில் வாண்டையார் சகோதரர்களை அழைக்காமல், எந்தவொரு கடையினையும் திறக்க முடியாது என்ற நிலை இருந்து வந்தது. கடலூர் மாவட்டத்தில் பாக்கெட் தண்ணீர் விற்பனைகூட வாண்டையார் கும்பலின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைதியை ஏற்படுத்த, அரசாங்கம் தீவிரவாதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதைப் போல, நாடெங்கிலுமே சட்டம் - ஒழுங்கை காப்பாற்ற இந்த ரவுடிக் கும்பல்களோடும் அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்துமா? ஏனென்றால், ரவுடிக் கும்பல்களை ஒடுக்கக் கொண்டு வரப்பட்ட குண்டர் சட்டம் தோல்வியடைந்துவிட்டது என்பதோடு, அச்சட்டமே ரவுடிகளின் உயிரைக் காக்கும் கவசமாக மாறிவிட்டது. போலீசார் வலியப் போய் ஒரு ரவுடியைக் குண்டர் சட்டத்தில் தள்ளுகிறார்கள் என்றால், ஒன்று அந்த ரவுடி எதிர் கோஷ்டியால் எந்த நேரத்திலும் கொல்லப்படலாம் என்று போலீசு மோப்பம் பிடித்திருக்கும்; இல்லையென்றால், மக்களின் கோபத்தில் இருந்து அந்த ரவுடியையும், தங்களின் பெயரையும் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் போலீசுக்கு எழுந்திருக்கும். நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பாக வெளியிடப்பட்ட வோரா கமிட்டி அறிக்கை, அரசியல்வாதிகள் - அதிகாரிகள் - கிரிமினல்கள் என்ற இந்தக் கூட்டை உடைக்க வேண்டும் என்றது; அதேசமயம், கிரிமினல்களைப் பெற்றுத் தள்ளும் இந்தப் பொருளாதார அமைப்பு பற்றி, அதன் சொந்தக்காரர்களைப் பற்றி அவ்வறிக்கை வாயைத் திறக்கவேயில்லை.

**வங்கிகள் நடத்தும் கிரெடிட் கார்டு வியாபாரம்; கந்து வட்டிக் கும்பல் நடத்தும் பைனான்ஸ் கம்பெனிகள்; வீட்டு மனை விற்பனை உள்ளிட்ட பல தொழில்களின் ''வளர்ச்-சி''க்கு ரவுடிக் கும்பலின் தயவு தேவைப்படுகிறது. ஆனாலும், முதலாளிகளுக்கும் ரவுடிகளுக்கும் உள்ள தொடர்பு திட்டமிட்டே மறைக்கப்படுகிறது.**

முன்பெல்லாம் முதலாளிகளுக்கு வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்த தொழிலாளர்களை மிரட்டவும், தங்களுக்கு விலை போகாத தொழிற்சங்கத் தலைவர்களைக் கொலை செய்யவும்தான் ரவுடிகள் தேவைப்பட்டனர். ஆனால், இப்பொழுது நிலைமையே வேறு.

வங்கிகள் நடத்தும் கிரெடிட் கார்டு வியாபாரம்; நகரங்களிலும், கிராமங்களிலும் கந்து வட்டிக் கும்பல் நடத்தும் பைனான்ஸ் கம்பெனிகள்; நகர்ப்புறங்களில் தொழிலாளர்கள் வசித்து வரும் குப்பங்களை வளைத்துப் போட்டு வளரும் ''ரியல் எஸ்டேட்'' முதலைகள்; திருட்டு ஒளிப் பேழைகளை ஒழிக்க திரைப்படத் தயாரிப்பாளர்களும், நடிகர்களும் உருவாக்கியிருக்கும் பறக்கும் படைகள் - இப்படி புதிய பொருளாதாரக் கொள்கையின் பின் உருவாக்கியிருக்கும் பல தொழில்களின் வளர்ச்சிக்கு, சட்டவிரோத ரவுடிக் கும்பலின் தயவு தேவைப்படுகிறது.

நகரத்தில் வேலை கிடைக்காமல் விட்டேத்தியாகச் சுற்றித் திரியும் இளைஞர்கள்; கிராமத்தில் விவசாயம் கடனில் மூழ்கிப் போய் நகரத்துக்கு வேலை தேடி வந்து உதிரித் தொழிலாளர்களாய்க் காலந் தள்ளும் விவசாயக் கூலிகள் என்ற இந்த சமூகத் தட்டுதான் ரவுடிக் கும்பலுக்குப் புதுப்புது அடியாட்களைக் கொடுக்கும் அமுத சுரபியாக உள்ளது என ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கிறார்கள். ஆனால், அற்ப சொற்பமாகக் கிடைத்து வரும் நிரந்தர வேலை வாய்ப்பையும் பறித்துவிடத் துடிப்பது எது? இந்திய விவசாயத்தையும் விவசாயிகளின் வாழ்க்கையையும் நாசப்படுத்தி வருவது எந்தப் பொருளாதாரக் கொள்கை? என்பது பற்றி ஆளுங்கும்பல் வாய் திறப்பதில்லை.

எனவே, புதிய பொருளாதாரக் கொள்கையை ஒழித்துக் கட்டாமல், இந்த அரசியல் ரவுடிகளை முற்றிலுமாக ஒழித்துக் கட்டிவிட முடியாது. ஆனால், மக்கள் விரோத இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையை ஒழிக்க வேண்டும் எனக் கூறும் புரட்சியாளர்களைத் தான், அரசாங்கம் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி ஒழிக்கத் துடிக்கிறது.

அதேசமயம், பொது மக்கள், ரவுடித்தனத்தை ஒழிக்க முதலில் புதிய பொருளாதாரக் கொள்கை ஒழியட்டும் எனக் காத்திராமல், அதுவரை ''நமக்கேன் வம்பு'' என ஒதுங்கிப் போகாமல், ''நாணயமான நேர்மையான போலீசு அதிகாரிகளை'' நம்பியிராமல், உள்ளூர்/பகுதி அளவில் ரவுடிகளை எதிர்த்து மக்கள் குழுக்களைக் கட்டியமைக்க வேண்டும். அது ஒன்றுதான், ரவுடிகளின் தாக்குதலில் இருந்து தங்களின் உயிர்/உடமை/உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்ள உதவும் உடனடித் தீர்வாக அமையும்.

● ரஹீம்

**பஞ்சவர்ணத்தை எரித்துக் கொன்ற ரவுடிகளைத் தண்டிக்கக் கோரி சென்னையில் பெண்கள் இயக்கங்கள் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டம்: நம்பிக்கை தரும் தொடக்கம்.**



www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## ஏழைகள் இடிதாங்கிகளா?

இந்தியாவில் வருமானவரி செலுத்துவோரில் முதல் 100 இடத்தில் இருக்கும் பெரும் பணக்காரத் தொழில் குடும்பங்கள் மைய அரசுக்குச் செலுத்த வேண்டிய வருமான வரி பாக்கி 23,199 கோடி ரூபாய்; இந்தியாவில் இயங்கி வரும் பெரிய முதலாளித்துவ நிறுவனங்கள் 31.3.98 தேதிப்படி அரசுக்குச் செலுத்த வேண்டிய வருமான வரி பாக்கி 47,888 கோடி ரூபாய்; 31.3.99 தேதிப்படிச் செலுத்த வேண்டிய நிறுவன (Corporate) வரி பாக்கி 52,617 கோடி ரூபாய்; 31.3.2000 தேதிப்படிச் செலுத்த வேண்டிய சுங்க மற்றும் கலால் வரி பாக்கி 62,392 கோடி ரூபாய். 1,86,096 கோடி ரூபாய் பெறுமான இந்த வரி பாக்கியை நெருக்கிப் பிடித்து வசூலித்தாலே, மக்களின் மீது புதிதாக வரி விதிக்க வேண்டிய தேவையும் எழாது; குஜராத் மக்களின் துயரத்தையும் துடைத்துவிட முடியும். ஆனால், பா.ஜ.க. அரசோ, "இவர்களிடமிருந்து இந்தப் பாக்கியை எப்படி வசூலிப்பது என்று எங்களுக்குத் தெரியவில்லை" என்று பசப்பித் திரிகிறது.

## மருந்தா? மரணமா? - நவீன லாட்டரி குலுக்கல்

தென் அமெரிக்க கண்டத்தின் குவாதிமாலா நாட்டிலுள்ள சான் ஜுவன் டி டயோஸ் பொது மருத்துவமனையில் எய்ட்ஸால் தாக்கப்பட்ட 90 நோயாளிகள் சிகிச்சை பெறக் காத்திருக்கின்றனர். இந்த 90 நோயாளிகளுக்கும் மருந்து அளிக்குமளவிற்கு அந்த மருத்துவமனையிடம் பண வசதி கிடையாது. ஆதலால், அம்மருத்துவமனை நிர்வாகிகள் இந்த 90 நோயாளிகளின் பெயரையும் துண்டுச் சீட்டில் எழுதிக் குலுக்கிப் போட்டு, நான்கு நோயாளிகளின் பெயரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஒரு வருடம் வரை தொடர்ந்து மருந்து வழங்கப்படும். மீதி நோயாளிகள் மரணத்தை எதிர்நோக்கி காத்திருக்க வேண்டியதுதான்!

## முசுலீம் மத அடிப்படைவாதிகளின் "தீண்டாமை"

மேற்கு வங்க மாநிலத் தலைநகர் கல்கத்தா நகரிலுள்ள மௌலானா ஆசாத் கல்லூரியைச் சேர்ந்த பேக்கர் - எலியட் விடுதியில் முசுலீம் மதத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டும்தான் இடம் கொடுக்கப்படும். இவ்விடுதியைக் கூட்டிப் பெருக்கவும், தண்ணீர் எடுத்து வைக்கவும் இந்து மதத்தைச் சேர்ந்த பணியாள் ஒருவர் சமீபத்தில் அவ்விடுதியில் நியமிக்கப்பட்டார். உடனே முசுலீம் மத வெறி பிடித்த மாணவர்கள் ஒன்றுகூடி, "புனித குரான் இருக்கும் எங்கள் அறைகளில் ஒரு இந்து நுழைவதை எப்படி அனுமதிக்க முடியும்? மத ஆசாரப்படி ஐந்து வேளை தொழுகை நடத்தும் நாங்கள் ஒரு இந்துவின் கையில் இருந்து எப்படி தண்ணீர் வாங்கிக் குடிக்க முடியும்?" என்று கூறி, அந்தப் பணியாளரை விடுதியில் இருந்து கல்லூரிக்குத் தூக்கியடிக்கச் செய்து விட்டனர்.

## கருப்புப் பண ஆதிக்கம்

முதலாளிகள், மாஃபியா கும்பல்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோர் சட்டவிரோதமாகச் சுருட்டி வரும் கருப்புப் பணத்தைச் சேமித்து வைக்க, உலகில் சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள தனியார் வங்கிகள்தான் மிகவும் பாதுகாப்பான இடம். இக்கருப்புப் பணம் பற்றி சமீபத்தில் ஐ.நா. நடத்திய ஆய்வில், ஒவ்வொரு ஆண்டும் சுவிட்சர்லாந்து நாட்டு தனியார் வங்கிகளில் கிட்டதட்ட 45 இலட்சம் கோடி ரூபாய் கருப்புப் பணமாகப் பதுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளது. ஜான் வாக்கர் என்ற பொருளாதார அறிஞர் நடத்திய ஆய்வின்படி, ஒவ்வொரு ஆண்டும் 1,28,25,000 கோடி ரூபாய் பெறுமான கருப்புப் பணம் சர்வதேசத் தொழில் வர்த்தகத்தில் புழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

## எங்கே சமூக நீதி? 'இடது முன்னணி' ஆட்சியின் யோக்கியதை

மேற்கு வங்க மாநிலம் - மித்னாபூர் மாவட்டத்திலுள்ள ரெய்னா என்ற கிராமத்தில் நடந்து வந்த சத்துணவுக் கூடம் கடந்த மூன்று மாதங்களாக மூடிக் கிடக்கிறது. அச்சத்துணவுக் கூடத்தின் சமையல்காரியாக தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கிருஷ்ணா என்ற பெண் நியமிக்கப்பட்டதுதான் இந்த மூடுவிழாவுக்குக் காரணம். அக்கிராமத்தைச் சேர்ந்த மேல்சாதி வெறியர்கள், அச்சத்துணவுக் கூடத்தில் உள்ள பாத்திரங்களை கிருஷ்ணா தொட்டுவிட்டதால், அவை தீட்டுப்பட்டு, புனிதம் கெட்டுவிட்டதாகவும், அதனால் அப்பாத்திரங்களுக்குப் பதிலாக வேறு பாத்திரங்களை வாங்க கிருஷ்ணா பணம் கொடுக்க வேண்டும் என்றும் நெருக்குதல் கொடுத்து வருகிறார்கள்.

## கொள்ளை போகும் மக்கள் சொத்து

பாரத அலுமினிய நிறுவனத்தின் (பால்கோ) மூலதன மதிப்பு 704 கோடி ரூபாய் என்றாலும், அந்நிறுவனத்துக்குச் சொந்தமான சொத்துக்கள், அலுமினியத் தகடு விற்பனைச் சந்தையில் அதனின் பங்கு - இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் பால்கோவின் மதிப்பு பல ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டும். கடந்த ஆண்டு பால்கோ ஈட்டிய இலாபம் 110 கோடி ரூபாய். இப்படிபட்ட பொதுத்துறை நிறுவனத்தின் 51 சதவீதப் பங்குகளை வெறும் 551 கோடி ரூபாய்க்கு "ஸ்டெர்லைட்" என்ற தனியார் நிறுவனத்திற்குத் தாரை வளர்த்து விட்டது, பா.ஜ.க. அரசு. 359 கோடி ரூபாய்க்கு விற்க வேண்டிய பங்குகளை, நாங்கள் 551 கோடிக்கு விற்றிருக்கிறோம் என எகத்தாளம் பேசி, தனது மோசடியை மூடிமறைத்துவிடவும் முயலுகிறது.

## பட்டினி வாழ்க்கை - தீர்க்க முடியாத சாபமா?

44 சதவீத இந்தியர்கள் சத்தான உணவுப் பொருட்களை வாங்கி உண்ண முடியாமல் அரைகுறைப் பட்டினியில் காலந்தள்ளுவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. அதே சமயம், அரசினால் சேமிக்கப்படும் உணவுப் பொருட்கள் முறையாகப் பராமரிக்கப்படாததால், ஒவ்வொரு ஆண்டும் 21 கோடி ரூபாய் பெறுமான உணவுப் பொருட்கள் கெட்டுப் போய் குப்பைத் தொட்டியில் கொட்டப்படுகின்றன. மேலும், நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்படும் அரிசி, கோதுமையில் 31 சதவீதம் வெளிச்சந்தைக்குக் கடத்தப்பட்டு, அந்த இலாபத்தை மொத்த வியாபாரிகள் பங்கு போட்டுக் கொள்கின்றனர். கடந்த ஆண்டு 11,672 டன் சர்க்கரையும், 48 கோடி லிட்டர் மண்ணெண்ணெய்யும் ரேஷன் கடைகளில் இருந்து வெளிச் சந்தைக்குக் கடத்தப்பட்டதால், அரசு அடைந்த நட்டம் 84.37 கோடி ரூபாய்.

தமிழக அரசு நடத்திவரும் "எய்ட்ஸ்" நோய்க்கான மருத்துவமனை. குவாதிமாலாவில் நடக்கும் குலுக்கல் இங்கு வர, இன்னும் எத்தனை நாளோ?



Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Anna Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA www.padippakam.com
Regd. No. TN/Chief.PMG- 544/2000

# இது தான் இன்றைய இந்தியா





2001-ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் சிறந்த நடிகர் விருதை, தமிழக அரசு எதைப் பற்றியும் யோசிக்காமல், இந்தப் படத்தில் நாம் பார்க்கும் கூடுதல் துணை போலீசு இயக்குநர் அலெக்சாண்டருக்குக் கொடுத்து விடலாம். அப்படியொரு நெஞ்சைப் பிழியும் சோக நடிப்பை, வீரப்பன் கும்பலைப் பிடிக்க ஒத்துழைப்பு தரக் கோரி கோவை அருகேயுள்ள பூலுவப்பட்டி திருமண மண்டபத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் அலெக்சாண்டர் நடித்துக் காட்டியிருக்கிறார்.

ஒலி வாங்கியின் முன் பேச வந்த அவர், பேச்சை ஆரம்பிக்கவே முடியாமல் திணறியிருக்கிறார். மண்டபத்தில் கூடியிருந்த கூட்டம், "என்ன பேசலாம் என யோசிக்கிறாரோ?" என அவரைக் கூர்ந்து பார்த்தபொழுது, அவர் கண்கள் கலங்கி, அவரது கன்னங்களில் கண்ணீர் ஆறாய்ப் பெருகியிருக்கிறது. "வீரப்பனைப் பிடிக்க அதிரடிப்படையினர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்; அவர்கள் எல்லாம் சின்னப் பசங்க. ஆனாலும் வீரத்துடனும் பொறுமையுடனும் இருக்கிறார்கள். எவ்வளவுதான் வேலை செஞ்சாலும் உங்களின் (ஆதிவாசிகளின்) ஒத்துழைப்பு இல்லாமல் எதுவும் முடியாது. நீங்களா பார்த்து உதவி செய்யுங்க" என்று கண்ணீர் விட்டபடியே, நா தழுதழுக்கப் பேசி, உதவி கேட்டிருக்கிறார். அதிரடிப் படை போலீசாரும் தங்கள் பங்குக்கு, வீரப்பன் கும்பலைச் சேர்ந்தவர்களின் புகைப்படங்கள் அடங்கிய சுவரொட்டிகளைக் கூடியிருந்த ஆதிவாசி மக்களிடம் விநியோகித்து, "எங்களுக்கு உதவுங்கள்" எனக் கோரியிருக்கிறார்கள். சூடு கண்ட பூனையைப் போல, அதிரடிப்படை திருந்திவிட்டதாக இதை எடுத்துக் கொள்ள முடியுமா?

இதோ, இந்தப் படத்தில் இருப்பவர்கள் மேற்கு தொடர்ச்சி மலையின் உச்சியில், கேரள எல்லைக்குள் இருக்கும் அணைக்காடு கிராமத்தைச் சேர்ந்த பழங்குடியின மக்கள். அமாவாசை நாளன்று வீரப்பன் இந்தக் கிராமத்திற்கு சாமி கும்பிட வந்திருக்கலாம் எனச் சந்தேகப்பட்ட அதிரடிப்படை, பொங்கல் கழிந்த மறுவாரம் இந்தக் கிராமத்திற்குள் புகுந்து மிருகத்தனமான தாக்குதலை நடத்தியிருக்கிறது.

"எங்கடா வீரப்பன் குடுத்த பணம்?" "வீரப்பன் எங்கடா போனான்?" எனக் கேட்டுக் கொண்டே அப்பழங்குடியின மக்களை அடித்து உதைத்த அதிரடிப்படை, அவர்கள் சேமித்து வைத்திருந்த அரிசி, பருப்பையும், மாடு விற்று வைத்திருந்த ஆயிரக்கணக்கான ரூபாயையும் சுருட்டிக் கொண்டுவிட்டது. குழந்தைகள் தின்பதற்காக வீட்டில் இருந்த பிஸ்கட்டுகளையும், மிட்டாயையும் கூட அதிரடிப்படை விட்டு வைக்கவில்லை.

முருகன், சின்ன சோலை, ராமன், ரங்கன் ஆகிய நால்வரைப் பிடித்துப் போன அதிரடிப்படை, அவர்களைத் தமிழ்நாடு வனப் பகுதியில் வைத்துப் பிடித்ததாகவும், அவர்களிடமிருந்து எழுபத்தியிரண்டாயிரம் ரூபாயையும், வீரப்பனுக்குக் கொண்டு போன அரிசி, பருப்பையும் கைப்பற்றியதாகவும் பொய் வழக்கு போட்டு, "வீரப்பன் கூட்டாளிகள்" என்ற முத்திரை குத்தி உள்ளே தள்ளி விட்டது. பாலியல் வன்முறைத் தாக்குதல் நடக்கவில்லையென்றாலும், அதிரடிப் படையின் இந்த அட்டூழியத்தை, "இரண்டாம் சின்னாம்பதி" என்றே பத்திரிகைகள் எழுதுகின்றன.

ஒருபுறம் கண்ணீர்; மறுபுறம் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல். ஒருபுறம், ஆதிவாசி மக்களின் அறியாமையைப் பயன்படுத்திக் கொள்ளும் நயவஞ்சக வேடம்; மறுபுறம், வீரப்பன் வேட்டையில் மீண்டும், மீண்டும் அவர்களைப் பலியிடும் அதிகாரவர்க்க அயோக்கியத்தனம். இந்த 'அநீதி' இனியுமா தொடர வேண்டும்?





